பக்கங்கள்: 25 விலை : 30/-

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 தை 24 ஞாயிற்றுக்கிழமை 06.02.2022 கதிர் 93

**இனி இது ரகசியம் அல்ல!**

ஆரவாரமாக வடக்கில் ஒலித்த மீனவர் போராட்ட விவகாரம் அமசடக்காக அடங்கியிருக்கின்றது. ஆனால், அது முடிவுக்கு வந்துவிட்டது, தற்காலிக அமைதி நிலவுகின்றது என்றெல்லாம் இல்லை. அது, உண்மையில் நீறு பூத்த நெருப்பாகக் கனன்று ☞2

# மூவினத்தவர்களையும் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றார் கோட்டாபய!

## அரசை வீட்டுக்கு அனுப்புவதே மக்களின் விருப்பம் என்று எதிரணித் தலைவர்கள் கூட்டாகத் தெரிவிப்பு

**நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமிழ், முஸ்லிம் மக்களை மட்டுமன்றித் தன்னை அரியணை ஏற்றிய சிங்கள மக்களையும் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றார். இம்முறை அவர் ஆற்றிய சுதந்திர தின உரை இதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.**

**- இவ்வாறு எதிரணிகளின் தலைவர்களான சஜித் பிரேமதாஸ (ஐக்கிய மக்கள் சக்தி), இரா.சம்பந்தன் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு), அநுரகுமார திஸாநாயக்க (ஜே.வி.பி.) ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.** ☞2







## இருப்பதை இழக்காமல் முன்னோக்கி நகர்வோம்

### மனோ எம்.பி. தெரிவிப்பு



அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நாம் முழுமையான தீர்வாக ஏற்கவில்லை. அதனை வைத்துக்கொண்டு முன்னோக்கிநகரவேண்டும். மாறாக, இருப்பதையும் இழக்கும் விதத்தில் செயற்படக்கூடாது. ☞2

## பூஸ்டர் பெறாதவர்கள் ஏப்ரல் 30இற்குப் பின் பொது இடங்களுக்குச் செல்வதற்குத் தடை!

### விசேட வர்த்தமானி அறிவித்தலை விடுத்தார் சுகாதார அமைச்சர்

கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசிகளை முழுமையாக ஏற்றியவர்கள் (மூன்று அலகுகள்) மட்டுமே பொது இடங்களுக்குள் செல்வதற்கு அனுமதிக்கும் வகையிலான விசேட வர்த்தமானி அறிவித்தலை சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் 30ஆம் திகதி முதல் இந்த நடைமுறை அமுலுக்குவரும்என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த ☞2



## வடக்கில் கரை ஒதுங்கிய ஒரு சடலத்தில் சிவலிங்கம் பச்சை குற்றப்பட்டிருக்கிறது

### அதை வைத்து அடையாளம் காண முயற்சி



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,பெப்.06

வடமராட்சிக் கடலில் நவம்பர் மாதம் கரை ஒதுங்கிய உடல்களில் ஒன்றின் வலது கையில் சிவலிங்கம் பச்சை குற்றப்பட்டிருப்பதாகத் தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

வடமராட்சி மற்றும் தீவகம் பகுதிகளில் உள்ள கடற்கரைப் பிரதேசங்களில் கடந்த நவம்பர் மாதம் 27 ஆம் ☞2

## சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்துவதில் பிரச்சினை எதுவுமில்லை

### முன்வைக்கப்படும் நிபந்தனைகளே முக்கியம் என்கிறார் அமைச்சர் விமல்

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசு பேச்சு நடத்துவது ☞2

## பகிடிவதையை ஒருபோதும் இங்கு அனுமதிக்க முடியாது

### இராஜாங்க அமைச்சரின் மகனாக இருந்தாலும் சட்டம் தன் கடமையைச் செய்யும் என்கிறார் நாமல்



'ஒரே நாடு - ஒரே சட்டம்' நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அது முன்னாள் இராஜாங்க அமைச்சர் அருந்திகவின் மகனுக்கும் பொருந்தும் என்று அமைச்சர் ☞2

## இலங்கை பின்நோக்கிப் பயணித்தமைக்கு இரு கட்சிகளும் பொறுப்புக்கூற வேண்டும்

### பீல்ட் மார்ஷல் பொன்சேகா எம்.பி. குற்றச்சாட்டு

சுதந்திரமடைந்த பின்னர் இந்நாடு பின்நோக்கிப் பயணித்தமைக்கு நாட்டை மாறி, மாறி ஆண்ட இரு பிரதான கட்சிகளும் பொறுப்புக்கூற வேண்டும்.

- இவ்வாறு பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாடு சுதந்திரமடைந்த ☞2






## அரசியல்வாதிகளின் விருப்பத்துக்கிணங்க சிறைக் கைதிகளை விடுவிக்கவே முடியாது

### ரஞ்சன் விவகாரம் தொடர்பில் மஹிந்த கருத்து



அரசியல்வாதிகளின்தேவைக்கேற்ப சிறைத்தண்டனை அனுபவித்துவரும் கைதிகளை விடுவிக்க முடியாது. அதற்கான நடைமுறைகள் உள்ளன.

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கையின் 74ஆவது சுதந்திர தினத்தன்று ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் ☞2

## இனி இது .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு இருக்கின்றது. அவ்வளவுதான். எச்சமயத்திலும் அது சூடாகி, மீண்டும் பற்றிப் பிடித்து, விளாசி எரியலாம். அதுதான் நிலைவரம்.

இனிமேல் அத்துமீறும் இந்திய மீனவர்களை அவர்களது கலங்களுடன் மடக்கிக்கைதுசெய்வோம்என்று எழுத்துமூலம் வாக்குறுதி தாருங்கள் என அடம்பிடித்தனர் நம் மீனவர்கள்.

"அப்படித் தர முடியாது. என் வாய் வார்த்தைதான் வாக்குறுதி." - என்றார் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

சரி, பிழை வேறு. பெரும்பாலும், தான் எடுத்த நிலைப்பாட்டில் மாறாமல் ஒரே மட்டத்தைப் பிரதிபலித்து வருபவர் அவர். அவரிடம் எழுத்தில் வாக்குறுதி தந்தால் தான் ஏற்போம் என்று கேட்டமையும், கேட்ட முறைமையும், கொஞ்சம் தூக்கல் தான். சற்று அமர்த்தி - அமுக்கி - வாசித்து இருக்கலாம்.

சரி, முரண்டுபிடித்தமையால்முரண்பாடு வந்துவிட்டது. அதற்காக அந்த இடத்திலிருந்துபுறப்பட்டுவந்துவிட்டார் அமைச்சர் டக்ளஸ். அதனால் மீனவர் பிரச்சினையில் இருந்து அவர் ஒதுங்கிவிட முடியாது; ஒதுங்கவும் மாட்டார்.

அப்படியாயின், இனி என்ன நடக்கப் போகின்றது?

இந்த விவகாரத்தை உயர் நீதிமன்றுக்குக் கொண்டு போகப் போகிறேன் என்று அறிவித்திருக்கிறார் சுமந்திரன் எம்.பி.

இலங்கைக் கடற் பிராந்தியத்துக்குள் அத்துமீறி நுழையும் இந்தியக் கடல் தொழிலாளர்களைக் கைதுசெய்யுமாறு கடற்படையினருக்கு உத்தரவிடக் கோரியும், 2017 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இழுவை மடி தடைச்சட்டம் மற்றும் வெளிநாட்டுப் படகுகள் தொடர்பாகக் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தும் 2018 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கச் சட்டம் ஆகிய- வற்றை நடைமுறைப்படுத்தக் கோரியும், உயர் நீதிமன்றத்தில் முறையிட சுமந்திரன் தயாராகிறார். பெரும்பாலும் கடற்படைத்தளபதி, வடக்கு கடற்படைத்தளபதி, கடற்றொழில் அமைச்சர் போன்றோரை எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிட்டு, அடிப்படை உரிமை மீறல் மனுவை அவர் தாக்கல் செய்யலாம்.

மனுவை உயர்நீதிமன்றம் பெரும்பாலும் விசாரணைக்கு ஏற்கும். எதிர்மனுதாரர்களும் மனுதாரரின் கோரிக்கையைப் பெரும்பாலும் எதிர்க்கவே மாட்டார்கள். சட்டத்தில் இருப்பதுதானே கோரப்படுகின்றது? அதை எப்படி மறுப்பது?

ஆகவே, மனுதாரர்களின் கோரிக்கையை அரசுத் தரப்பு ஏற்கும். அதுதான் பெரும்பாலும் முடிவாக இருக்கும். அதாவது, சட்டத்தில் குறிப்பிடப்பட்டபடி, நாம் அத்துமீறும் மீனவர்களைக் கைதுசெய்வோம், படகுகளைப் பிடிப்போம், இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரங்களைப் பாழ்படுத்துவோர் மீது நாம் நடவடிக்கை எடுப்போம் என்றெல்லாம் நீதிமன்றத்தில் உறுதி அளிக்கப்படும்.

அதாவது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வடக்கு மீனவர்கள் எழுத்தில் உறுதிமொழி தாருங்கள் என்று கேட்ட விடயத்தில், அவரையும் (அமைச்சர் டக்ளஸையும் உள்ளடக்கி) உயர்தளபதிகள், அதிகாரிகளையும் சேர்த்து, எழுத்து மூலம் உத்தரவாதம் ஒன்று நீதிமன்றுக்கு வழங்கப்படலாம். அதாவது சுமந்திரனின் சட்ட நடவடிக்கை மூலம் அரசுத் தரப்பிடம் நீதிமன்றத்தில் ஓர் எழுத்து மூல உறுதிப்பாட்டைப் பெறமுடியும். அவ்வளவுதான்.

மீனவரின் கூட்டத்திலே எழுத்து மூலம் உத்தரவாதம் தர மறுத்தோர் இப்போது நீதிமன்றத்தில் அதைத் தந்துள்ளனர் என்று சம்பந்தப்பட்டவர்கள் அகமகிழலாம். அதற்கு மேல் என்ன நடந்தது தான் கேள்வி.

அதன் பின்னர், எழுத்து மூலம் உயர் நீதிமன்றுக்கு உத்தரவாதம் கொடுத்திருக்கும் காரணத்தால் அந்த விடயத்தில் கடற்படை தன்பாட்டில் ஒழுங்காக நடவடிக்கை எடுக்கும் என்று நாம் நினைத்தால் அது பகல் கனவாகத்தான் முடியும்.

என்னென்ன காரணங்களுக்காக இவ்விடயத்தில் சட்டம் இப்போது முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றதோ, அவை இனி மேலும் கூடத் தொடரும். அவ்வளவு தான்.

நீதிமன்றத்தில் - அதுவும் உயர்நீதிமன்றத்தில் - கடற்படையும், கடற்றொழில் அமைச்சும், இலங்கை அரசுத் தரப்பும் வாக்குறுதி அல்லது உத்தரவாதம் அளித்திருக்கின்றமையால், அத்துமீறும் ஒவ்வொரு இந்திய மீனவரின் கலங்களும் சட்டப்படி கையாளப்படும் என்று நாம் நினைத்தால் அது பகல் கனவாகத் தான் இருக்கும்.

இன்னொரு விடயம். இப்படி மீனவர்கள் விவகாரத்தில் சட்டத்திலிருப்பதை அரசும் ஆட்சியாளர்களும் படைத்தரப்பும் நடைமுறைப்படுத்தவில்லை என்பதைக் குறிப்பிட்டு உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்து, நிவாரணம் பெற்றுக் கொள்ளலாம் என்றால் -

நாட்டின் மீயுயர் சட்டமான அரசமைப்பில், அதன் மீதான 13 ஆவது திருத்தம் மூலம் சட்டமாக்கப்பட்ட அதிகாரப்பகிர்வு போன்ற விடயங்களை நடைமுறைப் படுத்துமாறு கோரி ஏன் வழக்குத் தாக்கல் செய்து நிவாரணம் பெறமுடியாது என்ற கேள்வி எழுகின்றது.

13 ஆவது திருத்தத்தின் படி மாகாண சபைகளுக்குக் காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் எல்லாம் உண்டு. ஆனால், அரசமைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தம் நடைமுறைக்கு வந்து 34 வருடங்கள் ஆகி விட்டன. எனினும் அந்த அதிகாரங்கள் மாகாணங்களுக்குப் பகிரப்படவேயில்லை.

மீனவர் விடயத்தில் சட்டத்திலிருப்பதை நடைமுறைக்குக் கொண்டு வரவில்லை என்பதற்காக நீதிமன்றத்துக்குப் போகலாம் என்றால், 13 ஆவது திருத்தத்தில் உள்ள அரசமைப்பு ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்தக் கோரி ஏன் உயர்நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கக் கூடாது? 34 வருடங்கள் அது செய்யப்படாமல் இருப்பது ஏன்?

சுமந்திரன்தான் அதற்கு மக்களுக்குச் சரியான விளக்கம் கொடுக்கக் கூடியவர். அவர் விளக்கம் தந்தால் வாசகர்களுடன் பகிர்வேன்.

- மின்னல் -

## மூவினத்தவர்களையும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு சுதந்திரச் சதுக்கத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 74ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆற்றிய உரை தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததவை வருமாறு:-

அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த கோட்டாபய தலைமையிலான அரசு நாட்டை நாசமாக்கிக் கொண்டிருக்கின்றது.

பொய்யான வாக்குறுதிகளை வழங்கி அரியணை ஏறிய ஜனாதிபதி கோட்டாபய, இன்று தப்பிப்பிழைப்பதற்காக மூவின மக்களையும் ஏமாற்றும் விதத்தில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்.

மூவின மக்களையும் பிரித்து அதில் சுயலாப அரசியல் தேடுவதிலேயே இந்த அரசு குறியாகவுள்ளது.

ஜனாதிபதியின் சுதந்திர தின உரை வேடிக்கையாக உள்ளது. மக்களுக்கான உரிமைகளைத் தட்டிப் பறித்துவிட்டு அவர்களைப் பொறுப்புடன் நடக்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறுகின்றார். இது எந்த வகையில் நியாயமானது?

அடிமை வாழ்க்கை வாழ இந்த நாட்டு மக்கள் எவரும் தயாராக இல்லை. இந்த அரசை வீட்டுக்கு அனுப்புவதே மக்களின் விருப்பம். அதை மக்கள் விரைவில் செய்வார்கள் - என்றனர்.

## இருப்பதை இழக்காமல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஜனநாயக மக்கள் முன்னணி ஆகியவற்றின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

நாவலப்பிட்டிய பகுதியில் நேற்று இடம்பெற்ற ஆன்மீக நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேகண் டவாறு கூறினார்.

இது தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நாட்டிலே விடயம் புரியாத நபர்கள் பலர் தெற்கிலும் உள்ளனர். வடக்கிலும் வாழ்கின்றனர். தெற்கில் உள்ள நபர்களில் ஜனாதிபதி முதன்மையானவர். அவரின் சுதந்திர தின உரையை செவிமடுக்கையில் சிரிப்புத்தான் வந்தது. வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு, முதலீடுகளை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றார். ஆனால், வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் வேறு நாடுகளுக்குச் சென்றுவிட்டனர். புலம்பெயர் தமிழர்களிடம் பணம் உள்ளது. கோட்டா ஆட்சியில் அவர்கள் இங்கு வருவார்களா? வரமாட்டார்கள்.

எனவே, சஜித் தலைமையில் அமையும் ஆட்சியில் நாம் நிச்சயம் வெளிநாட்டு முதலீடுகளை உள்ளீர்ப்போம்.

இலங்கை பல்லின மக்கள் வாழும் நாடு. அனைவரும் ஒன்றிணைந்தால் தான் நாடு முழுமைப்படும். அதுவரைக்கும் இந்த நாடு உருப்படாது. நாம் அனைவரும் இலங்கையர்கள். அதற்கு பிறகு தான் இனம் எல்லாம் வரும்.

13ஆவது திருத்தச் சட்டத்தை நாம் முழுத் தீர்வாக ஏற்கவில்லை. அதேபோல சிங்கள மக்களின் ஆசியின்றி தீர்வைப் பெறமுடியாது. இது எனக்கு மட்டுமல்ல அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்டவர்களுக்கும் தெரியும். எனவே, இருப்பதையும் இழக்காமல், முன்னோக்கி செல்வோம் என்பதை விடயம் புரியாதவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். - என்றார்.

## பூஸ்டர் பெறாதவர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறையை மீறுபவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

'பொது இடங்கள்' தொடர்பான அறிவித்தல் பிறிதொரு நாளில் அறிவிக்கப்படவுள்ளது.

அதேவேளை , நாட்டில் பல பகுதிகளிலும் தற்போது பூஸ்டர் தடுப்பூசி (மூன்றாவது தடுப்பூசி) ஏற்றப்பட்டு வருகின்றது. எனவே, இதுவரை அதனைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் விரைவில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## வடக்கில் கரை ஒதுங்கிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி முதல் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் ஆறு சடலங்கள் கரை ஒதுங்கியிருந்தன.

இவ்வாறு கரை ஒதுங்கிய உடல்கள் இரு மாதங்களாக வைத்தியசாலைகளின் பிரேத அறைகளில் வைக்கப்பட்டிருந்த நிலையில் 4 சடலங்களில் பருத்தித்துறை நீதிமன்ற அனுமதியின் பெயரில் தற்போது பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு மேற்கொண்ட பிரேத பரிசோதனையில் உயிரிழந்த அனைவரும் 40 தொடக்கம் 50 வயதுவரை இருக்கலாம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. அதே நேரம் ஒருவரது இடது கையில் சிவலிங்கம் பச்சை குற்றப்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது.

இதன் மூலம் உரியவரை அடையாளம் காண முடியுமா என்பதற்காக பொலிஸாரிடம் உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இறந்தவர்கள் பற்றிய மேலதிக பரிசோதனைகளுக்காக சடலங்களின் மாதிரி எலும்புகளும் ஆய்வுக்குப் பெறப்பட்டுள்ளன.

## சர்வதேச நாணய நிதி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தப்படும் என நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ள விடயம் தொடர்பில் ஊடகங்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாணய நிதியமாக இருக்கலாம். சர்வதேச அமைப்புகளாக இருக்கலாம். அவற்றுடன் பேச்சு நடத்துவதில் எவ்வித பிரச்சினையும் கிடையாது. ஆனால், மேற்படி தரப்புகளால் முன்வைக்கப்படும் நிபந்தனைகளே முக்கியம். அவை நாட்டுக்கு எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பது பற்றி ஆராய வேண்டும்.

இறுதியில் நாட்டுக்குப் பாதிப்பு ஏற்படாத தேர்வையே நாம் நாட வேண்டும் - என்றார்.

## பகிடிவதையை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ராகம மருத்துவ பீட மாணவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோவின் மகனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமலிருப்பதற்கான காரணங்கள் எதுவும் இல்லை எனக் குறிப்பிட்ட நாமல் ராஜபக்ஷ, ஜனாதிபதியிடமிருந்து மக்கள் எதிர்பார்க்கும் 'ஒரே நாடு - ஒரே சட்டம்' தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றது எனவும் கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அருந்திக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். ஏதோ நடந்துள்ளது. அவருடைய மகன் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஆகவே, நாங்கள் சட்டத்தை நடைமுறைப்படுத்துவோம்.

சட்டத்தை மறைக்க வேண்டிய அவசியமில்லை. இராஜாங்க அமைச்சரின் மகனாக இருந்தாலும் சரி, சாதாரண பிரஜையின் மகனாகயிருந்தாலும் சரி அவருக்கு எதிராக ஒரே நாடு ஒரே சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். மக்கள் இதனையே ஜனாதிபதியிடமிருந்து எதிர்பார்க்கின்றனர். தவறு செய்திருந்தால் அவர் தண்டிக்கப்படுவார்.

அப்பாவி என்றால் நீதிமன்றில் அவர் தன்னை நிரூபிப்பதற்கான வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும். இந்தச் சம்பவத்துக்குப் பகிடிவதையே காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. பகிடிவதைக்கு எதிராகக் கடும் நடவடிக்கையை எடுக்க வேண்டும். எங்களால் ஒருபோதும் பகிடிவதையை அனுமதிக்க முடியாது - என்றார்.

## இலங்கை பின்நோக்கிப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது இலங்கை சிறந்த மட்டத்தில் இருந்தது. அதன்பின்னரும் ரூபாவின் பெறுமதி பாதுகாக்கப்பட்டது. இன்று எமது நாட்டு நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சி கண்டுள்ளது. கறுப்பு சந்தையில் 250 ரூபாவுக்கு டொலரை வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, மக்களும் அரசியல்வாதிகளை முழுமையாக நம்பாமல், சிந்தித்து, தகுதியானவர்களைத் தெரிவு செய்ய வேண்டும். அப்போதுதான் நாடு மேம்படும். இங்கு ஆட்சிகள் மாறும்போது கொள்கைகளும் மாறுகின்றன. இந்நிலைமை மாறவேண்டும். நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான உறுதியான கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும் - என்றார்.

## அரசியல்வாதிகளின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்படாமை தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ரஞ்சன் ராமநாயக்க நல்லவராக இருக்கலாம். ஆனால், அவர் இழைத்த குற்றத்துக்காகச் சட்டம் அவரைத் தண்டித்துள்ளது. சஜித் அணியினரின் விருப்பத்துக்கிணங்க அவரைப் பொதுமன்னிப்பில் விடுவிக்க முடியாது. அதற்கான நடைமுறைகள் உள்ளன. - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622



# 500 அரிசி கொள்கலன்கள் உட்பட 1,800 கொள்கலன்கள் கொழும்பில்!

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அடங்கிய சுமார் 1,800 கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ளன.

அவற்றில் சுமார் 500 அரிசி கொள்கலன்கள் அடங்கியுள்ளன என அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் பருப்பு, சீனி, உருளைக்கிழங்கு, வெங்காயம் உள்ளிட்ட மேலும் பல உணவுப் பொருள்கள் அடங்கிய கொள்கலன்களும் தேங்கியுள்ளன என அந்தச் சங்கத்தினர் குறிப்பிட்டுள்ளனர். மத்திய வங்கி தலையிட்டு குறித்த கொள் கலன்களை விடுவிக்கநடவடிக்கை எடுக்க வேண்டும் என அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

# பெண்ணின் சடலம் குளத்தில் மிதந்தது

நிகவெரட்டிய, கலபிட்டியகம குளத்தில் மிதந்த நிலையில் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக நிக்கவெரட்டிய தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பெண் கலபிட்டியகம பிரதேசத்தை சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான தம்மிக்க பத்திரன (வயது – 59) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குளத்துக்கு மீன்பிடிக்க சென்ற மீனவர்கள், நீரில் பெண்ணொருவரின் சடலம் மிதப்பதைக் கண்டு அதுபற்றி பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

மேற்படி தகவலின் அடிப்படையில் சம்பவ இடதடதுக்கு சென்ற பொலிஸாரும், பொலிஸ் தடயவியல் பிரிவினரும் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

பெண்ணின் மரணத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை எனத் தெரிவித்துள்ள பொலிஸார், இதுதொடர்பில் விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் குறிப்பிட்டனர்.

மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக நிக்கவெரட்டிய ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நிகவெரட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 8 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்!

கடந்த பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த பின்னரும் கொழும்பு மாதிவெல நாடாளுமன்ற உறுப்பினர்களின் குடியிருப்பில் வசித்து வருகின்றனர் எனக் கூறப்படும் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாக நாடாளுமன்றத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தோல்வியடைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு குடியிருப்பில் தங்கியிருக்க வழங்கப்பட்ட கால அவகாசத்தையும் தாண்டி அவர்கள் அங்கு வசித்து வருகின்றனர்.

இதற்கான அபராதத்தை செலுத்தத் தவறிய குற்றத்திற்காக அவர்களுக்கு எதிராக வழக்கு தொடரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அனுமதியின்றி ஒரு நாள் குடியிருப்பில் தங்கினால், 500 ரூபா அபராதம் விதிக்கப்படும். இந்த நாடாளுமன்ற உறுப்பினர் மொத்தமாக சுமார் 10 லட்சம் ரூபாவை அபராதமாகச் செலுத்த வேண்டியுள்ளது.

தோல்வியடைந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மாதிவெல குடியிருப்பில் இருந்து வெளியேறி இருந்தாலும் அவர்கள் அனுமதியின்றி தங்கி இருந்த காலத்துக்கான அபராதத்தை செலுத்தவில்லை.

இந்தத் தொகையை செலுத்துமாறு பல முறை அறிவித்தும், அவர்களை அதனைச் செலுத்தவில்லை எனத் தெரியவருகிறது.

அபராதத்தை செலுத்தத் தவறிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள். தேர்தலில் தோல்வியடையும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் நடக்கும் தினத்தில் இருந்து ஒரு மாத காலம் குடியிருப்பில் தங்கி இருக்க சட்ட ரீதியாக அனுமதி வழங்கப்படுகிறது.

# வெல்லவாய - எல்லாவெல நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்ற மூன்று பேர் உயிரிழந்தனர்

மொனராகலை மாவட்டத்தின் வெல்லவாய – எல்லாவளை நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்ற மூவர் உயிரிழந்தனர் எனத் தகவல்கள் வெளியாகியுள் ளன.

இதில் ஒருவரின் உடலம் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் எல்லாவெல பொலிஸாரைத் தொடர்புக்கொண்டு கேட்டபோது, இந்த சம்பவம் தொடர்பாக தகவல்கள் கிடைத்துள்ளன என தெரிவிக்கப்பட்டது. அத்துடன் தமது பொலிஸார் அங்கு சென்றுள்ளபோதும் இன்னும் உரிய தகவல்களை பெற்றுக்கொள்ள முடியவில்லை என்றும் எல்லாவெல பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேற்படி இடத்தில் தொலைபேசி இணைப்பு உரிய முறையில் செயற்படாமை காரணமாக தமக்கு மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளமுடியவில்லை என்று எல்லாவெல பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

றோயல் அக்கடமி
Royal Academy
நாவலர் றோட், நல்லூர்
தரம் 6
அரசடி றோட், யாழ்ப்பாணம்.
Tamil & English Medium
ஆரம்பம்:- 05.02.2022
சனிக்கிழமை (மாலை 2 மணி)












காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நாணய நிதியத்தை நாட மறுப்பதேன்?

நாட்டின் நிர்வாகம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ள கருத்துக்கள் நோக்கற்பாலவை.

நாடு எத்திசையை நோக்கிப் பயணிக்கின்றது என்பது அரசாங்கத்தில் இருக்கும் எவருக்கும் தெரியாது என்று அவர் கூறுவது உண்மைதான்.

நாட்டை நிர்வகிப்பது தொடர்பில் அதிகாரத்தைத் தமது கையில் வைத்திருக்கும் ராஜபக்ஷ குடும்ப அங்கத்தவரிடையே கூட ஒருமித்த நிலைப்பாடும் பார்வையும் திட்டமும் இருப்பதாகத் தெரியவில்லை.

நாட்டைப் பொருளாதார ரீதியில் சரியான பாதையில் வழிநடத்திச் செல்வதற்கான தீர்க்க தரிசனமோ தூரப் பார்வையோ கொள்கைத் திட்டமோ அரசுத் தலைமையிடம் இருப்பதாகவும் தெரியவில்லை. அத்தகைய தெளிவான பார்வையும் மதிநுட்பமும் அறிவும் கொண்ட நிபுணர்களின் வழிகாட்டுதல் அரசுத் தலைமைக்கு இருப்பதாகவும் தெரியவில்லை.

இந்தப் பின்புலத்தில் இப்போதைய கடும் நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது சாத்தியப்படப் போவதில்லை என்பதுதான் பொதுவாக பொருளியல் நிபுணர்களின் கருத்து நிலைப்பாடாக இருந்து வருகின்றது.

“நாடு எந்தத் திசையில் செல்கின்றது என்பது யாருக்கும் தெரியாது. சர்வதேச நாணய நிதியத்திற்கு உதவி கோரி கடிதம் எழுதியுள்ளோம் என்கின்றார் பொறுப்பான அமைச்சர். ஆனால் அப்படியான கடிதம் ஏதும் கிடைக்கவில்லை என்கின்றது சர்வதேச நாணய நிதியம்.” – என்று சுட்டிக் காட்டும் எதிர்க்கட்சித் தலைவர், இந்தப் பின்புலத்தில் நாடு எங்கே செல்கின்றது என்று கேள்வி எழுப்புவது நியாயமானதுதான்.

இன்றைய நெருக்குவார நிலையில் இருந்து மீள்வதற்கு ஒரேயொரு வழி சர்வதேச நாணய நிதியத்திடம் சரணடைவதுதான் என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் எமது நாட்டு விவகாரத்தில் தேர்ந்த பொருளாதார விமர்சகர்கள் யாவரும் குறிப்பிடுகின்றனர்.

ஆனால் அந்த வழிமுறையை நாட ராஜபக்ஷக்கள் பின்னடிக்கின்றார்கள். அதற்குக் காரணம் உண்டு.

சர்வதேச நாணய நிதியத்திடம் சரண் புகுந்தால் நாணய நிதியக் கூறும் பொருளாதார விதிமுறைகளை, வழி ஒழுங்குகளை அரசு பின்பற்றியாக வேண்டும். நாட்டின் பொருளாதாரப் போக்குகளை அந்த அமைப்பு ஊன்றிக் கவனிக்கும்.

பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் தேசிய சொத்துக்களை விற்றல் உட்பட பல விடயங்களும் நாணய நிதியத்தின் மேற்பார்வைக்குள்ளும், கழுகுக்கண் கண்காணிப்புக்குள்ளும் வரும், தம்முடைய தான்தோன்றித்தனமான பொருளாதாரக் கொள்கைப் போக்குகளையும் நடவடிக்கைகளையும் ராஜபக்ஷக்கள் முன்னெடுக்க முடியாமல் போகும். புதிய கட்டுப்பாடுகள் சுருக்குக் கயிறாக விழும்.

மீள அதிகாரத்தைக் கைப்பற்றியதும் ராஜபக்ஷக்கள் முதலில் செய்த வேலை இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வந்து, அதன் மூலம் தங்கள் அதிகாரங்களை கட்டுமட்டில்லாமல் அதிகரித்துக் கொண்டது தான்.

அந்த அதிகாரங்களைக் கூட தொடர்ந்தும் எதேச்சதிகாரமாகப் பிரயோகிப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் மேற்படி நேரடிப் பார்வையும் கண்காணிப்பும் ஆப்பு வைத்து விடும்.

அதனால்தான் சர்வதேச நாணய நிதியம் என்ற சர்வதேசத் தரப்பிடம் உதவி கோரி தஞ்சம் புகுவதைத் தவிர்த்து, நாட்டையும் மக்களையும் மேலும் மேலும் இக்கட்டில் மாட்டப் பண்ணும் தனது போக்கில் மும்முரமாக நிற்கின்றது கோட்டா அரசு.

# விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை அம்பிகாவின் கருத்து பிரதிபலிக்கின்றது!

## குற்றம் சாட்டுகிறார் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ்



இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்த கருத்து தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் தொடர்பாக அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியம் தனது ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையைப் பயன்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார்.

எனவே, அவரது குற்றச்சாட்டுகளை நிராகரிப்பதாகவும், ஏற்கனவே கொரோனாத் தொற்றால் அனைவரதும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த சலுகையை இலங்கை இழந்தால், அதனால் பல இழப்புக்கள் ஏற்படும் எனவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் உள்நாட்டு செயன்முறைகள் மற்றும் நிறுவனங்களின் மூலம் பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கத்தை நிவர்த்தி செய்வதற்கான தனது உறுதிப்பாட்டை இலங்கை வழங்கி வருகின்றது என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இன ரீதியாக சமூகங்களுக்குப் பாகுபாடு காட்டப்படுகின்றமை தொடர்பில் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் ஒரு காலத்தில் சமூகங்களுக்கிடையில் வெறுப்பைத் தூண்டிய தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரசாரத்தை நினைவூட்டுவதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிடுகின்றது.

அத்தோடு சிங்கள பௌத்த தேசியவாதம் மற்றும் இராணுவ மயமாக்கல் தொடர்பில் அவர் தெரிவித்த கருத்துக்களுக்கு பதிலளித்த வெளிவிவகார அமைச்சு, நாட்டில் அனைத்து தரப்பினருக்கும் சம உரிமை வழங்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் யுத்தம் நிறைவடைந்த பின்னர் இராணுவத்தினர் வசம் இருந்த தனியார் காணிகளில் 92 வீதத்துக்கும் அதிகமானவை காணி உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன எனவும் ஏனையவற்றை கையளிக்கும் நடவடிக்கை இடம்பெறுகிறது எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கக்கோரி கிளிநொச்சியில் கையெழுத்துப் போராட்டம்!




பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கக் கோரி கையெழுத்திடும் மக்கள் போராட்டம் நேற்று (சனிக்கிழமை) கிளிநொச்சியில் ஆரம்பமானது.

இலங்கை தமிழரசு கட்சியின் வாலிபர் முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி போராட்டம் நேற்று காலை 8.30 மணியளவில் ஆரம்பமானது,

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், கரைச்சி பிரதேச சபை தவிசாளர், சபை உறுப்பினர்கள், வர்த்தகர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதான டிவனியாவின் மகளும் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், கரைச்சி பிரதேச சபை தவிசாளர் ஆகியோர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் தாக்கம் தொடர்பாக உரையாற்றியிருந்தனர்.

# படையினரால் நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்முறைகள்; அவதானம் செலுத்துகிறது பிரித்தானிய அரசாங்கம்

இலங்கையில் படையினரால் நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்முறைகள் மற்றும் சித்திரவதைகள் குறித்து முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அவதானம் செலுத்தியிருப்பதாக பிரித்தானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அதேநேரம் இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் நிலைவரத்தைக் கண்காணிப்பதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றது எனவும் கூறியுள்ளது.

பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் டொனியா அன்டோனியஸியால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்துக்குப் பொறுப்பான அமைச்சர் அமன்டா மில்லிங், இதனைக் கூறினார்.

மேலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 இன் கீழ் ஒன்று தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கடப்பாடுகள் நிறைவேற்றப்படவேண்டியதன் அவசியத்தையும் அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

# குடிதண்ணீர் விநியோகத்தை மட்டுப்படுத்த யோசனைகள்!

இலங்கையில் நீர் விநியோகம் மட்டுப்படுத்தப்படுவதற்கான வாய்ப்பு உள்ளது என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறிவுறுத்தியுள்ளது. தற்போதைய காலநிலை காரணமாக பிரதான நீர் ஆதாரங்களில் நீர் மட்டத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்படுகின்றது.

தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக எதிர்வரும் நாள்களில் நீர் விநியோகம் மட்டுப்படுத்தப்படலாம் என அந்த சபை எச்சரித்துள்ளது. இதன் காரணமாக அத்தியாவசியத் தேவைகளுக்கு மாத்திரம் நீரைப் பயன்படுத்துவதுடன், அதனை வீண் விரயமாக்குவதைத் தவிர்க்குமாறும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புசபை பொதுமக்களை வலியுறுத்தியுள்ளது.






# சொர்க்கம் திருமண சேவை

இல.102/A , பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
|---|---|
| பிறந்த திகதி - 29.10.1987 மதம் - இந்து<br>ஜாதி - V ஆண் நட்சத்திரம் - திருவோணம்<br>கி.பா - செவ் - இல்லை<br>தகைமை - தொழில் - UR Permanent<br>எதிர்பார்ப்பு - இலங்கை மணமகள் | பிறந்த திகதி - 06.08.1983 மதம் - இந்து<br>ஜாதி - V பெண் நட்சத்திரம் - திருவாதிரை<br>கி.பா - செவ் - 8 இல் தகைமை - BA<br>தொழில் - தபாலலுவலகர்<br>எதிர்பார்ப்பு - உத்தியோக மணமகன் |
| பிறந்த திகதி - 10.05.1991 மதம் - இந்து<br>ஜாதி - V ஆண் நட்சத்திரம் - உத்தரட்டாதி 2ம் பாதம்<br>கி.பா - செவ் -<br>தகைமை - தொழில் - USA Engineer<br>எதிர்பார்ப்பு - இலங்கை மணமகள் | பிறந்த திகதி - 10.05.1988 மதம் - இந்து<br>ஜாதி - V பெண் நட்சத்திரம் - சதயம்<br>செவ் - 12இல் தொழில் - தனியார் வேலை<br>எதிர்பார்ப்பு - உத்தியோகம் தனியார், மணமகன் |
| பிறந்த திகதி - 23.12.1974 மதம் - இந்து<br>ஜாதி - V ஆண் நட்சத்திரம் - ரேவதி<br>கி.பா - செவ் - 4இல்<br>தகைமை - தொழில் - கனடா<br>எதிர்பார்ப்பு - இலங்கை மணமகள் | பிறந்த திகதி - 06.01.1990 மதம் - இந்து<br>ஜாதி - V பெண் நட்சத்திரம் - அச்சுவினி<br>செவ் - லக்கினத்து செவ்வாய் தகைமை -<br>தொழில் - கனடா<br>எதிர்பார்ப்பு - இலங்கைப் பட்டதாரி மணமகன் |
| பிறந்த திகதி - 06.10.1989 மதம் - இந்து<br>ஜாதி - V ஆண் நட்சத்திரம் - கேட்டை<br>கி.பா - செவ் - 2இல்<br>தகைமை - தொழில் - கனடா (விவாகரத்து)<br>எதிர்பார்ப்பு - யாழ்ப்பாண மணமகள் | பிறந்த திகதி - 15.09.1992 மதம் - இந்து<br>ஜாதி - V பெண் நட்சத்திரம் - அச்சுவினி<br>செவ் - 7இல் தகைமை - Diploma in Teaching<br>தொழில் - Teacher எதிர்பார்ப்பு - சைவ உணவு உண்ணும் பழக்கமுடைய உத்தியோக மணமகன் |

077 650 5097, 077 887 6969
தலைமை அலுவலகம் - கனடா - 001416661855



# மாங்கல்யா லக்ஷ்மி நாராயணா திருமண சேவை

இல.266, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
077 197 1667, 077 316 4796

| மணமகள் விவரம் | மணமகன் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 24.03.1987 மதம் - இந்து<br>ஜாதி - V பெண் நட்சத்திரம் - அச்சுவினி<br>கி.பா - 55 செவ் - 8 இல்<br>தகைமை - MBBS தொழில் - Doctor<br>எதிர்பார்ப்பு - Doctor & Eng.மணமகன் | பிறந்த திகதி - 06.12.1987 மதம் - இந்து<br>ஜாதி -Vஆண் நட்சத்திரம் - மிருகசீரிடம் 2<br>கி.பா - 50 செவ் - 2 இல் தகைமை - GCE A/L<br>தொழில் - பாதுகாப்பு உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு - படித்த அரசசேவை மணமகள் |
| பிறந்த திகதி - 11.09.1993 மதம் - இந்து<br>ஜாதி -V பெண் நட்சத்திரம் - புனர்பூசம் 3<br>கி.பா - 32 செவ் 8 இல்<br>தகைமை - Bcom தொழில் - Accountant அரச சேவை<br>எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன் | பிறந்த திகதி - 14.04.1995 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - அத்தம்<br>கி.பா - 57 செவ் -1 இல்<br>தகைமை - Bcom தொழில் - Company work<br>எதிர்பார்ப்பு - ஆசிரியர் மணமகள் |
| பிறந்த திகதி - 28.11.1995 மதம் - இந்து<br>ஜாதி -V பெண் நட்சத்திரம் - அவிட்டம் 2<br>கி.பா - 63 செவ் 8 இல்<br>தகைமை - Bcom தொழில் - Management Assistant<br>எதிர்பார்ப்பு - அரசசேவை, வெளிநாடு மணமகன் | பிறந்த திகதி - 03.07.1990 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - விசாகம் 2<br>கி.பா - 26 செவ் 6 இல்<br>தகைமை - MBBS தொழில் - மிருக வைத்தியர்<br>எதிர்பார்ப்பு - Doctor, Eng., Dental மணமகள் |
| பிறந்த திகதி - 08.12.1990 மதம் - இந்து<br>ஜாதி -V பெண் நட்சத்திரம் - மகம்<br>கி.பா - 24 செவ் 8 இல்<br>தகைமை - MBBS தொழில் - Doctor<br>எதிர்பார்ப்பு - Doctor, Eng., Accountant மணமகன் | பிறந்த திகதி - 13.11.1991 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - உத்தரட்டாடம் 4<br>கி.பா - 14 செவ்/ சூரி.2 இல்<br>தகைமை - IT Soft ware Eng. தொழில் - American Company<br>எதிர்பார்ப்பு - Eng., Doctor மணமகள் |
| பிறந்த திகதி - 02.08.1993 மதம் - இந்து<br>ஜாதி V பெண் நட்சத்திரம் - திருகோணம்<br>கி.பா - 58 செவ் 8 இல்<br>தகைமை - Bsc, Software தொழில் - Singapore<br>எதிர்பார்ப்பு - Singapore இலங்கை மணமகன் | பிறந்த திகதி - 15.08.1975 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - அனுசம் 4<br>கி.பா - 55 செவ் 6 இல்<br>தகைமை - GCE A/L தொழில் - Canada PR<br>எதிர்பார்ப்பு - GCE A/L படித்த மணமகள் |
| பிறந்த திகதி - 27.09.1990 மதம் - இந்து<br>ஜாதி V பெண் நட்சத்திரம் - மூலம் 4<br>கி.பா - 35 செவ் 6 இல்<br>தகைமை - Low தொழில் - சட்டத்தரணி<br>எதிர்பார்ப்பு - Doctor,Eng. மணமகன் | பிறந்த திகதி - 09.02.1989 மதம் - இந்து<br>ஜாதி - V ஆண் நட்சத்திரம் - உத்தரட்டாதி<br>கி.பா - 35 செவ் 7 இல்<br>தகைமை - BBA,HNDA தொழில் - ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகள் |
| பிறந்த திகதி - 30.08.1990 மதம் - இந்து<br>ஜாதி V பெண் நட்சத்திரம் - மூலம் 3<br>கி.பா - 30 செவ் 1 இல்<br>தகைமை - Bsc, Msc தொழில் - ஆராய்ச்சி உத்தியோகத்தர் எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகன் | பிறந்த திகதி - 21.11.1986 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - புனர்பூசம் 4<br>கி.பா - 50 செவ் 8 இல் தகைமை - GCE A/L + Computer Hardware தொழில் - Browns Company<br>எதிர்பார்ப்பு - அரசசேவை தனியார் மணமகள் |
| பிறந்த திகதி - 19.05.1993 மதம் - இந்து<br>ஜாதி V பெண் நட்சத்திரம் - அச்சுவினி 4<br>கி.பா - 51 செவ் 8 இல்<br>தகைமை - BBA தொழில் - Bank Officer<br>எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன் | பிறந்த திகதி -02.07.1992 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - பூசம் 4<br>கி.பா - 23 1/2 செவ் 2 இல்<br>தகைமை - HNDE, Bsc தொழில் - Telecom, Eng.<br>எதிர்பார்ப்பு - Bsc, Bcom மணமகள் 1993 பின்பு |

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர்
தொலைபேசி
021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.


# கத்திக்குத்து மாணவி பலி!

கத்திக்குத்து சம்பவத்தில் படுகாயமடைந்த பாடசாலை மாணவி ஒருவர் வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கந்தளாய், அக்போபுர, பெரமடுவ பிரதேசத்தில் வசிக்கும் 15 வயதுடைய பாடசாலை மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த மாணவி வீட்டில் இருந்த போது கத்தியால் குத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் காதலன் என அடையாளம் காணப்பட்ட இளைஞர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற போது சிறுமியின் தாயும் வீட்டில் இருந்துள்ளமையுடன், தாக்குதல் இடம்பெற்ற போது சந்தேகநபர் வீட்டில் பதுங்கியிருந்தார் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். ஆபத்தான நிலையில் இருந்த சிறுமி சிகிச்சை பலனின்றி வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

கைது செய்யப்பட்ட 17 வயது இளைஞன் கந்தளாய் பிரதான நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# நீரில் மூழ்கி சிறுமி சாவு!

கிரிஹேன பிரதேசத்தில் உள்ள ரக்கனாவ நீர்வீழ்ச்சியில் குளித்துக் கொண்டிருந்த சிறுமி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சிறுமி மற்றுமொரு குழுவினருடன் குளித்துக் கொண்டிருந்த போது நீரில் மூழ்கி கவலைக்கிடமான நிலையில் தெரணியகல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் அன்ஹெட்டிகம பிரதேசத்தில் வசிக்கும் 9 வயது சிறுமி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

# கைக்குண்டுடன் ஒருவர் கைது!

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலமுனை பகுதியில் வைத்து வெள்ளிக்கிழமை இரவு கைக்குண்டுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வெள்ளி இரவு பாலமுனையில் உள்ள பொலிஸ் காவலரணுக்கு அருகில் வைத்தே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் காத்தான்குடி பகுதியை சேர்ந்தவர் எனவும் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# புதையல் தோண்ட முயற்சி ஆறு பேர் கைதாகியுள்ளனர்

கிளிநொச்சி இராமநாதபுரம் அழகாபுரியில் புதையல் தோண்ட முற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் ஆறு பேர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து புதையலைக் கண்டறிவதற்காகப் பயன்படுத்தபடுத்தப்படும் ஸ்கானர் கருவி ஒன்றும் இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலிற்கு அமைவாக சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களில் ஐவர் தமிழர்கள் என்றும் ஒருவர் இஸ்லாமியர் என்றும் தெரியவந்துள்ளது.

கைதானவர்கள் தர்மபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


# இறைச்சிக் கோழி விற்பனை

புறொய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

இந்த வாரம் இவர்

# யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காந்தியவாதி

# மங்களம்மாள்



ப்ரியமதா பயஸ்

மாசிலாமணிப்பிள்ளை மங்களம்மாள் (மார்ச் 10, 1884 - 1971) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காந்தியவாதியும், சமூக சீர்திருத்தவாதியும், பெண்கள் முன்னேற்றத்துக்காக உழைத்த ஒருவரும் ஆவார். யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் கல்வியில் முன்னணியில் திகழ்ந்த, வசதி படைத்த குடும்பம் ஒன்றில் பிறந்த இவர், இலங்கையிலும், இந்தியாவிலும் பல்வேறு சமூக, அரசியல் பணிகளில் ஈடுபட்டுள்ளார். மங்களம்மாளின் தாய்வழிப் பாட்டனார் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த கதிரவேலுப்பிள்ளை என்பார்.

19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் ஒரு வழக்கறிஞர். அக்காலத்தில் பி. ஏ. பட்டம் பெறுவது யாழ்ப்பாணத்தில் மிக அரிதாக இருந்ததால், பி. ஏ. பட்டதாரியான இவரை மக்கள் பி. ஏ. தம்பி என்றே அழைத்துவந்தனர். இன்றும் யாழ்ப்பாணத்தில் அவர் வாழ்ந்த வீட்டுக்கு அருகில் உள்ள ஒழுங்கை பி. ஏ. தம்பி ஒழுங்கை என அழைக்கப்படுகிறது.

பி. ஏ. தம்பியின் ஆண் மக்களான செல்லப்பாபிள்ளை, பொன்னம்பலபிள்ளை, சின்னப்பாபிள்ளை ஆகியோர் இந்தியாவின் திருவிதாங்கூரில் உயர் பதவிகளை வகித்துவந்ததுடன், இந்தியாவின் சுதந்திர இயக்கத்திலும் பங்குகொண்டிருந்தனர். பி. ஏ. தம்பியின் மகளுக்குப் பிறந்தவரே மங்களம்பாள்.1884 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 10ஆம் நாள் இவர் குடும்பத்தில் கடைசிப் பிள்ளையாகப் பிறந்தார். இவர் பள்ளிக்குச் சென்று கல்வி கற்றது குறித்துத் தகவல் இல்லை. யாழ்ப்பாணத்தில் அக்கால உயர்குடி இந்துக்களின் வழக்கப்படி பெண்ணான இவருக்கு வீட்டிலேயே கல்வி அளிக்கப்பட்டிருக்கக்கூடும்.

மாமனாரான பொன்னம்பலபிள்ளையின் ஒரே மகனான மாசிலாமணிப்பிள்ளையை மங்களம்மாள் திருமணம் செய்துகொண்டார். மாசிலாமணிப்பிள்ளை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த தேசாபிமானி பத்திரிகையின் ஆசிரியராக இருந்ததுடன், இந்தியாவிலும், இலங்கையிலும் பல்வேறு பொதுப்பணிகளில் ஈடுபட்டவர். மாசிலாமணிப்பிள்ளை அக்காலத்தில் இந்தியாவில் வாழ்ந்துவந்ததால் மங்களம்மாளும் இந்தியாவுக்குச் சென்றார். கணவரின் தூண்டுதலினால் மங்களம்மாள் காங்கிரஸில் இணைந்து தீவிரமாக உழைத்தார்.

1924இல் கோயில்பட்டியில் இடம்பெற்ற காங்கிரஸ் மாநாட்டில் பெண்கள் அரங்குக்கு இவரே தலைமை தாங்கினார். 1927இல் மகாத்மா காந்தியின் முன்னிலையில் சென்னையில் நடந்த அகில இந்திய காங்கிரசு மாநாட்டிற்கான வரவேற்புக்குழுவில் இவரும் இருந்ததுடன், பெண்கள் அரங்கத்தில் வரவேற்புரையையும் நிகழ்த்தினார். இந்தியாவில், 1926இற்கு முன்னர் பெண்கள் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கக்கூடாது என்ற தடை இருந்தது.

இது நீக்கப்பட்டபின்னர் சென்னை மாநகரசபைக்கு இடம்பெற்ற தேர்தலில் நீதிக் கட்சித் தலைவரான நாயுடுவை எதிர்த்து, எழும்பூரில் மங்களம்மாளைக் காங்கிரஸுக் கட்சி நிறுத்தியது. அத்தேர்தலில் மங்களம்மாள் வெற்றி பெறாவிட்டாலும், யாழ்ப்பாணத்துப் பெண்ணொருத்தி தமிழ்நாட்டு அரசியலில் இந்த நிலையை அடைந்தது முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

மங்களம்மாள் இந்தியாவில் இருந்த காலத்தில் 1923 இல் பெண்களுக்கான 'தமிழ் மகள்' என்னும் மாத இதழ் ஒன்றைத் தொடங்கி நடத்திவந்தார். இவர் மீண்டும் யாழ்ப்பாணம் வந்த பின்னரும் தொடர்ந்து இந்த இதழ் 40 ஆண்டுகாலம் ஒழுங்காக வெளிவந்தது. இதன் பின்னர், பல்வேறு காரணங்களினால், காலாண்டு, அரையாண்டு இடைவெளிகளிலேயே வெளியிட முடிந்தாலும் 1971 ஆம் ஆண்டு 85 வயதில் அவர் இறக்கும்வரை இவ் விதழை அவர் வெளியிட்டு வந்தார்.

கடைசி இதழ் முற்றுப்பெறுமுன்னரே அவர் இறந்துவிட்டாலும், அவ்விதழ் அட்டையில் அவரது படத்தையும், அவர் பற்றிய இரண்டு கட்டுரைகளையும் உள்ளடக்கி அவரது நினைவாக வெளியானது.

# பிரமிள் விருது - 2020 / 2021



வேலணை.Com (கனடா) இன் நிதி அனு சரணையில் தட்டுங்கள்.Com (கனடா) இன் ஊடக பங்களிப்புடன் மகுடம் கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழ் ஆண்டு தோறும் வழங்கி வரும் பிரமிள் விருதும் பிரமிள் நினைவுப் பேருரைத் தொடரும்.

நவீன தமிழ் இலக்கியத்தில் பாரதிக்கு பின் மிகப் பெரும் இலக்கிய ஆளுமையாக கருதப்படும் உலகம் போற்றும் தமிழ் கவிஞர் பிரமிள் என அழைக்கப்படும் தர்மு சிவராம் நினைவாக கவிதை நூலுக்கு வழங்கப்படவிருக்கும் பிரமிள்விருது தொடர்பான அறிவிப்பும் நிபந்தனைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

2018 இல் ஆரம்பிக்கப்பட்ட இவ் விருது வழங்கல் 2019 இல் தொடர்ந்தது.

உலகளவிலான கொரோனா பேரிடர் காரணமாக 2020 இல் போட்டி அறிவிக்கப்படவில்லை.

இப்போட்டி 2020, 2021 இல் வெளிவந்த கவிதை நூல்களுக்காக (இரண்டு ஆண்டுகளையும் இணைத்து) நடாத்தப்படுகிறது.

உலகெங்கும் வாழும் தமிழ் கவிஞர்கள் அனைவரும் இப் போட்டியில் பங்குபற்ற முடியும்.

இவ்விருதுக்காக கவிஞர்கள் 01-01-2020 தொடக் கம் 31-12-2021 வரையான இரண்டு வருட காலப் பகுதியில் வெளியிட்ட தமது கவிதை நூலை/நூல்களை சமர்ப்பிக்கலாம்.

போட்டிக்கு கவிதை நூலின் மூன்று (3) பிரதிகள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

ஒருவர் குறித்த காலப் பகுதியில் வெளியிட்ட எத்தனை கவிதை நூல்களையும் போட்டிக்கு அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு நூலிலும் தனித்தனியே மூன்று பிரதிகள் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

கவிஞர்கள் சார்பாக பதிப்பகங்களும் கவிதை நூல்களை விருது தேர்வுக்காக அனுப்பி வைக்கலாம். ஆனால் பரிசு கவிஞருக்கே வழங்கப்படும்.

போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் நூல்/நூல்கள் குறித்த 2020, 2021ஆகிய ஆண்டுகளில் முதல் பதிப்பு கண்ட நூலாக இருக்க வேண்டும்.

கவிதைகள் தமிழில் சொந்தப்படைப்பாக இருக்க வேண்டும். மொழிபெயர்ப்பு, பிற மொழி தழுவல், பல கவிஞர்களின் தொகுப்பாக இருக்கக்கூடாது.

போட்டி இறுதித் திகதி 10-03-2022. இத் திகதிக்கு பின்னர் கிடைக்கும் நூல்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

முடிவுகள் அனைத்தும் 15-04-2022 அன்று அறிவிக்கப்படும்.

நூல்கள் வந்து சேரவேண்டிய தபால் முகவரி:

**w.michael Collin**
**The Editor of Magudam**
**90, Bar Road,**
**Batticaloa,**
**Sri Lanka.**
**Phone: 0774338878**
**E.mail: magudammichaelgmail.com**

தேர்வான கவிதை நூலுக்கு விருதும், பணப் பரிசாக இலங்கை ரூபா 40, 000/= மும் , சான்றிதமும் சிறப்புப் பரிசாக பத்து(10) கவிதை நூல்களுக்கு சான்றிதழும் 2022 ஏப்ரலில் நடைபெறவிருக்கும் பிரமிள் விருது விழா நிகழ்வில் வழங்கப்படும். அக்கால கட்டத்தின் கொரோனா கால நிலைமைகளை கவனத்தில் கொண்டு நேரடி நிகழ்வாக நடத்தப் பெற முடியாவிடில் நிகழ் நிலை (Zoom) மூலமாகவேனும் நடை பெறும். இந் நிகழ்வில் 2019 வெற்றியாளருக்கான விருதும் வழங்கப்படும்.



# மருத்துவக் கதிர்





# இயற்கை மருத்துவம்

இயற்கை மருத்துவம் ஆக்கபூர்வமானது. மனிதனின் உடல் நலம், மன நலம், கட்டுப்பாடு, உணர்வு, ஆன்மீகம் ஆகியவற்றினை இயற்கையுடன் ஒன்றிணைத்து நோயை குணமாக்கக் கூடியதாகும். உடல் நலத்தை மேம்படுத்துதல், நோய் வராமல் தடுத்தல், நோய் வந்த பின் சரிசெய்தல், இழந்த சக்தியை மீண்டும் பெற செய்திடும்.

இயற்கை முறை மருத்துவம் என்பது இயற்கையிலேயே மனித உடல், தமக்கு தாமே சமன் செய்து நோயை குணமாக்கும் முறையாகும் என பிரிட்டிஷ் இயற்கை மருத்துவ குழு கூறியுள்ளது. இயற்கை மருத்துவம் உடலில் நோய் காரணிகள் மற்றும் விசத்தன்மை மற்றும் தேவையற்ற கழிவுகளை வெளியேற்றுவதன் மூலமாக நோய் குணமாக்கப்படுகிறது. இது சாத்தியமானதாகும்.

**இயற்கை மருத்துவத்தின் முக்கிய அம்சங்கள்:**

அடிபட்ட காயங்கள், சுற்று சூழல் சம்பந்தமான நோய்கள் தவிர பிற நோய்களுக்கான காரணங்களும், வைத்திய முறைகளும் ஒன்றேயாகும். தேவையில்லாத கழிவுகள் உடலில் தங்குவதே நோய்க்கான காரணமாகும். கழிவுகளை நீக்கி நோயை குணப்படுத்துவது இயற்கை மருத்துவத்தின் சிறப்பம்சம்.

மனித உடலில் கழிவுகள் தங்குவதே நோய்க்கான மூலகாரணம் ஆகும். உடலில் கழிவுகள் தங்குவதால் கிருமிகள் உடலில் வாழ்வதற்கு ஏற்ற சூழல் உருவாகிறது.

தீவிரமான நோய்களனைத்தையும் உடலே தன்னிச்சையாக சரிசெய்து கொள்ளும். இது உடலுக்கு சாதகமானது, பாதகமானதல்ல, தவறான சிகிச்சையாலும், நீண்டகால சிகிச்சையின்மையாலும் நோய்கள், நாள்பட்ட நோய்களாக மாறுகிறது.

இயற்கையே ஒரு மிகச்சிறந்த மருத்துவராகும். நோய் வராமல் தடுக்கவும், வந்தால் குணப்படுத்தவும், இழந்த சக்தியை மீண்டும் பெறக்கூடிய ஆற்றலை இயற்கையிலேயே நமது உடல் பெற்றுள்ளது.

இயற்கை மருத்துவத்தில், சிகிச்சை என்பது நோயை சரி செய்தல் என்பது அல்ல. மாறாக நோயாளியை அத்தன்மையில் இருந்து விடுவித்து புதிய நிலைக்கு கொண்டு செல்வதாகும்.

இயற்கை மருத்துவம் நோயாளியின் நாட்பட்ட நோய்களை குணப்படுத்துகின்றன.

வெளியே தெரியாத அழுத்தப்பட்ட நோய்கள் நிரந்தரமாக குணமாக்கப்படுகிறது.

இயற்கை மருத்துவமானது உடல், மனம், சமூகம், ஆன்மா என அனைத்தையும் ஒன்று சேர்த்த மருத்துவ முறையாகும்.

இயற்கை மருத்துவம் பாதிக்கப்பட்டுள்ள உறுப்புகளை மட்டும் பார்க்காமல் உடலின் அனைத்து பகுதிகளையும் சரி செய்கிறது.

இயற்கை மருத்துவத்தில் உணவுதான் மருந்தாகிறது. வேறு மருந்து தேவையில்லை.

இறை நம்பிக்கைக்கு ஏற்ற வகையில் வழிபாடு செய்து நோய் தீர்ப்பது மிக முக்கிய பங்காக உள்ளது.

**உணவுக்கட்டுப்பாடு சிகிச்சை**

இயற்கை தன்மையுடன் பருவக்காலத்திற்கேற்ற செழுமையான பழங்கள், காய்கறிகள், கிழங்குகள், கொட்டைகள் ஆகியவை சிறந்த பலனைத்தரும். இந்த உணவு முறையினை மூன்று வகைகளாக பிரிக்கலாம். அவை:

**திரவ உணவு**

எலுமிச்சைபழச்சாறு, இளநீர், காய்கறிச்சாறு, கீரைச்சாறு, வெண்ணெய், கோதுமை புல்சாறு ஆகியவை திரவ உணவாகும்.

**இனிமையான உணவு**

பழங்கள், நீராவி மூலம் வேக வைத்த காய்கள், முளைகட்டிய தானியங்கள் பயிர்கள், காய், கீரைகளில் செய்த சட்னி, துவையல்கள்.

**ஆக்கபூர்வமான உணவுப்பழக்கம்**

தேய்த்து பளபளப்பாக்காத அரிசி, சிறு தானியங்கள், முழுமையான மாவு, முளை கட்டிய தானியம், கிழங்குகள், தயிர் போன்றவை ஆகும்.

கார வகை உணவுகள், உடல் நலத்தை உயர்த்தி, உடலை தூய்மையாக்கி நோய் எதிர்ப்பு சக்தியை அளிக்கிறது. இதனைப் பெறுவதற்கு சரியான சரி விகித உணவு தேவையாகும். உடல் நலனை பேணிட உணவு வகைகளில் 20% அமிலத்தன்மையும் 80% காரத்தன்மையும் இருத்தல் வேண்டும். சமநிலை உணவு உடல் நலத்திற்கு தேவையானதாகும். இயற்கை முறை வைத்தியத்தில் உணவே மருந்தாக உள்ளது.

**உண்ணாநிலை சிகிச்சைமுறை**

உண்ணாநிலை என்பது குறிப்பிட்ட உணவு அல்லது அனைத்து உணவுகள், நீர் அல்லது இரண்டையும் விருப்பப்பட்டு, குறிப்பிட்ட நேரம்வரை உண்ணாமல் தவிர்ப்பது ஆகும். சமஸ்கிருதத்தில் விரதம் என்பது உறுதியானது என பொருள்படும். உபவாசம் என்பது கடவுளுக்கு அருகில் எனப்பொருள்படும். உண்ணா விரதம் என்பது ஒரு நாள் விட்டு ஒரு நாளோ, தொடர்ந்தோ அவரவர் தேவைக்கு ஏற்ப கடைப்பிடிப்பதாகும். உடல் நலம் சீர்பட உண்ணா நிலை சிறந்த பயன்தரும் சிகிச்சையாகும். உண்ணா நிலை கடைப்பிடித்திட மனதினைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இயற்கை மருத்துவரின் ஆலோசனையின் அடிப்படையில் தான் நீண்ட நாள் உண்ணாநிலை மேற்கொள்ள வேண்டும். உண்ணா நிலையின் காலம் நோயாளியின் வயது, நோயின் தன்மை நோய்க்கு எடுத்துக்கொண்ட மருந்தின் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் உண்ணா நோன்பிற்கான காலம் கடைப்பிடிக்கப்படுகிறது. தேவை ஏற்படும் போது தொடர்ச்சியாக குறைந்த அளவில் இரண்டு அல்லது மூன்று நாள்கள் அதிகபடுத்திக் கொள்ளலாம்.

உண்ணா நிலையில் இருக்கும் பொழுது அனுபவம் உள்ளவர்களின் வழிகாட்டுதலுடன், நல்ல ஓய்வுடன் நீர், பழச்சாறு, காய்கறிசாறு இவற்றினை பயன்படுத்தலாம். சிறந்த பலனையும், பாதுகாப்பையும், அளிக்கக்கூடியது எலுமிச்சை பழச்சாறு ஆகும். உண்ணா நிலையின் போது உடலில் தேக்கி வைக்கப்பட்டிருக்கும் கழிவுகள் அதிகம் வெளியேறுகிறது. கார வகை சாறு மற்றும் சர்க்கரை கலக்காத (இயற்கையிலேயே பழங்களில் சர்க்கரை உள்ளது). இந்த பழச்சாறுகள் வலிமை தருகின்றன. பழச்சாறுகள் தயாரித்திட செழுமையான பழங்களில் இருந்து தயாரிப்பது அவசியமானதாகும். உடனுக்குடன் தயாரிக்கப்பட்ட பழச்சாறையே பயன்படுத்த வேண்டும். தகரப்பெட்டிகள், பிரிட்ஜ்களில் (உறை நிலை பெட்டி)வைத்த பழங்களை பயன்படுத்த கூடாது. உண்ணா நிலைக்கு முன் எனிமா கொடுத்து வயிற்றை தூய்மைப் படுத்திக்கொள்ள வேண்டும். ஒரு நாள் விட்டு ஒரு நாள் எனிமா எடுத்துக்கொள்ள வேண்டும். 6 முதல் 8 டம்ளர் நீர் உட்கொள்ள வேண்டும். உடலில் தேங்கியிருக்கும் தேவையில்லாத கழிவுகளை வெளியேற்றுவதற்கு அதிகப்படியான சக்தி தேவையாகிறது. என்வே இந்த சமயத்தில் உடல் ஓய்வு, மன அமைதி தேவைப்படுகிறது.

உண்ணா நிலையினை முடிக்கும் முறையில் தான் உண்ணாநிலையின் பயன்கள் அடங்கி உள்ளன. உணவு உட்கொள்ளும் முறையினைப் பொறுத்தும் உண்ணாநிலையின் பலன் அடங்கியுள்ளது. அதிகமாக சாப்பிடக்கூடாது. மெதுவாக மென்று சாப்பிட வேண்டும். உண்ணா நிலை முடிவிற்கு பிறகு சாதாரண உணவு முறைக்கு திரும்ப வேண்டும்.

**உண்ணாநிலை - நன்மை - உடலியல் தாக்கம்**

பழங்காலம் முதல் தற்காலம் வரை வரலாற்றில் மருத்துவர்கள் உண்ணா நிலை சிகிச்சையை பல்வேறு கட்டுபாடுகளுடன் முறைப்படி செயல்படுத்தினர். ஆரம்ப காலத்தில் அறிவியல் பூர்வமான வழிகாட்டுதலின்றி, புரிதல் இன்றி நோயை குணப்படுத்த உண்ணா முறையை கடைப்பிடித்து வந்தனர். ஆனால் தற்காலத்தில், உண்ணா நிலையில் விலங்குகளின் உணவு முறையைக்கொண்டு விலங்குகளில் ஏற்படும் மாற்றம், விளைவு, பலன்களை அறிந்து அதனடிப்படையில் உண்ணா நிலை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உடலில் ஏற்படும் வளர்சிதை மாற்றங்கள் அடிப்படையில், அவர்களது வயது - உடல் நலத்திற்கும் ஏற்றவாறு உண்ணா நிலையினை மேற்கொள்ளலாம்.

உண்ணாநிலையால் உடல் நிலையில் ஏற்படும் மாற்றங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் - இன்சுலினின் செறிவு தன்மை, அதிகரிக்கும் இதனால் பிளாஸ்மாவில் உள்ள குளுக்கோஸின் அளவுகள் கட்டுப்படுத்தப்படும்.

**மண் சிகிச்சை**

மண் சிகிச்சை முறை மிகவும் எளிமையானது. நிலத்தில் 3 முதல் 4 அடி ஆழத்தில் தோண்டி மண் எடுத்துக்கொள்ளவேண்டும். இதில் கற்கள், துண்டுகள், இரசாயான கலவைகள் கண்டிப்பாக இருக்கக் கூடாது. இயற்கையின் பஞ்ச பூத சக்திகளில் மண் ஒன்று ஆகும். இது உடல் ஆரோக்கியத்திற்கும், நோய்களை குணப்படுத்தவும் துணைசெய்யும். மண் சிகிச்சையினால் ஏற்படும் விளைவுகள்:-

இயற்கையின் ஐந்து கூறுகளில் மண் ஒன்றாகும். இது நலம் மற்றும் நோயிலும் மிகஉயர்ந்த நன்மையை ஏற்படுத்தவல்லது, மண்ணை உபயோகப்படுத்துவதனால் ஏற்படும் நன்மைகள்:-

சூரிய ஒளியில் உள்ள சக்திகளை உடலுக்கு பெறச் செய்கிறது.

குளிர்ந்த மண்ணை உடலில் தடவி வெகு நேரம் உலராமல் இருப்பதன் மூலம் உடலின் வெப்பம் தணிந்து உடல் சம நிலை அடைகிறது.

**மண் குளியல்**

நோயாளி அமர்ந்த நிலையிலோ அல்லது படுத்திருக்கும் நிலையிலோ மண்ணை பூச வேண்டும். இது தோலில் இரத்த சுழற்சியையும் வலிமையையும் அளிக்கின்றது. மண் குளியலின் போது நோயாளிக்கு சளிபிடிக்காதவாறு கவனமாக கடைப்பிடிக்கவேண்டும். நோயாளியின் குளிர்ந்த நீரால் நோயாளியின் உடல் முழுதும் தெளிக்க வேண்டும். நோயாளி மிகவும் குளிர்ச்சியாக உணர்ந்தால் சுடுநீர் பயன்படுத்தலாம். உடனடியாக நோயாளியின் உடலினை துவட்டி உஷ்ணப்படுத்திக்கொள்ளவேண்டும். 45 முதல் 60 நிமிடங்கள் வரை மண் குளியல் செய்யலாம்.

**மண்குளியலின் பயன்கள்**

* உடல் மற்றும் தோல் காயங்களை சரிசெய்வதில் மண்குளியல் சிறந்தபலனைத் தருகிறது.
* உடலிற்கு குளிர்ச்சியூட்ட பயன்படுகிறது.
* உடலில் உள்ள விஷத்தன்மையை நீர்க்கச் செய்து, உறிஞ்சி வெளியே எடுத்து விடுகிறது.
* பசியின்மை, மனஉளைச்சலினால் ஏற்படும் தலைவலி, அதிக இரத்த அழுத்தம், தோல் நோய்கள் முதலியவற்றிற்கு சிறந்தமுறையில் சிகிச்சை பயன்படுகிறது.
* மலச்சிக்கலில் இருந்து விடுபடுவதற்கு காந்திஜி மண்குளியலையே பயன்படுத்தினார்.

**நீர்ச் சிகிச்சை**

நீர் சிகிச்சை இயற்கை வைத்தியத்தின் ஒரு பகுதியாகும். இந்த சிகிச்சையில் நீரை பல்வேறு வழிகளில் பல்வேறு விதத்தில் பயன்படுத்தலாம். இந்த நீர் சிகிச்சை முறையானது தொன்று தொட்டு பழங்காலம் முதலே பயன்பாட்டில் உள்ளது. நோயின் தன்மைக் கேற்றவாறு குளிர்ந்த நீரிலோ, நீரின் வெப்பத்தை கூடுதலாக்கியோ, குறைத்தோ சிகிச்சை மேற்கொள்ளலாம். சூடாக, குளிர்ச்சியாக, நீர்தன்மையாக ஆவியாக, ஐஸ் கட்டிகளாகவும் உட்புறம், வெளிப்புறமும் பயன்படுத்தலாம். நீர் சிகிச்சையானது பழங்காலம் முதற்கொண்டே நோய்களுக்குத்தீர்வளிக்கும் முகவர் போல் செயல்படுகிறது.

# எழில் கதிர்





மயோனைஸ் ஈரப்பதமூட்டும் பண்புகளைக் கொண்டது. பேபி ஒயிலில் இரசாயனங்கள் அதிகம் இருக்காது.

எனவே 2 தேக்கரண்டி மயோனைஸ் உடன் ஒரு தேக்கரண்டி பேபி ஒயில் சேர்த்து கலந்து, வறட்சியடையும் பகுதியில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும்.

## சருமத்திற்கு ஈரப்பதமளிக்கும் பொருள்கள்



முட்டையின் மஞ்சள் கருவில் கொழுப்பு அதிகம் இருப்பதால், இது ஒரு அற்புதமான ஈரப்பதமூட்டும் பொருளாக செயல்படுகிறது. அதே போல் பாதாம் எண்ணெயில் விற்றமின் ஈ, கொழுப்பு, அமிலங்கள், புரோட்டீன்கள், பொற்றாசியம், சத்துக்கள் இருப்பதால், இது ஒரு சிறப்பான சரும பராமரிப்பு பொருள். ஒரு கிண்ணத்தில் முட்டையின் மஞ்சள் கரு மற்றும் பாதாம் எண்ணெயை ஒன்றாக எடுத்து நன்கு கலந்து, அதிகம் வறட்சியடையும் பகுதியில் தடவி ஊற வைத்து, பின் கழுவினால், சரும வறட்சி கட்டுப்படும்.



வாழைப்பழம் மற்றும் தேன் ஆகிய இரண்டுமே ஈரப்பதமூட்டும் பண்புகளைக் கொண்டுள்ளன. சரும தொற்றுகள், அழற்சி போன்ற பிரச்சினைகளைக் கொண்டவர்கள் இந்த வழியைப் பயன்படுத்துவதன் மூலம் தடுக்கலாம்.

அதற்கு நன்கு கனிந்த வாழைப்பழத்தை மசித்து, அதில் சிறிது தேன் சேர்த்து கலந்து சருமத்தில் தடவி 20 - 25 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும்.



பப்பாளியின் ஒரு துண்டை எடுத்து ஒரு கப் நீரை ஊற்றி நன்கு அரைத்து, ஒரு பஞ்சுருண்டையால் அதை நனைத்து முகத்தைத் துடைத்து எடுக்க வேண்டும். ஒரு முறை தயாரிக்கும் இந்த கலவையை 5 நாள்கள் வரை பயன்படுத்தலாம்.



தேங்காய் எண்ணெய் மற்றும் தேன் ஆகிய இரண்டு பொருள்களுமே சருமத்திற்கு ஈரப்பதமளிக்கும் பண்புகளைக் கொண்டுள்ளன.

தேங்காய் எண்ணெய் மற்றும் தேனை சரிசம அளவில் எடுத்து நன்கு கலந்து, அதை அதிகம் வறட்சியடையும் முகம், கை, கால்களில் தடவி 20 - 30 நிமிடங்கள் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும். இதனால் சரும வறட்சி கட்டுப்படுத்தப்படும்.



கற்றாழை, தேன் மற்றும் பாதாம் எண்ணெய் கற்றாழையில் ஈரப்பதமூட்டும் பண்புகள் உள்ளன.

இதை பாதாம் எண்ணெய் மற்றும் தேனுடன் சேர்த்து பயன்படுத்தும் போது இன்னும் சிறப்பான பலன் கிடைக்கும். அதற்கு 2 கரண்டி கற்றாழையுடன் தேன் மற்றும் பாதாம் எண்ணெயை சரிசம அளவில் கலந்து, முகம் மற்றும் வறட்சி அதிகம் ஏற்படும் பகுதியில் தடவி அரை மணிநேரம் ஊற வைத்து, பின் நீரால் கழுவ வேண்டும்.

## நரைமுடி பிரச்சினைக்கு ஹென்னா பயன்படுத்தும் போது செய்யும் சிறு தவறுகள்

இன்றைய தலைமுறையினர் பலர் இளம் வயதிலேயே நரைமுடி பிரச்சி
னையை சந்திக்கிறார்கள். இந்த நரைமுடியை மறைக்க சிலர் இரசாயனம்
கலந்த சாயத்தை பயன்படுத்தினாலும், தலைமுடிப் பிரச்சினைகள் வரும்
என்பதால் சிலர் தங்களின் தலைமுடிக்கு ஹென்னாவை பயன்படுத்துகி
றார்கள். ஆனால் அப்படி ஹென்னா பயன்படுத்தும் பலருக்கு அதை சரியான வழி
யில் பயன்படுத்த தெரியவில்லை. இதனால் தலைக்கு ஹென்னா போட்டும், அதை
அலசிய பின் பலரது தலைமுடி நரைத்து தான் காணப்படுகின்றன. இதற்கு காரணம்,
ஹென்னா பயன்படுத்தும் போது பலரும் செய்யும் சிறு தவறுகள் தான்.
நீங்கள் தலைக்கு ஹென்னா பயன்படுத்தியும் உங்கள் தலைமுடி நரைத்தி
ருந்தால், அதற்கு உங்களின் பின்வரும் தவறுகள் தான் காரணம்.
தலைக்கு ஹென்னா போடும் போது, அதில் ஏதாவது கலந்தால் இன்னும் நல்ல
பலன் கிடைக்கும் என்று பலர் நினைப்பதுண்டு. அதனால் சில சமயங்களில் ஹென்
னாவை ஊற வைக்கும் போது, அதில் சிலர் தயிரை சேர்த்துக் கொள்கிறார்கள்.
இப்படி தயிரை சேர்ப்பதால், அது எதிர்பார்க்கும் பலனைத் தராது. ஏனெனில் ஹென்
னாவுடன் தயிரை சேர்க்கும் போது, அதில் உள்ள புரோட்டீன்க
ளுடன் ஒரு பிணைப்பை உருவாக்கி, அதன்
காரணமாக முடிக்கு புரோட்
டீன் கிடைக்காது. ஆகவே
இத்தவறை செய்யாதீர்கள்.



ஹென்னாவை நீரில் கலந்த பின் அதை போதுமான அளவு ஊற வைக்க வேண்டும். அப்படி ஊற வைத்தால் தான் அது தலைமுடிக்கு நல்ல நிறத்தைக் கொடுக்கும். அவசர அவசரமாக நீரில் கலந்து, தலைக்கு பயன்படுத்தினால், ஹென்னாவின் நிறம் முடியில் ஏறாது.

பெரும்பாலான மக்கள் ஹென்னா பயன்படுத்துவதற்கு முன் தலைமுடிக்கு எண்ணெய் தடவிக் கொள்வார்கள். ஆனால் இப்படி எண்ணெய் தடவுவதால், தலைமுடியில் ஒரு லேயரை எண்ணெய் உருவாக்குகிறது. இதன் காரணமாக ஹென்னாவின் நிறம் முடியில் ஒட்டாமல் இருக்கும். ஆகவே உங்கள் முடியின் நிறம் மாற வேண்டுமென்று நினைத்தால், எண்ணெய் தடவுவதை நிறுத்துங்கள்.



அவகோடோ பழம் சருமம் மற்றும் தலைமுடிக்கு அற்புதமான நன்மைகளை வழங்கக்கூடிய பழம். இதில் அழகை மேம்படுத்த தேவையான சத்துக்கள் ஏராளமாக உள்ளன. இதன் சிறப்பான பகுதி என்னவென்றால், இதை எந்த ஒரு பொருளுடனும் சேர்த்து பயன்படுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை. அப்படியே பயன்படுத்தலாம். குறிப்பாக வறட்சியான சருமத்தினரின் சருமத்தில் ஏற்படும் வறட்சியைப் போக்கக்கூடியது. அதற்கு அவகோடோ பழத்தை அப்படியே சருமத்தில் தடவலாம் அல்லது அவகோடோ எண்ணெயை சருமத்திற்கு தடவலாம்.



**குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்**



# சிறுவர் கதிர்



## காகமும் நாகபாம்பும்

ஒரு காட்டில் காகம் ஒன்று கூடுகட்டி வாழ்ந்து வந்தது. அக் காகம் திருமணமாகி ஆண் காகமும் பெண் காகமும் அக்கூட்டிலே வாழ்ந்தனர். பல நாள்கள் சென்ற பின் பெண் காகம் 5 முட்டைகள் இட்டது. அதனைக் கண்ட ஆண்காகம் தான் ஐந்து பிள்ளைகளுக்கு தந்தையாகப் போவதையிட்டு மிக மகிழ்ச்சியடைந்தது. பெண்காகம் முட்டைகளை அடைகாத்து வந்தது. ஆண் காகம் பெண் காகத்திற்கு வேண்டிய இரையைத் தேடிக்கொடுத்து பெண் காகம் அடைகாப்பதற்கு உதவி செய்தது. இருவரும் தமக்கு 5 பிள்ளைகள் பிறக்கப் போகிறார்கள் என்று மிகவும் சந்தோசமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தனர்.

அக் காட்டில் ஒரு நரியும் குடும்பமாக வசித்து வந்தது. அந்த நரியும் காகமும் நல்ல நண்பர்களாக வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் ஆண்காகம் இரைதேடி வரும் வழியில் வேட்டைக்காரர்கள் காட்டினுள் நுழைவதைக் கண்டது. உடனே காகம் நரி நண்பர் வசிக்கும் இடத்திற்கு சென்று வேட்டைக்காரர் காட்டில் வருவதையும் பாதுகாப்பாக எங்காவது மறைந்து இருக்கும் படியும் கூறியது. அத்துடன் தனக்கும் ஐந்து பிள்ளைகள் பிறக்க உள்ளார்கள் என்றும் நண்பனான நரிக்கு கூறியது. அப்போது நரி தங்களுக்கு பாட்டி வைக்கும்படி கேட்டது. காகமும் அன்று இரவு பாட்டி தர அழைக்க வருவதாக கூறியது. உடனே நரியார் குடும்பம் நன்றி கூறி விட்டு ஓடி ஒழித்துக் கொண்டது.

ஆண் காகம் இரையுடன் பெண்காகம் அடைகாத்துக் கொண்டிருந்த கூட்டுக்கு வந்தது. அப்போது பெண்காகம் அழுது கொண்டிருந்தது. காரணம் வினவிய போது. பாம்பொன்று வந்து தனது முட்டைகளை குடித்துவிட்டதாக கூறிப் புலம்பியது. அதனைக் கேட்ட ஆண்காகமும் விம்மி விம்மி அழுதுடன், அந்தப் பாம்பு தமது பிள்ளைகளை அழித்ததுடன் தமக்கு எனிமேலும் பிள்ளைகள் பிறக்க விடமாட்டாது அதனை கொன்றே தீருவேன் என சபதம் எடுத்தது.

மறு நாள் நரியார் காகம் இருந்த கூட்டடிக்கு சென்று காகத்தை அழைத்தது. காகம் இரண்டும் பறந்து வந்து சோகமாக இருந்தன. அதனைக் கண்ட நரி உங்களுக்கு என்ன நடந்தது என்று கேட்டது. அப்போது ஆண் காகம் முழு விவரத்தையும் சொல்லி புத்திசாலியான நரியிடம் பாம்பைக் கொல்ல ஒரு உபாயம் சொல்லும் படி கேட்டது. நரியும் அவர்களுக்கு எப்படியும் உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் ஆலோசித்தது. மறு நாள் நரி வெளியே சென்ற போது மகாராணியார் ஆற்றில் குளிப்பதற்காக தோழியருடனும் காவலருடனும் வருவதை அவதானித்தது. மகாராணி தனது நகைகளை கழட்டி ஆற்றங்கரையில் வைத்து விட்டு குளித்துக் கொண்டிருந்தார்.

உடனே நரிக்கு உபாயம் தோன்றியது மாகாராணி நாளைக்கு குழிக்கும் போது கரையில் வைத்த மணிமாலையை காகம் தூக்கிக் கொண்டு போய் பாம்பின் புற்றுக்குள் போட்டால் அரச காவலாளிகள் பாம்பைக் கொலை செய்து நகைகளை மீட்பார்கள் அப்போது எனது நண்பரின் எதிரி இறந்து விடுவான் என திட்டம் போட்டு, தனது திட்டத்தை காகங்களுக்கு கூறியது. மறுநாள் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே காகங்களும் நரியும் அவ் ஆற்றங்கரைக்குச் சென்று சரியான சூழ்நிலை வரும் வரை காத்து இருந்தன.


மகாராணியாரும் வழக்கம் போல் நகைகளை கழட்டி ஆற்றங்கரையில் வைத்து விட்டு குழிக்கச் சென்றாள். இதனைக் கண்ட காகம் இதுதான் தருணம் என எண்ணி ராணி நகைகள் வைத்திருந்த இடத்திற்குச் சென்று மணிமாலையை தூக்கிச் சென்றது. காவலாளிகள் காகத்தை பின் தொடர்ந்தார்கள். காகம் அந்த மணிமாலையை எதிரியான பாம்பு இருந்த புற்றினுள் போட்டது. காவலாளிகள் மணிமாலையை எடுக்க முயற்சித்தார்கள் அப்போது அதனுள் இருந்த பாம்பு சீறிக்கொண்டு வெளியே வந்தது. உடனே பாம்பை அடித்து கொலை செய்தபின் மணிமாலையை மீட்டுச் சென்றார்கள். அதன் பின் காகங்கள் நின்மதியாக வாழ்ந்தன.

ஆபத்தான நேரத்தில் காகம் நரியின் குடும்பத்தைக் காப்பாற்றியதால் நரியின் உதவியுடன் காகம் தனது குடும்பத்தை காப்பாற்றியது.

## பழமொழிகளும் கருத்துக்களும்

**அழுதபிள்ளை பால்குடிக்கும் - முயற்சி**
**அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு - ஒற்றுமையே பலம்**
**அடாது செய்வோர் படாதுபடுவார் - செய்வினைப்பயன்**
**அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி - முன்மாதிரி**
**அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம் - உத்தம நட்பு**
**ஆழம் அறியாமல் காலைவிடாதே - ஆராய்ந்து செய்**
**இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை - திருப்தியற்றமனம்**
**இளமையில் கல்வி சிலையில் எழுத்து - இளம்வயது கல்வி அழியாது**
**இறக்கப்போனாலும் சிறக்கப் போ - வறுமையில் செம்மை**
**இளங்கன்று பயமறியாது - வாலிபத்துணிவு**
**இட்டுக்கெட்டார் எங்கும் இல்லை - தர்மம் செய்**
**உப்பிட்டவரை உள்ளளவும் நினை - நன்றி மறவாமை**
**உப்பில்லாப்பண்டம் குப்பையிலே - முக்கியத்துவத்தின் உயர்வு**
**உண்ணாச் சொத்து மண்ணாப்போகும் - உலோபம் கூடாது**
**அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் - விடாமுயற்சி**
**ஆனைக்கு ஒருகாலம் பூனைக்கு ஒருகாலம் - காலம்மாறி வரும்**
**எலிவளையானாலும் தனிவளை வேண்டும் - தனிக்குடித்தனம் சிறந்தது**
**எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லக்கு - வீண்பெருமை**

**வி .விசாகன் - தரம் 08 - யாழ் .இந்துக்கல்லூரி**



*மவுண்ட் ரஷ்மோர் -தேசிய நினைவகம் - ஒரு பெரிய மலை உச்சியில் பிரமாண்டமான அளவில் நான்கு பேரின் தலைகள் சிலைவடிவில் செதுக்கப்பட்டிருக்கின்றன.*

*இது ரஷ்மோர் தேசிய நினைவகம் என்று அழைக்கப்படுகிறது.*



*அந்த நான்கு பேரும் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளான ஜோர்ஜ் வாஷிங்டன், தோமஸ் ஜெபர்சன், தியோடர் ரூஸ்வெல்ட், ஆபிரிகாம் லிங்கன் ஆகியோர். இந்த 60 அடி உயர முகங்கள் 500 அடி உயரத்தில் கவர்ந்திழுக்கின்றன. இந்தச் சிலைகளை வடிவமைத்தவர் கட்ஸன் பார்கலம் என்பவர்.*

ப.கலைச்சுரபிதரம்
தரம் - 9E
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

# RADIANT DAWN

**A Sunday Supplement in English to Kalaikkathir**

**Page I** English for all **Sunday the 06th of February 2022**

**We welcome students' articles in word for publication**

**-Editor-**

kalaikkathiredu@gmail.com

## My Home Town



Jersey city is where I was born
I walk up to see many dawns.
It's not a bad city it was a place to live
But there were many times it didn't forgive
The streets were through the winter's cold
It's city you can embrance but one you can never bold
The streets will own you and rule you
There's not too much one can do
After some years you'll be ready to leave
It will no longer leave the things you need
That's when you know it's time to leave
Because in the city you can longer believe
Now people grow up there and decide to stay
But so many many more just go different way

**SENTHURAN**
**Grade : 10 C**
**JAFFNA HINDU COLLEGE**

## Let's Adopt a Tiger



Fringe Four-year-old Lizzy sat in her mother's lap while they read a book about tigers and how they are an endangered species. The book used some pretty big words that Lizzy didn't know, so her mother had to explain what they meant. Lizzy learned that tigers are decreasing in number, and the places where they can live and freely roam are getting smaller and smaller, partly due to the expansion of cities into their territory. Some countries have started programs to help protect the tigers from becoming extinct - another big word Lizzy learned from the story. It means that the tigers will eventually all be gone, if something isn't done to save them. National Save the Tiger Month was begun to help create awareness about the problems the tigers are having. At the end of the book, Lizzy suggested that her family adopt a tiger. Her mother smiled and reminded her that they live in a very small house with no room for a great big tiger. They would have to find another way to help the tigers.

***Choose the correct answer and write its letter on the space.***

1. How old is Lizzy in the story? ..................
2. What were Lizzy and her mother reading about? ..................
3. The tiger is an species. ..................
4. Tigers are in danger of becoming ..................
5. Lizzy suggested her family a tiger. ..................

**a) adopt / b) extinct / C) tigers / d) endangered / e) four years old**

My name is Pacho. I am a panda. I am a type of bear. I live in a place called China. I live in a forest with lots of bamboo. Bamboo is a type of grass. It is my favourite food. I eat lots of bamboo every day. I spend most of my day resting in the trees. Sometimes I go to sleep in the trees. I also sleep in caves. I am a good climber. I can swim too. I have a black and white wooly coat to keep me warm. I have sharp claws and large teeth. I have a round head and small black ears. I am very shy.



**Circle around the correct letter.**

***1. What is Pacho?***
*a) A koala b) A panda C) A sheep d) A dog*

***2. Pacho is a type of:***
*a) Monkey b) Cat c) Bear d) Bird*

***3. Where does Pacho sleep?***
*a) in a hole b) In a nest c) In trees and caves d) On the floor*


***4. What does Pacho eat a lot of every day?***
*a) Meat b) Fruit c) Fish d) Bamboo*

***5. Is Pacho a good climber?***
*a) No b) Yes*

***6. Where does Pacho live?***
*a) China b) England c) France d) Spain*

## Cells: Building Blocks of Living Things by Cindy Sherwood

To build a tower of blocks, you put one block on top of another until it creates a tall structure. With living things, there is a type of building block that does the same thing, creating the structure of who we are. This building block of all living things is called a cell.




A cell that is cut in half will not survive. That makes a cell very special. It is considered the smallest part of an organism that can survive on its own, so it is the most basic unit of life. the cell. This membrane separates one cell from others and protects it from its outside environment. The membrane also allows some materials to enter and leave the cell.

There are many different types of cells, which serve different purposes in how plants and animals function. There are cells that take in nutrients from food and other cells that turn those nutrients into energy. Some cells provide structure to an organism.

Other cells can make copies of themselves. Certain types of cells contain organelles. Just like the name sounds, organelles are similar to small organs of the human body and perform specific tasks necessary for an organism to survive.

A human being may live to be a hundred years or older. But that does not mean all of our cells live that long. In fact, depending on the type of cell, some only live for a few days while others may live as long as a year. In fact, every single minute, about 300 million cells die in your body. But there is no need to worry you will run out of cells because so many die all the time. About 300 billion new cells are produced every day in the human body or girl. Who could imagine that something as tiny as a cell could be so important to all of life.

## Answer the Questions

1. What would you find inside a human cell if you could inspect it closely?
   a. smaller living organisms
   b. genetic material
   c. bacteria d. smaller cells

2. According to the information in the article, will a human being have the same set of cells that he or she is born with when he or she is old? Why or why not?
------------------------------------------------------------
------------------------------------------------------------

3. Read the following statement.

Cells cannot survive without the support of other cells.
On the lines below, indicate whether this statement is true or false. Then explain why the statement is true, or why it is false.
------------------------------------------------------------
------------------------------------------------------------

4. In your own words, describe what some of the earliest life forms were like.
------------------------------------------------------------
------------------------------------------------------------


5. According to the information in the article, what does the membrane of a cell do?
------------------------------------------------------------
------------------------------------------------------------

**Happiness is not the absence of problems but the ability to deal with them.**

# Parts of an Atom

The atom is the basic building block of matter. Atoms combine to form pure elements, compounds, and complex forms like computers and phones. Atoms are the smallest particle of matter than cannot be further subdivided using chemical means. In order to understand how atoms interact with each other, you first need to understand the basic parts of an atom. There are 3 main components of atoms:

**Protons –** The number of protons in an atom is often denoted by the letter Z. Each proton carries a positive electrical charge. The number of protons determines the type of atom. For example, an element with 1 proton is hydrogen. One with 2 protons is helium. The number of neutrons and electrons don't have any bearing on the type of atom. In fact, an atom does not even need neutrons or electrons. The most common form of hydrogen consists of a single proton and nothing else. A proton consists of component elementary particles: 2 up quarks and 1 down quark.




**Neutrons –** The number of neutrons in an atom is commonly indicated using the letter N. A neutron is about the same size as a proton, but it is electrically neutral. Each neutron consists of 1 up quark and 2 down quarks.

**Electrons–**Electrons are extremely tiny, compared with protons or neutrons. The mass of an electron is only 1/1836th that of a proton. Each electron carries a negative electrical charge. Each electron consists of a single elementary particle.


The atomic mass number of an atom is denoted by the symbol A and equals the sum of the number of protons and neutrons or Z + N.

**Nucleus and Electron Shell**

The parts of each atom are arranged to form a central core or atomic nucleus and an outer set of electron shells.

**Atomic Nucleus –** Protons and neutrons collectively are termed nucleons because they bind together to form the nucleus of each atom.

# External Frog Anatomy




**Before starting any dissection, it's important to look around at the external anatomy, or anatomy visible outside the body. Our frog can be divided into the dorsal, or top side, and the ventral, or bottom side. Many frogs have patterned skin on their dorsal side and a white or yellow ventral side to camouflage them in their aquatic habitat.**

**Frogs have two forelimbs in the front, or anterior end, and two powerful hind limbs in the rear, or posterior, for swimming. Each forelimb has four toes, but the hind limbs have five toes with webbing in between. The webbing creates resistance in the water, allowing frogs to be agile swimmers.**

**The head is at the anterior end of the frog, containing the sensory organs the frog needs to navigate its environment. Its two eyes are located on the top of its head. Although this might seem strange to us, frogs live a submerged life. Having eyes on top, rather than in the front of their head allows them to see while they swim and stay mostly submerged in water.**

**You also can notice the frog's version of our ears, called tympanic membranes, on both sides of its head. These organs allow the frog to detect vibration as sound.**

**Rotate your frog, and you'll see an opening at the posterior end called the cloaca. This opening allows for waste, eggs, or sperm to be discharged. It's a multipurpose opening that serves the same purpose as our anus, urethra, and genital openings.**

# Parts of Plants and Their Functions

**The Function of Roots:**

Roots have the most crucial function of absorbing water and minerals from the soil. Another of their most fundamental functions is to act as a support system for the plant so that it stands upright on the ground. Other secondary functions of roots include storing food for future use and regulating the growth of plants.

The Function of Stems:

The function of the stem is to produce fruit, flowers, and leaves. A primary function of the stem is to provide a foundational structure and protection to the plant. Another notable function of the stem is to aid in the vegetative reproduction of plants. Stems protect the plants from grazing animals by transforming their axillary buds into thorns. In hot and humid areas like deserts, there are a few plants whose stems are capable of transforming themselves into broad and pudgy structures. Such stems are capable of storing a huge amount of food for future purposes and preventing the excess loss of water.

**The most unique qualities of stems are as follows:**

Support/Foundation: A vital function of the stem is to act as a medium to all the important parts of a plant like buds, flowers, leaves, and fruits for the plant. They are the main foundational aspect of the plant that makes it stand firm and erect in the soil.

Conveying and Hauling: One of the primary functions of the stem is to transport food materials and nutrients that are stored in the roots to the remaining parts of the plant. They also transport the food prepared by the leaves to the rest of the plant body.

Storehouse: Stems are the storehouse of food prepared by the leaves. Stems store the food prepared by the leaves in the form of starch.

**Procreation: Vegetative reproduction is one of the primary roles of a stem**.

The Function of Leaves: Since plants contain chlorophyll, most of the food required by the plants is prepared by them with the help of water, sunlight and carbon dioxide. The primary functions of leaves are listed below:

**Preparation of Food Through Photosynthesis:**

The leaves of plants get their required air, water, and sunlight and prepare the food needed for plants through the process of photosynthesis.

**Transpiration:**


The process of transpiration is one of the fundamental functions of leaves. Transpiration is the process in which excess water is removed from the plants through the stomata.

**Procreation:**

Leaves sometimes play a role in reproduction as well. There are some particular leaves like Bryophyllum that reproduce new leaves.

**The function of seed**

They aid in the germination of new plants.




Food reservoirs in the form of cotyledons and endosperm are found in the seeds. The embryo inside is protected by the seed coat, which is protective in nature.

Plants are vital components of the environment that require food to live just like human beings. A plant is comprised of different parts where each part has a unique function to perform. The different parts of a plant include roots, stems, leaves, flowers, seeds, and fruits. Roots have the function of absorbing water and minerals from the soil whereas the primary functions of stems are supporting, transporting, storing, and reproducing. Leaves form a vital component of plants as food for plants is prepared in them. Leaves are capable of performing photosynthesis and transpiration.





# ஆச்சரியமான ஹொங் கொங் நாடு



ம .கிருஷாந்
தரம் 8 C
யாழ்.இந்து கல்லூரி

சீனாவின் தென் கிழக்கு கரையில் ஹொங் கொங் அமைந்துள்ளது .இது 200 இற்கும் மேற்பட்ட தீவுகளை உள்ளடக்கியது. ஹொங் கொங் சீனாவின் ஒரு அங்கமாகவே காணப்பட்டது. 1841 ஆம் ஆண்டு பிரித்தானியக் கடற்படை ஹொங் கொங்கை ஆக்கிரமித்து கொண்டது.1898 ஆம் ஆண்டில் சீனா ஹொங் கொங்கையும் புதிய பிராந்தியங்களையும் பிரித்தானியாவுக்கு 99 வருட குத்தகைக்கு வழங்கியது.

1984 ஆம் ஆண்டில் சீனா - பிரித்தானியா கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது குத்தகைக்காலம் 1997 ஜூன் மாதம் முடிவடைய ஹொங் கொங்கை சீனாவிடம் ஒப்படைக்க பிரித்தானியா இணக்கம் தெரிவித்தது. 1997 ஆம் ஆண்டிற்கு பிற்பாடு ஹொங் கொங்கின் அரசியல் நிலைப்பாடு எது எப்படியோ என்று அஞ்சி ஆயிரக்கணக்கான செல்வந்தர்களும், கல்விமான்களும் கனடா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு புலம்பெயர்ந்தனர். உலகின் பிரதான வர்த்தக நிலையங்களில் ஒன்று ஹொங் கொங். இது 400 சதுரமைல் பரப்பளவைக்கொண்டது. இங்கு வசிக்கும் மக்கள் தொகை 68 லட்சமாகும் உலக ரீதியில் இது 8 ஆவது பெரிய வர்த்தக பொருளாதாரத்தைக் கொண்டது.

உலகின் 7 ஆவது பாரிய வெளிநாட்டு நாணய ஒதுக்கீட்டைக் கொண்ட நாடு ஹொங் கொங்.

ஹொங் கொங்கின் இளைஞர்களில் நான்கில் ஒருவர் உயர்கல்விபெறுகின்றனர், ஜப்பானுக்கு அடுத்தபடியாக ஆகக் கூடுதலான வருடங்கள் உயிர்வாழ்பவர்கள் ஹொங் கொங்கில்தான் இருக்கிறார்கள். அமெரிக்கா, ஜேர்மனி , ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளைவிட இங்கு சிறுவர் இறப்பு வீதம் மிகக் குறைவு.

உலகின் எந்தவொரு நாட்டிலும் இல்லாத ஒரு சதுர மைல்களுக்கு கூடுதலான செல்லுலார் போன்களும் ரோல்ஸ்ரோய்ஸ்களும் அதிகமாக காணப்படும் நாடு ஹொங் கொங்.

ஹொங் கொங் நாட்டவர்கள் பேசும்மொழி கண்டனீஸ் இந்தமொழியின் எழுத்துவடிவம் கற்பிக்கப்படுவதில்லை. பேச்சுவழக்கில் மாத்திரமே உண்டு. சீனாவின் மண்டரீன் மொழி பேசப்படுகிறது . ஹொங் கொங்கில் நிறைய வானுயர்ந்த கட்டடங்கள் காணப்படுகின்றன. மாடமாளிகைகள் போன்ற கடைத் தொகுதிகளும் சொகுசு ஹோட்டல்களும் உள்ளன.



ஹொங் கொங் தென்கிழக்கு ஆசியாவிலேயே செல்வந்த நாடு. கீழைத்தேய பாரம்பரியங்களும் மேலைத்தேய நாகரிகமும் சங்கமிக்கும் நாடு ஹொங் கொங். தென்கிழக்காசியாவில் பாரிய கொள்கலன் துறைமுகமும் இங்குதான் காணப்படுகிறது.ஹொங் கொங் உல்லாசப்பயணிகள் மூலமாக பெருமளவு வருவாயை சம்பாதிக்கிறது. இங்கு சிறந்த சுரங்க ரயில் போக்குவரத்து, டிராம் பஸ்சேவை போன்றன காணப்படுகின்றன.



உல்லாசப்பயணத்துறையில் அதிகரித்த வருமானத்தை ஹொங் கொங் சம்பாதிக்கிறது. கௌலூனில் அமைவிடத்தை பெற்றுள்ள கைடட் விமான நிலையம் ஆசியாவிலேயே பெரியளவிலான விமான நிலையமாகும். லண்டௌ தீவின் வடபகுதியில் செக்லப்கொக் என்ற பகுதியில் அதிநவீன விமானநிலையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இந்த விமான நிலையத்தை நிர்மாணிக்க 200 கோடி டொலர் செலவாகிறது .

ஹொங் கொங்கில் உல்லாசப்பயணிகளைக் கவர்ந்திழுக்கும் இடமாக ஓசன்பார்க் விளங்குகிறது.

உலகியேயே நீண்ட நகரும்படி இங்கே உண்டு. இங்கு பிரதானமாக சீன வாழ்க்கை முறைகளை சித்தரிக்கும் நூதனசாலை உண்டு.

இங்கு ஒருபகுதியில் சோதிடம் சொல்பவர்கள் கட்டணத்துக்கு ஆருடம் கூறிக்கொண்டு இருப்பார்கள். ஒருபகுதியில் கராத்தே விற்பன்னர்களின் செயல்முறை பயிற்சி இடம்பெறும்.டொல்பின் மீன்களின் சாகச நிகழ்ச்சியும் உண்டு.புதிய பிரதேசத்தில் 10 ஆயிரம் புத்தர்சிலைகளைக் கொண்ட பௌத்த ஆலயம் உண்டு. லன் டௌ தீவில் போலின் மடாலயத்தில் அழகான புத்தர் சிலைகள் காணப்படுகின்றன.

# கல்விக்கதிர்

- அகரன் -

## ஆரம்ப காலத்தில் நீர்ப்பாசன கைத்தொழில்



பிரித்தானியர்கள் மேற்கொள்வதற்கு ஏற்றுக்கொண்ட முதலாவது பிரதான நீர்ப்பாசனக் கைத்தொழில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கிரம ஓயாவுக்கு குறுக்கே கிரம அணையை அமைத்ததாகும். அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கிரிவாபத்துவ கிராமங்களில் வயல் காணிகளின் பயன்பாட்டுக்காக நீரை ஒழுங்குறுத்துவதற்காக இது 1825 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

### புதிய நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டம்

நீர்ப்பாசனம் மற்றும் வயல் காணிகளைப் பயிர்ச் செய்வது தொடர்பிலான பழைமைவாய்ந்த பாரம்பரியங்களுக்கு மீண்டும் உயிரூட்டுவதற்காகவும் வலுவுள்ளதாக்குவதற்கும் 1856 இற்கு முன்னர் இருந்த கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளையும் மீள உள்ளடக்கிய புதிய நீர்ப்பாசன கட்டளைச் சட்டமான 1867ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க சட்டமும் அங்கீகரிக்கப்பட்டது. ஏதேனும் உத்தேச நீர்ப்பாசன கைத்தொழில் மூலம் பயன்களைப் பெறுவதற்கு வாய்ப்புள்ள காணி உரிமையாளர்களின் கருத்துக்களை அறிகின்றபோது பின்பற்ற வேண்டிய நடவடிக்கைமுறை இதில் குறிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் நன்கொடைக்கு விண்ணப்பிப்பது பொருத்தமானதாக இருந்த அதேவேளையில் அரசாங்கம் முற்பணமாக வழங்குகின்ற ஏதேனும் ஒருதொகைப் பணத்தை வருடாந்த பத்து தவணைகளில் திருப்பிச் செலுத்துவதற்கு கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டது. பயன்களைப் பெறுகின்ற பிரதேசம் விரிந்து பரந்து காணப்பட்டாலும்கூட செலவுகளை உள்ளடக்குவதற்கு ரூ. 20 போதாது என்பது விரைவில் தெரியவந்தது. மேலும் 1887இல் நடைமுறைப்படுத்துவதற்காக மொல்ஸ்வர்த் பின்வரும் நீர்ப்பாசன கைத்தொழிலை முன்மொழிந்தார்.

மட்டக்களப்பு றுகம் வாவி - 2,400 ஏக்கர்

பொரலெஸ்கமுவ வாவி - 36 ஏக்கர்

பதுளை அருகில் சாம்பல் கால்வாய்

வெலிகம அருகில் உள்ள போரலே - 300 ஏக்கர்

மாத்தறை அருகில் உள்ள டெனகம - 1,600 ஏக்கர்.

மொணராகல புத்தள கால்வாய் - 1,200 ஏக்கர்

அல்லை வாவி - 1,600 ஏக்கர்

பெரிய குளம் - 600 ஏக்கர்

### பொதுவேலைத் திணைக்களத்தின் நிர்வாக அறிக்கையில் முதலாவது நீர்ப்பாசன கைத்தொழில் பட்டியல்

மோல்ஸ்வர்த் 1870ல் ஓய்வு பெற்றார். அத்துடன் நீர்ப்பாசன கைத்தொழிலுக்காக செய்த செலவுகள் 1871 இல் முதல்முறையாக பொது வேலைத் திணைக்களத்தின் நிர்வாக அறிக்கையில் தனியான ஒரு விடயமாக சமர்ப்பிக்கப்பட்டது. எவ்வாறாயினும் நீர்ப்பாசனத்துக்காக செய்த செலவுகள் மொத்த வரவு - செலவு திட்டத்தில் 1% விட குறைவாக இருந்தது. பொதுவேலைத் திணைக்களம் முதல் முறையாக தனதுநிர்வாக அறிக்கையில் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் நிர்மாணப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்த நீர்ப்பாசனங்களின் பட்டியல் ஒன்றை உள்ளடக்கியது.

1871 நிர்வாக அறிக்கையில் உள்ளடங்கியிருந்த விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

#### பூர்த்திசெய்யப்பட்ட நீர்ப்பாசன கைத்தொழில்கள்

தெதுறு ஓய மேல் சுலுசு
பெரிய குளம் கால்வாய்
தெனகம மற்றும் உயன்வெள
ஹொரபொர வாவி
குடா வாவி
கின்சிகுண நீர்ப்பாசன கைத்தொழில்
றுகம் வாவி

#### நிர்மாணப் பணிகள் நடைபெறுகின்ற நீர்ப்பாசன கைத்தொழில்கள்

அல்லை வாவி
திவ்லான வாவி
தெதுறு ஓய கால்வாய்
கம்புக்குமுனை வில்லு
குருனேகன்கே ஆறு அணை
கொஸ்பொத்து ஓய, கும்புகல்பிட்டிய



**MODEL EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECT TO SCHOOL FOR THE AWARD OF BURSARIES.**

## மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை

வினாத்தாள் ஆக்கம்
புலமைப்பாதை ஆசிரியர்
திரு.சு.அஜீந்தன் - BA

**வினாத்தாள் - II**

**1 மணித்தியாலம்**

**சுட்டெண் : .........**



மாணவர்களின் நல்வித்தோழன் புலமைப்பாதை

**(சென்றவாரத் தொடர்ச்சி)**

**இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. பல இதழ்களைக் கொண்ட மலர்
(1) செவ்வரத்தை (2) அந்தூரியம் (3) தாமரை

31. இரவு நேரப் பறவை அல்லதது
(1) ஆந்தை (2) கிளி (3) கானாங்கோழி

32. பதிவுத்தபாலில் ஒட்டப்பட வேண்டிய முத்திரையின் குறைந்த பட்ச பெறுமானம்
(1) ரூபா 30.00 (2) ரூபா 35.00 (3) ரூபா 45.00

33. கண்டிய காலத்து ஒரு அரசன்
(1) 1ம் விஜயபாகு (2) துட்டகைமுனு (3) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

34. கடற்கரை இல்லாத நகரம்
(1) கேகாலை (2) மட்டக்களப்பு (3) புத்தளம்

35. மின்சாரக் கம்பிகளில் தாக்கப்பட்டு பெரும்பாலும் மரணம் அடைவது
(1) காகம் (2) வௌவால் (3) கிளி

36. விளையாட்டு மைதானத்தில் காணப்படாத ஒன்று
(1) கால்பந்து வலை (2) கைப்பந்து வலை (3) நூலகம்


37. வாகன உரிமத்தினைப் புதுப்பிக்க வேண்டிய இடமானது
(1) கிராம சேவகர் அலுவலகத்திற்கு
(2) பிரதேச செயலகத்திற்கு
(3) போக்குவரத்து அமைச்சுக்கு

38. இலங்கையின் தேசியக்கொடியின் முடிவைக் குறிக்கும் நிறம்
(1) பச்சை (2) மஞ்சள் (3) செம்மஞ்சள்

39. அடிக்கடி இதய நோய் ஏற்படுவதற்கான காரணம்
(1) புளிப்பு உணவுகளை உண்பது
(2) புதிய காய்கறிகள் மற்றும் பழங்களை உண்பது
(3) அதிக கொழுப்புள்ள உணவுகளை உண்பது

40. மாணவன் ஒருவன் ஒரு குவளையில் 200ml தண்ணீரை எடுத்து, அதில் சுமார் 10ml உப்பு கலந்து அதில் ஒரு முட்டையை வைத்தான். அதன்படி முட்டை காணப்படும் வடிவத்தினைத் தெரிவு செய்க.

(1) (2) (3)



41. புகையிரத சேவையில் இல்லாத செயற்பாடு
(1) அதிக எண்ணிக்கையிலான பயணிகள் ஒரே நேரத்தில் செல்லலாம்.
(2) அதிக எண்ணிக்கையான பொருள்களை கொண்டு செல்லலாம்.
(3) எல்லா இடத்திற்கும் செல்லலாம்.

42. இலங்கைக்கு உரிய பாரம்பரியத்திற்குரியது
(1) யால சரணாலயம் (2) குமண சரணாலயம் (3) சிங்கராஜ வனம்

43. இரண்டு காந்தங்கள் ஒன்றாக இணைப்பட்டுள்ள படத்தினைத் தெரிவு செய்க.

| N S \| N S | N S \| S N | S N \| N S |
|---|---|---|
| (1) | (2) | (3) |

44. மீன்களின் சுவாச உறுப்பு
(1) தோல் (2) பூக்கள் 3) வாற்செட்டை

45. நகரங்களில் சேகரிக்கப்படும் குப்பைகளை அகற்ற சிறந்த முறை
(1) எரித்தல் (2) மீள் சுழற்சி (3) புதைத்தல்

46. சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்
(1) 1929 (2) 119 (3) 1919


47. நீர் சம்பந்தப்பட்ட சம்பிரதாயம் அல்லாதது
(1) அபிஷேகம் (2) கசிவு (3) திருமண நிகழ்வு

48. ஒருவரின் மரணச்சான்றிதழை பெற செல்ல வேண்டியது
(1) வைத்தியசாலை (2) அஞ்சல் அலுவலகம் (3) பிரதேச செயலகம்

49. பந்தயத்திற்கு பயன்படுத்தப்படும் விலங்கு
(1) குதிரை (2) புலி (3) யானை

50. சுற்றுப்புற வீடுகளில் உள்ளவர்களுக்கு அசௌகரியங்களை செய்யும் செயல் அல்லாதது
(1) இரவு வரை பாடம் படித்தல்
(2) அதிக ஒலியில் பாடல் கேட்டல்
(3) அடிக்கடி சண்டை

51.



இச்சின்னத்திற்கு பொருந்தாத பொருள் எது?
(1) பிளாஸ்டிக்
(2) மரம்
(3) கடதாசி அட்டை

52. தோட்டம் ஒன்றின் ஒரு நன்மை அல்லாதது
(1) மனதிற்கு இன்பம் தரும்
(2) நேர விரயம்
(3) பொருளாதார விரயம்

53. உணவு பழுதடைதலுக்கு காரணமாக அமைவது
(1) மழை (2) உணவு மூடாமை (3) காற்று

54. நாங்கள் தகவல்களைப் பெறுவதற்கான மின் ஊடகம் அல்லாதது
(1) இணையம் (2) தொலைபேசி (3) சுவரொட்டி


55. சமூக விரோதச் செயலானது
(1) மருந்துவமனைக்குச் செல்வது
(2) கழிவுகளை குப்பைத் தொட்டியில் இடுதல்
(3) குழந்தைகளை வேலைக்கு அமர்த்துதல்

56. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த ஆண்டு
(1) 1948 (2) 1515 (3) 1796

57. உடுக்கோலம் அல்லாதது
(1) பெருநாய் (2) பெருங்கரடி (3) பெருமுயல்

58. மின்சாரத்தை கடத்தாத பொருள்
(1) செப்புக்கம்பி (2) இரும்பாணி (3) PPC குழாய்

59.



இந்தச் செயலில் இருந்து கிடைக்க முடியாத ஒன்று
(1) தண்ணீரை சூடாக்குதல்
(2) நீர் அதிகரிப்பு
(3) நீர் ஆவியாதல்

60. 'காட்டில் வளரும் தாவரங்கள் நாம்' என்ற தலைப்பில் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாக அமையப் பெற்ற மூன்று வாக்கியங்களை எழுதுக.

.................................................................................................................

.................................................................................................................

**(முற்றும்)**

புதிய கல்வியாண்டு - 2022
LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
zoom வகுப்புக்கள்
Grade 2 - O/L
Medium
TAMIL / ENGLISH
ICT Tamil
Maths History
English Science
Commerce Sinhala
Learn Easy வெளியீடு
புலமைவளரி
Call:
76667 4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 2 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk



# விவசாயி

- குளத்தூரான் -

# மஞ்சள் பயிர்ச் செய்கை





குர்குமா டொமஸ்ரிக்கா என்ற தாவர வியல் பெயரால் அழைக்கப் படும்.

மஞ்சள் பயிரானது இந்தியாவில் 5,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பயன் படுத்தப்பட்டு வருகின்றது.

## உற்பத்திகள் மற்றும் பயன்கள்

மஞ்சள் உலர்ந்த வடிவமைப்பில் அல்லது பொடி செய்த அமைப்பில் சந்தை முழுவதும் கிடைக்கின்றன. கறி கலவைகள் தயாரிப்பின் போது மஞ்சள் ஒரு உள்ளீடாக பயன்படுகின்றன. மஞ்சளில் இருந்து ஒலியோரசின் மற்றும் எண்ணெய் பிரித்தெடுக்கப்படுகின்றன. இது முக்கியமாக உணவு கைத்தொழிலில் சுவையூட்டுவதற்காகவும் நிறமூட்டுவதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றது. அது மட்டுமல்லாமல் மஞ்சள் ஆடைக் கைத்தொழிலில் நிறமூட்டுவதற்காகவும் மற்றும் குறிப்பிட்ட நிறப்பூச்சுக்களை உற்பத்தி செய்வதற்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.



## பயிர்ச்செய்கை பிரதேசங்கள் மற்றும் காலநிலை காரணிகள்

மஞ்சள் இலங்கையில் ஒரு தனிப்பயிராகவும் மற்றும் தென்னையுடன் இடைநிலைப் பயிராகவும் ஈரவலயத்திலும் இடைவெப்ப வலயத்திலும் பயிர் செய்யப்படுகின்றது. குருணாகலை, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் பிரதானமாக வளர்க்கப்படுகிறது. மஞ்சள் பயிற்ச்செய்கைக்கு நன்கு வடிந்தோடக் கூடிய சேற்று களிமண் மிகவும் பொருத்தமானது மற்றும் மழைவீழ்ச்சி ஆண்டிற்கு 1,500mm, வெப்ப நிலை $20^{0}C-35^{0}C$ அவசியமானதாகும்.




## நடுகைப்பொருள்

தாய் வேர்த்துண்டு கிழங்குகள் மற்றும் விரல் வேர்த்தண்டு கிழங்குகள் என இரண்டு வகையான வேர்த்தண்டு கிழங்குகள் உள்ளன. முதிர்ந்த விரல் தண்டுக் கிழங்குகள் மிகவும் பொருத்தமான நடுகைப்பொருளாகும். வேர்த்தண்டு கிழங்கின் ஒரு துண்டின் எடை 30.5கிராம் மற்றும் 1 - 2 மொட்டுகளுடன் இருத்தல் வேண்டும். நடுகைப்பொருள்கள் நோய் தாக்கம் இல்லாததாக இருக்க வேண்டும். அத்துடன் நடுகைப்பொருளை அதிக விளைச்சல் தரக்கூடியவற்றில் இருந்து தெரிவு செய்து கொள்ளவேண்டும். நடுகை மேற்கொள்வதற்கு முன்னர் வேர்த்தண்டு கிழங்குகளை நடுகைக் காலத்தின் போது பங்கசு வளர்ச்சியை தவிர்த்து கொள்ளும் முகமாக 10 லீற்றர் தண்ணீரில் 30கிராம் பங்கசு கொல்லியில் கலந்து 5நிமிடங்களுக்கு அமிழ்த்தி எடுக்கவும். ஹெக்டேயருக்கு 1,500 - 2,000 கிலோகிராம் நடுகைப் பொருள் தேவைப்படுகின்றது.

## நடுகை

மஞ்சள் பொதுவாக உயரமான மேடைகளில் நடுதல் வேண்டும். 35 - 40செ.மீ. ஆழத்திற்கு நன்கு உழுதல் வேண்டும். அத்துடன் மண்ணை பதப்படுத்தல் வேண்டும். தென்னையுடன் இடைப்பயிராக மேற்கொள்ளையில் கிடைக்கப் பெறுகின்ற இடைவெளிக்கமைய அகலம், நீளம் என்பன மாற்றமடையலாம். நூற்று மேடையின் உயரம் சுமார் 20செ.மீ. ஆக இருக்க வேண்டும்.

* வரிசைகளுக்கிடையிலான இடைவெளி:- 30 செ.மீ.
* நாற்றுகளுக்கிடையிலான இடைளெளி:- 25 செ.மீ.
* நடுகை இடைவெளி:-30-20செ.மீ.
* நடுகையின் ஆழம் :-5-7.5செ.மீ.

நடுகை மழைக்கு பின்னர் மேற்கொள்ள வேண்டும். போதிய ஈரப்பதன் காணப்படாத நேரம் நீர்ப்பாசனம் மேற்கொள்ள வேண்டும்.

## பயிர்ச்செய்கையின் பின் முகாமைத்துவம்

பயிர்ச்செய்கையின் பின் ஈரப்பதனை பாதுகாப்பதற்காகவும் களைகளின் வளர்ச்சியை தடுப்பதற்காகவும் பயிர் மீதிகள் இடப்படும். மூடுபடைக்காக வைக்கோல், தும்புத்தூள், உலர் இலைகள், கிளிசிரீடியா இலைகள் பயன்படுத்தப்படுகின்றன. நடுகை செய்து ஒரு மாதத்திற்கு பின் மற்றும் 5 மாதத்திற்கு பின்னும் சேதனப் பசளை இடப்படும் (களை அகற்றிய பின்னரே உரம் பிரயோகிக்கப்படல் வேண்டும்).

## பயிர்ப் பாதுகாப்பு

மஞ்சளில் பிரதான பீடையாக தண்டு துளைப்பானும் பிரதான நோயாக இலை கறையடித்தலும் காணப்படுகின்றது. இப்பீடையினைக் கட்டுப்படுத்தும் முகமாக 3A கரைசல், வேப்பிலை கரைசல் பயன்படுத்தலாம் மற்றும் நோயினைத் தடுப்பதற்காக நடுகைக்கு முன்னரே நடுகைப்பொருளை பங்கசு நாசினியில் பரிகரணம் செய்தல் வேண்டும்.

## அறுவடை மற்றும் அறுவடைக்கு பின்னரான செயன்முறை

நடுகை மேற்கொண்டு 8 - 10மாதங்களுக்கு பின் அறுவடை மேற்கொள்ளப்படுகின்றது.

மார்ச் – ஏப்ரல் காலப்பகுதியில் நடுகை மேற்கொண்டு இருக்கும் ஆயின் ஜனவரி பெப்ரவரி மாதங்களில் அறுவடை செய்யலாம். அக்காலப்பகுதியில் மரங்கள் மஞ்சள் நிறத்தை அடையும். அத்துடன் இலைகள் உலரத் தொடங்கும் வேர்த்தண்டு கிழங்குகள் பாதிப்படையாதவாறு அறுவடை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் இணைக்கப்பட்டுள்ள மண் கொத்தை மரக்குச்சியால் அகற்றுதல் வேண்டும்.

## பதப்படுத்தல்

தாய்க்கிழங்கு மற்றும் விரல் வேர்த்தண்டுக் கிழங்குகள் என்பவற்றை பாதிப்பு ஏற்படாதவாறு மண்ணில் இருந்து கிழப்பி எடுத்தல் வேண்டும். கிழங்குகளை 2 - 3 தடவைகள் நன்றாக கழுவி அதாவது சகல தண்டு பகுதிகளையும் அகற்றி மண் துகள்கள் முற்றாக நீங்கும் வரை கழுவுதல் வேண்டும். ஒரு நாள் முழுவதும் சூரிய ஒளியில் கிழங்குகளை உலரவிடல் வேண்டும். 2ஆம் நாள் கிழங்குகளை நீராவியில் 30நிமிடம் மூடி அவித்து பின்பு அவித்த மஞ்சளை உரலவிட வேண்டும். முழுமையாக உலரவைக்க 10- 15 நாள்கள் தேவைப்படும். நீராவியில் அவித்த பின் முதல் மூன்று நாள்களும் 3 - 4மணி நேரம் உலரவிடல் வேண்டும். அதன் பின்னர் போதுமான அளவு காயவிடல் வேண்டும். பின்னர் உலர்ந்த மஞ்சள் கிழங்குகளை நன்கு பிரகாசமாக மஞ்சள் நிறத்தை அடையும் வரை பளபளப்பாக்குதல் வேண்டும்.

அந்தூரி கணேசானந்தம்
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்.

# எல்லோர்க்கும் உணவளிக்கும் மேன்மையான தொழில்

“சுழன்றும் ஏர் பின்னது உலகு ஆதலால் உழன்றும் உழவே தலை” - என்கிறார் வள்ளுவர்.

அதாவது இவ்வுலகம் உழவுத்தொழிலாலேயே இயங்கிக் கொண்டிருக்கிறது. விவசாயம் இல்லாமல் போனால் பசி, பட்டினி, பஞ்சம் என்பன அதிகரித்து மக்கள் உணவில்லாமல் திண்டாடும் நிலையானது உருவாகும்.

பழங்காலங்களில் மனிதன் வேட்டையாடி உண்டான் பின்பு ஆற்றங்கரையோரங்களை அண்டி சில பயிர்களை உருவாக்கி அவற்றின் மூலம் தனது உணவை பெற்றுக் கொண்டான்.

இவ்வாறு பயிர்ச் செய்கையுடன் கால்நடை வளர்ப்பும் சேர்ந்த அம்சமே விவசாயம் என்றழைக்கப்படுகிறது.

உலகத்தில் எத்தனை தொழில்கள் இருந்தாலும் எல்லோர்க்கும் உணவளிக்கும் மேன்மையான தொழிலாக விவசாயம் காணப்படுகிறது.

மனிதனுக்கு பசி என்ற உணர்வு இருக்கின்ற வரையில் விவசாயம் அழிவடையாது. இங்கே பிறக்கின்ற ஒவ்வொருவருக்கும் இறக்கும் வரை உணவு தேவை. ஆகவே விவசாயம் செய்வதனால் தான் எம் ஒவ்வொருவருக்கும் உணவு கிடைக்கும்.

நாளுக்கு நாள் அதிகரித்து செல்லும் சனத்தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தி இடம்பெறவேண்டியது அவசியமாகும். இன்றைக்கு ஆபிரிக்காவிலும் உலகமெங்கிலும் உள்ள வறுமையான பிராந்தியங்களில் உள்ள மக்கள் ஒருவேளை உணவுக்கு கூட வழியின்றி பசியால் இறக்கிறார்கள்.

நாடுகள் அத்தியாவசியமான விவசாயத்தைக் கைவிடும் பட்சத்தில் எல்லோருக்கும் இதே நிலை தான்.

இதனால் தான் உலக நாடுகள் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைய வேண்டும் என்பதற்காக பயிர்ச்செய்கை, பாற்பண்ணை, கைத்தொழில், மீன்பிடி ஆகிய விடயங்களில் அதிகம் கவனம் செலுத்துகின்றன.

விவசாயத்தை விரிவுபடுத்தும் நோக்கில் விவசாயத்தில் அதிக தொழில்நுட்பங்களை புகுத்தி உணவு உற்பத்தியை அதிகரிக்க முனைந்து நிற்கின்றன.

கடுமையான காலநிலை தன்மைகள், பொருளாதார நெருக்கடி மற்றும் யுத்தம் போன்ற நிலைமைகளில் உலகம் உணவு மற்றும் விவசாயத்தினுடைய முக்கியத்துவத்தினை உணர்ந்துகொள்ளும்.

# வல்லாரை தரும் நன்மையும் ஆரோக்கியமும்

கிராமங்களில் காணப்படும் மூலிகைகள் எண்ணற்றவை அதில் மிகவும் குறிப்பிடத்தக்கது வல்லாரை.

வல்லாரைச் செடியின் இலையை நிழலில் உலர்த்தி நன்குப் பொடித்து, பாலில் கலந்து தினமும் இரவு படுக்கைக்குச் செல்லும்முன் குடித்தால் வயிற்றுப் பூச்சிகள் அழிந்து போகும்.

வல்லாரை இலையை நன்கு சுத்தம் செய்து, அதனுடன் சின்ன வெங்காயம், பூண்டு, மிளகு சேர்த்து சம்பலாக அரைத்து 48 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் படிக்கும் பிள் ளைகளுக்கு ஏற்படும் மூளைச் சோர்வை நீக்கி, ஞாபக மறதியைக் குணமாக்கும். ஆனால் வல்லாரைச் சம்பலில் புளியை அறவே தவிர்க்க வேண்டும். உப்பு சேர்த்துக் கொள்ளலாம்.

வல்லாரை இலையுடன் சம அளவு கீழாநெல்லி இலை சேர்த்து அரைத்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் நீர் எரிச்சல் தீரும்.

குழந்தைகளுக்குத் தினமும் 10 வல்லாரை இலைகளை பச்சையாக மென்று சாப்பிடக் கொடுத்தால் மூளை நரம்புகள் வலுப்பெறும். தொண்டையில் ஏற்படும் அவஸ்தைகள் குறையும்.

வல்லாரை, இரத்த சோகையைப் போக்கி இரத்தத்தில் ஹீமோகுளோபின் எண்ணிக்கையை அதிகரிக்கும்.

வல்லாரைப் பொடியைக் கொண்டு பல் துலக்கினால் பல்லில் உள்ள கறைகள் போகும். பல் ஈறுகளைப் பலப்படுத்தும்.

இளைப்பு, இருமல், தொண்டைக்கட்டு போன்றவற்றை வல்லாரை போக்கும். காச நோயாளிகளுக்கு வல்லாரை சிறந்த மருந்தாகும்.

வல்லாரை, கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல் போன்றவற்றைப் போக்கி கண் நரம்புகளுக்கு நன்மை அளிக்கும்.

நீரிழிவு நோயாளிகள் வல்லாரைக் கீரை உண்பது நல்லது. இக்கீரை மலச்சிக்கலைப் போக்கி, வயிற்றுப் புண், குடல்புண்ணை ஆற்றுகிறது.

யானைக்கால் வியாதியால் பாதிக்கப்பட்டவர்கள் வல்லாரை இலையை அரைத்துக் கட்டினால் நோயின் தாக்கம் குறையும். அதுபோல விரைவீக்கம், வாயு வீக்கம், கட்டிகளின் மீது பூசி வந்தால் குணம் கிட்டும்.

வல்லாரை இலையை முறைப்படி எண்ணையாக்கி, தினமும் தலையில் தேய்த்து வந்தால் உடல் சூடு தணியும். உடல் எரிச்சல் நீங்கும்.



## வல்லாரைச் சம்பல் செய்யும் முறை

**தேவையானவை**

- வல்லாரைக்கீரை அரை கட்டு
- தக்காளி ஒன்று
- வெங்காயம் ஒன்று
- இஞ்சி சிறிய துண்டு
- தேங்காய் துருவல் கால் கப்
- பச்சை மிளகாய் 5
- கடுகு கால் கரண்டி
- உளுத்தம்பருப்பு கால் கரண்டி
- பெருங்காயத்தூள் ஒரு சிட்டிகை
- எண்ணெய் 2 தேக்கரண்டி
- உப்பு தேவைக்கேற்ப



**செய்முறை:** தாச்சியில் சிறிதளவு எண்ணெயை விட்டு சூடாக்கி வல்லாரைக்கீரை, நறுக்கிய தக்காளி, வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி, தேங்காய் துருவல் சேர்த்து வதக்கவும்.

ஆறியபின் உப்பு சேர்த்து, சிறிதளவு தண்ணீர் விட்டு அரைக்கவும். மீதமுள்ள எண்ணெயில் கடுகு, உளுத்தம்பருப்பு, பெருங்காயம் தாளித்து, அரைத்த விழுதில் சேர்க்கவும்.

**குறிப்பு:** வல்லாரைக் கீரை மூளையை சுறுசுறுப்பாக்கும். நினைவாற்றலை வளர்க்கும். வல்லாரைக் கீரை சமைக்கும்போது புளி சேர்த்தால், அதன் பலன் முழுமையாக கிடைக்காது.




யதினா



# சண்டிக் கீரை

**தேவையானவை**

- 1 பிடி கீரை
- ½ கிலோ வெங்காயம்
- இரண்டு கரண்டி எண்ணெய்
- 3 - 5 கறிவேப்பிலை
- ½ கரண்டி பெருஞ்சீரகம்
- ½ கரண்டி கடுகு
- 2 செத்தல் மிளகாய்
- ¼ கப் தேங்காய்ப்பூ
- ½ கரண்டி கடலைப்பருப்பு
- ½ கரண்டி உளுத்தம் பருப்பு
- உப்பு தேவையான அளவு

**செய்முறை:** கீரையை களை நீக்கி கொய்து, நன்றாக கழுவி, பொடியாக நறுக்கிக் கொள்ளவும். வெங்காயத்தை பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.

அடுப்பில் தாச்சியை வைத்து எண்ணெய் ஊற்றி கடுகு, கடலைப்பருப்பு, உளுத்தம் பருப்பு போட்டுத் தாளிக்கவும். அதனுடன் நறுக்கிய மிளகாய், வெங்காயம் சேர்த்து நன்றாக வதக்கவும்.

வெங்காயம் சிவக்கும் வரை நன்றாக வதக்கியதும் நறுக்கி வைத்துள்ள கீரையை போட்டு நன்றாக வதக்கவும். அதனுடன் உப்பு சேர்த்து சிறிது நேரம் வதக்கவும். பின்னர் சிறிது தண்ணீர் தெளித்து வேக விடவும். கீரையில் உள்ள தண்ணீர் சுண்டி, கீரை நன்றாக வெந்ததும், தேங்காய் துருவல் சேர்த்து லேசாக கிளறி அடுப்பிலிருந்து இறக்கி வைக்கவும்.



பொதுவாகவே இந்த இலைகளில் விற்றமின் 'ஏ', 'தையமின்', 'ரிபோபிளவின்', விற்றமின் 'சி' ஆகியவை உள்ளன. மூட்டு வலிக்கு இது மிகச்சிறந்த மருந்து.

கிராமங்களில் உள்ள வயதான பெருசுகளிடம் கேட்டால் நாகரிகமாக இருப்பவர்கள் 'நச்சுக் கொட்டை கீரை என்றும், நக்கலான பெருசுகளிடம் கேட்டால் லஜ்ஜை கெட்ட கீரை என்றும் சொல்வார்கள். சில இடங்களில் 'சண்டிக்கீரை' என்றும் இந்தக் கீரைக்கு பெயர் சொல்கிறார்கள்.

இதன் பெயரிலேயே சங்கதியைச் சொல்லி விட்டார்கள் நம் முன்னோர்கள்.

'லஜ்ஜை' என்றால் வெட்கம். கீரைக்கு எதுக்கு வெட்கம்? என்றால், இந்தக் கீரை சாப்பிட்டால் வெட்கம் போய்விடும், கூச்சமில்லாமல் இன்னும் வேண்டும் என்று கேட்கத்தோன்றுமாம்.

இந்தக்கீரையை சிலர் 'சண்டிக்கீரை' என்றும் சொல்கிறார்களே, ஏன் என்று சிந்தியுங்கள். 'சண்டி' என்றால் என்ன? சண்டிக்குதிரை என்று கேள்விப்பட்டு இருப்பீர்கள் இல்லையா, அப்படி அழைப்பதற்கு என்ன காரணம்? சாதாரண குதிரையில் யார் வேண்டுமானாலும் சவாரி செய்யலாம். ஆனால் சண்டிக்குதிரையைச் சமாளிக்க அபார 'திறமை' இருக்க வேண்டும்.

அகத்தி, பொன்னாங்காணி, முருங்கை போன்றவற்றின் இலைகள் சிறிதாக விருப்பதால், கையில் பிடித்து வைத்து அரிவதென்பது கொஞ்சம் சிரமமாகும். அதனால் இவற்றை **Lettuce Tree** (விஞ்ஞானப் பெயர்: **Pisonia grandis)** என ஆங்கிலத்தில் அழைக்கப்படும். சண்டி மரத்தின் இலைக்குள் இலை வைத்துச் சுற்றிச், சிறிது சிறிதாக அரிவார்கள். சண்டிக் கீரையுடன் சேரும் போது முருங்கை, அகத்தி போன்ற கீரைகளின் கசப்புத் தன்மையும் கொஞ்சம் குறைகிறது. பல வித சத்துகளையும், மருத்துவக் குணங்களையும் இக் கீரை கொண்டிருக்கிறதென்று சொல்லப்பட்டாலும், உணவில் இக் கீரை சேர்க்கப்படுவது குறைவாகவேயுள்ளது.

சண்டி மரத்தின் சாயல் கொண்ட மரங்களை வீட்டுத் தோட்டங்களில், பூங்காக்களில், வீதி ஓரங்களில் அழகுக்காக வளர்க்கிறார்கள். ஆனால் இம்மரம் உண்மையிலேயே சண்டி மரமல்ல. இவற்றின் இலைகளை உண்ணக் கூடாதென்று சொல்லப்படுகிறது. இது வயாக்கரா **(Viagra)** மருந்தின் தன்மைகளைக் கொண்டிருக்கிறதென்று சொல்லப்படுகிறது.

# மரணத்தின் தூது



திருக்கோவில் கவியுவன்



பாகம் 04

இவனுக்காக நாளை யார் அழுவார்களோ? நானே அழக் கூடும். எனக்காகவும் இவன் அழக்கூடும். பாம்பைக் கழுத்தில் சுற்றிநிற்பவன் சின்னக் கரப்பானுக்குப் பயப்படுவதுபோல் இவன் மரணத்திற்காக அழுகிறானா?

'மாஸ்ரர். "அப்படிக் கூப்பிடாத மகன், என்ர மகன் கூப்பிட்ட மாதிரியே நீயும் 'அப்பு' எண்டே கூப்பிடு' ஏதோ சொல்ல எடுத்தவனை நான் தடுத்து விட்டேன்.

'சரி! அப்பு ஒரு இடமும் போயிராதீங்கோ, அங்க ஏதோ பிரச்சினை போலிருக்கு. இங்க இந்த மரத்துக்கு மறைவில படுத்துக் கொள்ளுங்கோ '

அவன் ஒரு இடத்தைச் சுட்டிக் காட்டினான். அங்கே ஒரு தென்னங்கிடுகு பாயாக, மடிக்கப்பட்ட சாக்கு தலையணையாக ஒரு படுக்கை உருவாக்கப்பட்டிருந்தது. இதுவரை அவன் அதில் படுத்திருப்பான் போலும், ஓடிவந்த உடல் சோர்வும் மகனைப் பற்றிய, மனைவியைப் பற்றிய மனச்சோர்வும் எனக்கு ஒரு ஓய்வு தேவையென்பதை நடைமுறையாக்கியது. நான் அந்தப்படுக்கையில் சாயமுற்பட்ட போது அந்த மனிதன் சட்டைப்பையினுள் இருந்து எதையோ எடுத்து என்கைகளில் திணித்தான். 'அப்பு! இது கவிதை! உங்கள் ரமேஷ் எழுதிய கவிதை என் நண்பன் எழுதிய கடைசிக் கவிதை' தழுதழுத்த குரலினூடு சொல்லிவிட்டு ஒரு சிறிய 'ரோச்'சைத் தந்தான் படிப்பதற்காக, நான் படித்தேன், அந்தச் சிறிய வெளிச்சத்திலே, எட்டு வரிகளிலே நிகழ்கால நிஜங்களை கோடு போட்டுக் காட்டியிருந்தான். ஒருதரம், இருதரம், மூன்றுதரம். பலதரம் வாசித்தேன். வாசிக்க வாசிக்க என் மகனைப் பற்றி, என் மகனைப் பெற்றதால் என்னைப் பற்றிநானே பெருமிதம் அடைந்தேன்.


**'மனிதம் தேடிய**
**நான் சோர்ந்துபோய்**
**எலும்புகளில் தடுக்கி**
**விழுந்தேன்.**
**விழித்த போது**
**என்கையிலும் துப்பாக்கி'** நான் கவிதையைக் கையில் வைத்திருந்த போதே அந்த இருட்டு மனிதன் அதை உரக்கச் சொன்னான். படித்துப் படித்து மனப்பாடம் செய்திருப்பான் போலும்,

'படிர் படீர். டொம்'

எங்கோ இருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று எங்களின் அருகாமையில் விழுந்து வெடித்தது. 'அப்பு கவனமாய்ப் படுங்கோ' சொல்லி விட்டு இருட்டு உரு எங்கோ ஓடத் தொடங்கியது. காரசாரமான சத்தங்கள் இன்னும் கேட்டுக் கொண்டிருந்தன. குருஷேத்திரம் தொடங்கி விட்டது போலும், ஆம்! அது குருஷேத்திரம் தான். ஷத்திரியர்களே சந்திக்காத குருஷேத்திரம். அப்படியானால் இங்கே காண்டீபன் யார்?

கர்ணன் யார்? துரியோதனன் யார்? என்னை மிரட்டிய உரு துரியோதனனா? இந்த மர்ம உரு காண்டீபனா? என் மகன் தருமனா? இல்லை! இவர்கள் எம்மவர்கள். ஒரே கூட்டினுள் வாழ வேண்டிய பறவைக் குஞ்சுகள். அப்படியானால் ஏன் இவர்கள் கொத்திக் கொள்கிறார்கள். யாரோ கல்லெறிந்து விட்டார்கள், பேதம் பூசிய கல் எறிந்து விட்டார்கள். நான் எல்லோரையும் நேசிக்கிறேன் - என்மகனைப் போல, என்மனம் ஏதோவெல்லாம் எண்ணிக் கொண்டிருக்கும் போதே கண்கள் செருகத் தொடங்குகின்றன. சரிகின்றேன். நான் எவ்வளவு நேரம் உறங்கியிருப்பேனோ தெரியாது. கோழி கூவிய சத்தமும் பறவைகளின் இரைச்சலும் என் தூக்கத்தைக் கெடுத்து விட்டன. இன்னும் இமைகள் திறக்காத நிலையில் அப்படியே படுக்கின்றேன். அருகில் யாரோ மூச்சு விடும் சத்தம் கேட்கிறது. 'இருட்டு மனிதனாக இருக்குமோ'நினைத்துக் கொண்டே விழிகளைத் திறக்கிறேன். என்பக்கத்தில் என்மகன் ரமேஷ் படுத்திருக்கிறான். நான் என்வீட்டில் படுத்துக் கொண்டிருக்கிறேன். அப்படியென்றால் அந்தக் கடிதம், மிரட்டல் மனிதன், இருட்டு உரு, ஜீப்பின் ஒலி, குருஷேத்திரம், அந்தக் கவிதை, கிடுகுப் படுக்கை, கள்ளிமுள் எல்லாமே கனவுகளா? எனக்கு வியர்த்துக் கொட்டியது. என்னையே நம்பாதவன் போல் என் மனைவியைப் பார்க்கிறேன். அவள் எதுவுமே நடக்காது போல் அமைதியாக சயனித்துக் கொண்டிருந்தாள். இன்னும் குழப்பம் தீராத நிலையில் ஜீப்பின் தடமாவது இருக்கின்றதா என்பதைப் பார்க்க வாசலுக்கு விரைகிறேன். அங்கே எந்த ஜிப்பும் வந்ததற்கான தடயங்கள் இருக்கவில்லை. நிமிர்ந்து வீதியைப் பார்க்கிறேன். எதிரேயுள்ள மதில் சுவரில் அந்த இருட்டு மனிதன் சிரித்துக் கொண்டிருந்தான் சுவரொட்டியாக, 'இவனை எங்கோ பார்த்திருக்கின்றோம் என்றது இங்கேதானா?' உள்ளே வருகின்றேன். என்மகன் தூங்கிக் கொண்டிருக்கின்றான். அவனின் நெஞ்சு அமைதியாக மேலும் கீழும் அசைகிறது. அவனைப் பார்க்கும் போதெல்லாம் அது கனவாகவே இருக்கட்டும் என்று மனம் இரைகிறது.

**(முற்றும்)**



## இலக்கிய நயம்

# காதலர் சந்திப்பு

யாழ். மகள் சைந்தவி



காதல் அரும்பியவுடன் ஒருவரை ஒருவர் சந்தித்து தனிமையில் இனிமை காண்பது காதலின் சுகமான தருணம். இப்படி காதலியை சந்திக்க வேண்டும் என்றால், தோழியோ, தோழனோ உதவி செய்ய வேண்டும். ஆண்களுக்கு காதல் கைகூடும் வரை தோழர்கள் தேவைப்படுகிறார்கள். காதலி சரி என்று சொன்ன பிறகு தோழர்கள் அவர்களுக்கு அவசியம் இல்லை. ஆனால் பெண்களுக்கு அப்படி இல்லை, காதலின் ஒவ்வொரு கட்டத்தையும் தன் தோழிகளுடன் பகிர்ந்து கொள்கிறார்கள், தன் காதலர் எப்படி எல்லாம் தன்னை காதலிக்கிறார் என்று பெருமை அடித்து கொள்ளவும், அவன் நல்லவனா, கெட்டவனா என்று தன் அனுபவத்தில் நடக்கும் விடயங்களைக் கூறி தோழியின் சொந்த அனுபவத்தில் நடந்த காதல் கதைகளை வைத்து எடை போடுகின்றனர்.


காதலியை சந்திக்க விரும்பும் காதலனுக்கு காதலி எங்கு வருவாள், அந்த இடம் எப்படிப்பட்டது என்று அழகாக உரைக்கும் தோழியின் கூற்றில் அமைந்த பாடல் இது. மாதீர்தனார் என்ற கவிஞர் இப்படி பாடுகிறார் ,

**ஊர்க்கும் அணித்தே, பொய்கை பொய்கைக்குச்**
**சேய்த்தும் அன்றே, சிறு கான்யாறே**
**இரை தேர் வெண் குருகு அல்லது யாவதும்**
**துன்னல் போகின்றால், பொழிலே யாம் எம்**
**கூழைக்கு எருமணம் கொணர்கம் சேறும்**
**ஆண்டும் வருகுவள் பெரும் பேதையே.**

அதாவது ஊருக்கு அருகே அழகான பொய்கை இருக்கிறது, அதன் அருகே சிறிய காட்டாறு ஓடுகிறது, இரை தேடும் வெண் கொக்கைத் தவிர அங்கு யாரும் இருக்க மாட்டார்கள். நாங்கள் கூந்தல் நன்கு வளர உதவும் ஒருவகை களி மண் சேர்க்க (எடுக்க) அங்கு வருவோம். உன் காதலியும் அங்கு வருவாள். வந்தால் அவளை சந்திக்கலாம் என்கிறாள் - தலைவனுக்கு உதவும் தலைவி, காட்டாறில் கிடைக்கும் ஒரு வகை களிமண் எடுத்து கூந்தலுக்கு பூசும் பழக்கம் இருப்பதை இந்த பாடல் கூறுகிறது. இன்று நாம் முல்தானி மட்டி என்று பூசுவதும் ஒருவகை களிமண் தான் . இதன் மூலம் பெண்கள் தங்களின் அழகைப் பராமரிப்பதில் வெகு கவனம் செலுத்துவது இன்றல்ல, சங்க காலம் முதல் வழக்கத்தில் உள்ளது என்பதை இந்தப் பாடல் எடுத்துக் கூறுகிறது.

## குரு சதாசிவம் எழுதிய

# வன்னி மண்ணின் வாசம் வீசும் ‘வடக்கு வீதியிலே’




## நூல் அறிமுகம்

வன்னியில் பிறந்து புலம்பெயர்ந்து தற்போது அமெரிக்காவில் வாழ்ந்து கொண்டிருக்கும் குரு சதாசிவத்தின் முதலாவது சிறுகதை நூல்தான் ‘வடக்கு வீதியிலே’ மகுடம் 47 ஆவது பதிப்பாக வெளிவந்துள்ள இந்நூல் 14 சிறுகதைகளை கொண்டுள்ளது. புத்தகத்தின் தலைப்புக்கு ஏற்றாற்போல் அட்டைப்படமும் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சிறுகதைகளும் வெவ்வேறுபட்ட கருவை மையமாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளன. கொரோனாவின் தாக்கம், அரசியல்வாதிகளின் ஏமாற்று வித்தை, காதல் உணர்வுகள், குடும்ப உறவு, யுத்தத்தின் கொடூரம் போன்றவற்றை தனது கதைகளினூடாக எடுத்துரைக்கும் ஆசிரியர் வரலாற்று நிகழ்வுடன் தொடர்புபட்ட கதை ஒன்றினையும் தனக்கே உரிய நடையில் எழுதியுள்ளார்.

நான் படிக்கும் காலத்தில் எல்லாம் எங்களுடைய வகுப்பாசிரியரின் அல்லது பாட ஆசிரியரின் பிள்ளைகளுக்கே முன்னுரிமை கொடுக்கப்படும். வகுப்பில் கெட்டிக்கார மாணவர்கள் இருந்தாலும் அவர்களை புறக்கணித்துவிடுவார்கள். தங்களுடைய பிள்ளைகளுக்கு தனிப்பட்ட ரீதியில் விசேட வகுப்புக்களை நடத்தியும், பரீட்சையில் அதிக மதிப்பெண் கொடுத்தும் விடுவார்கள். ஆனால் மதியரசி கதையில் வருகின்ற ஆசிரியை இதற்கு முற்றிலும் மாறுபட்டவராக படைக்கப்பட்டுள்ளார். இக்கதையில் வரும் ஆசிரியை பாடசாலையில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என எல்லோராலும் விரும்பப்படுகின்ற கதாநாயகி மேல் மிகுந்த அன்பும், அக்கறையும் கொண்டுள்ளார். இதனால் தன்னுடைய மகளோடு சேர்த்து மதியரசிக்கும் பாடம் சொல்லி கொடுக்கின்றார். பிற்பாடு மதியரசியின் கல்விக்கு தன்னால் உதவ முடியவில்லையே என்ற குற்ற உணர்வோடு வாழ்கின்றார். இப்படியான ஆசிரியையும், ஆசிரியையின் மன நிலையை அறிந்து செயற்படும் மாணவியையும் கண்டு கொள்வது கடினமாகும். கதையின் தொடக்கத்தில் மதியரசியை அறிமுகப்படுத்தும் ஆசிரியர் நீண்ட வர்ணனைகளை கொடுத்துள்ளார் எனத் தெரிகிறது. வர்ணனைகளை சற்று குறைத்து இருந்தால் கதை இன்னும் சிறப்பாக வந்திருக்கும்.

விவசாயிகள் நவீன இயந்திரங்கள் அறிமுகமாக முதல் வாழ்ந்த அழகான வாழ்க்கையையும், நவீன இயந்திரங்கள் பாவனைக்கு வந்த பின்னர் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளையும் பேசுகின்றது ஒரு கதையின் கதை. இக்கதையோடு சேர்த்து கதையாசிரியர் எழுத்தாளனின் உள்ளக்குமுறலையும் எடுத்துரைக்கின்றார். எழுத்தாளன் தொடர் பான கதையில் எனக்கு உடன்பாடில்லை. தான் எழுதிய கதை நிராகரிக்கப்பட்டதென தெரிந்ததும் கதாநாயகன் கதை எழுதுவதை நிறுத்தி விடுகின்றான். இது அவருடைய கோழைத்தனம் என்றே நான் சொல்வேன். அவர் தொடர்ச்சியாக எழுதியிருக்கலாம். என்றேனும் ஒருநாள் அவருடைய படைப்புக்கள் வெளிவந்திருக்கக் கூடும். ஒன்று வெற்றி பெற வேண்டுமெனின் தொடர்ச்சியாக முயற்சிக்க வேண்டும். அதை இடையில் நிறுத்தினால் எப்படி வெற்றி பெறுவது? எனவே கதாநாயகன் கதை எழுதுவதை தொடர்ந்து இருக்கலாம். இக்கதையில் கதாநாயகன் தன்னுடைய கதையையே சிறுதையாக எழுதியதாகவும், அச்சிறுகதை நூலாசிரியரின் சிறுகதைகளுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள விதமும் பாராட்டத்தக்கதாகும்.

சுமைதாங்கி என்ற கதையில் கூறப்படும் கதையில் வருகின்ற கதாநாயகியின் நிலைதான் 1980/90 காலப்பகுதியில் வாழ்ந்த பெண்களுக்கும் ஏற்பட்டது. ஆனால் தற்காலத்தில் எல்லாம் இந்நிலை இல்லை. தம்பி ஒருவனை திருமணம் செய்தால், அடுத்தது அக்கா, தங்கை, அண்ணா என்று வரிசையாக தமக்கு பிடித்தவர்களை திருமணம் செய்து கொண்டு வந்து நிற்கும் சமூகத்தில்தான் தற்போது நாம் எல்லோரும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். கதையாசிரியர் அக்காலகட்டத்தில் அநேகமானவர்களின் வீடுகளில் நடந்த பிரச்சினைகளை இக்கதை மூலம் எடுத்துரைத்துள்ளார். இக்கதையை வாசிக்கும் இளம் தலைமுறையினர் அக்காலகட்டத்தில் குடும்பத்திற்காக தங்களது ஆசைகளையும், உரிமைகளையும் துறந்துவிட்டு வாழ்ந்த பெண்கள் பற்றி அறியக்கூடியதாக அமையும்.

வேலை என்னும் சிறுகதையில் குறிப்பிட்ட ஒரு கால கட்டத்தில் அரசியல்வாதிகளால் உள்ளூர் இளைஞர்களும், பெற்றோர்களும் ஏமாந்துபோனதை பற்றி பேசுகின்றது. தற்காலத்தில் நாட்டு மக்கள் அனைவரும் அரசியல்வாதிகளிடம் ஏமாற வேண்டிய நிலை. இதற்கு அப்போதைய கால கட்டத்தில் நடந்த ஏமாற்று வேலைகள் பரவாயில்லை என்று சொல்லலாம். புத்தகத்தின் தலைப்பாக வைக்கப்பட்டுள்ள கதைதான் வடக்கு வீதியிலே. திருவிழா வந்துவிட்டால் பெண்களை சீண்டுவதற்கென்றே ஒரு கூட்டம் தயாராகி விடும். அதனை தட்டிக்கேட்பதற்கு என்று ஒரு கூட்டம் தயாராகிவிடும். இவ்வாறான ஒரு சம்பவத்தின் மூலம் அறிமுகமாகும் கதாநாயகன், கதாநாயகி இருவரும் தொடர்ந்து தமது உறவினை வளர்த்து வருகின்றார்கள். இவர்களின் கதையை விளக்க முற்பட்ட ஆசிரியர் திருவிழா காலத்தில் காட்சியளிக்கும் வடக்கு வீதியின் அழகையும் விவரிக்கின்றார். வடக்கு வீதி திருவிழாவிற்கு மட்டுமன்றி பெண் பார்ப்பதற்கும், மாப்பிள்ளை பார்ப்பதற்கும் ஏற்ற இடமாகும் என்ற பண்பாடு சார்ந்த விடயத்தையும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர் எழுத்தாளர் பலர் கலப்பு திருமணம் பற்றி தங்களுடைய கதைகளில் பேசுவதைக் காணலாம். குரு சதாசிவமும் தன்னுடைய பச்சை விளக்கு என்ற கதையில் இதையே பேசுகின்றார். எனக்கு கிறீன்காட் கிடைச்சிருக்கப்பா என கதை முடிகின்றது. கதாநாயகன் தன்னுடைய கலப்பு திருமணம் குறித்து பெற்றோரிடம் கூறியபின் என்ன நடக்கும்? பெற்றோர்கள் அதனை ஏற்றுக்கொள்வார்களா? என்ற முடிவை வாசகர்களுக்கே விட்டுவிடுகின்றார்.

தெய்வமும் மனிதனாகலாம், புரியாத உறவுகள் ஆகிய இருகதைகளும் யுத்த காலத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளை பேசுபொருளாகக் கொண்டவை. இரண்டு கதைகளிலும் கதாநாயகன், கதாநாயகி ஆகிய இருவருக்குள்ளும் காதல் என்ற நிலையை வைத்து பேசிவிட்டு இறுதியில் அவர்களை பிரித்து விடுகிறார். அதாவது இறுதியில் அவர்களுடைய உறவினை மாமா – மருமகள், அண்ணன் – தங்கையாக குறிப்பிடுவது முரணான முடிவாக உள்ளது. இரு கதைகளிலும் கதையின் போக்கு திசை மாறுகின்றது.

நிஜத்தின் நிழல்கள் என்ற கதை வரலாற்று சம்பவத்தை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியரால் கற்பனை செய்யப்பட்ட கதையாகும். பசுப்பால், தண்ணீர்க்கொடி, பாலைப் பழம், தேன் என்பவற்றை உணவாக உட்கொண்டு காட்டை கடந்து கொண்டு செல்லும் சின்னமயிலின் துணிச்சலும், குயிலிசையின் வீரமும் கதையை வாசிக்கும் வாசகர்களுக்கு புதுவித அனுபவத்தை கொடுக்கும். 14 சிறுகதைக்குள்ளும் என்னைக் கவர்ந்த கதையாக இக்கதையை கூறுவேன்.

வாழ்வில் முன்னேற வேண்டும் என்று துடித்தவன் சந்தர்ப்ப சூழ்நிலையின் காரணமாக சிறைக்கு செல்வதை பேசுகின்றது கண்ணன் வருவான். தாய் – மகன், அண்ணன் – தங்கை உறவின் ஆழமும், மலையக மக்களின் பிரச்சினையும் இக்கதை மூலம் எடுத்துரைக்கப்படுகின்றது. தெய்வங்கள், அவன் அப்படித்தான் ஆகிய இரண்டு சிறுகதைகளும் கொரோனவின் தாக்கம் பற்றி பேசுகின்றன. தெய்வங்கள் என்ற சிறுகதையில் டாக்டர் ஒருவருக்காக மக்கள் அனைவரும் சேர்ந்து அவருடைய வீட்டில் ஒன்று கூடுவது மிகைப்படுத்தப்பட்ட கருத்தாக தோன்றுகின்றது. இது கதையின் நகர்வை பாதிக்கின்றது. திரைப்படங்களில்தான் இவ்வாறான காட்சிகள் தோன்றும். சிறுகதையில் இவ்வாறான ஒரு கட்டத்தை எதிர்கொள்வது சலிப்பினை ஏற்படுத்துகின்றது.

தூரத்துச் சொந்தங்கள். இக்கதையும் பல திரைப் படத்தில் பேசப்படும் கருவாக இருப்பதனால் இக்கதையை வாசிக்கும்போது ஒருவித சலிப்பு ஏற்பட்டு விடுகின்றது. கழுத்துச்சங்கிலி, குழந்தையை ஒப்படைத்தவர் மரணித்ததை முகநூல் வழியாக அறிதல் இவையெல்லாம் கதையின் சுவாரசியத்தை குறைத்துவிடுகின்றன. கல்வெட்டு கதைக்கு ஏற்றாற்போல் பெயர் வைக்கப்பட்டுள்ளது. இக்கதையின் போக்கு ஏற்கனவே எழுதப்பட்ட கதைகளைப் போல் உள்ளதால் எவ்விதமான தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

எளியநடையைக் கையாண்டு காலத்திற்கு ஏற்றாற் போலவும், ஆரம்ப காலத்தில் நிகழ்ந்த சம்பவங்கள், வரலாறுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டும் கதை எழுதிய ஆசிரியர் பெரும்பாலான கதைகளை மாறுபட்ட விதத்தில் இலக்கிய உலகிற்கு தந்துள்ளார். சில கதைகளை தவிர்த்துவிட்டு பார்த்தால் ஆசிரியரின் எழுத்தாற்றல் வித்தியாசமான முறையில் உள்ளதை கண்டுகொள்ள முடிகின்றது.

**அஷ்வினி வையந்தி**
**கிழக்கு பல்கலைக்கழகம்**

# கவைக் கதிர்



## பரிசு

வான வெற்றிடத்தை
தன் தூரிகைச் சிறகுகளால்
அலங்கரித்து மேலெழும்
பறவை ஒன்று
சுதந்திரத்தின் வண்ணத்தைச்
சூட்சுமமாய் வரைந்துவிடுகிறது

பெருந்தருவின் கிளையமர்ந்து
வாழ்தலின் பக்குவத்தை
காற்றினிலே இனிமை கோர்த்து
இலாவகமாய் இசைக்கிறது

பொழுதொன்றின் மீச்சிறு
துணிக்கையினையும்
தன்னியல்புகளால் அற்புதம் செய்யச்
சூழலும் அதனோடு
ஒத்திசைவு கொள்கிறது

இயற்கையை அதுவும்
அதனை இயற்கையும்
எப்போதும் நேசித்துக் கொள்வதால்
இவ்வையம் அப்பறவைக்கு
சொர்க்கத்தைப் பரிசளித்திருக்கிறது

- வேலணையூர் ரஜிந்தன் -

## அலைபாயும் மனதோரம்

**உப்பாக என் மொழிகள்**
**படிவதாக கூறினான்**

**அலைகள் அள்ளி வீசி**
**விளையாடிய ஆடலில்**
**ஆடைகள் தாண்டாத கண்ணியம்**
**அவனது**

**தோணி , துடுப்பினை**
**குறித்து**
**அந்தரங்க மொழிதலிலான**
**பாடலினை தூரவீசி**
**இனி**
**மூழ்குதலே வாழ்வென்றான்**

**நான் சிறுமீனாக**
**துள்ளிய நாளில்**
**அவன் திமிங்கிலமாகி**
**கரையேறி**
**அமரனானான்**

**நான் அவனை**
**கடலென மொழிந்ததில்**
**தொடங்கிற்று**
**என் அல் -புனைவுக்கவிதை**

- லலித்தா -

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

ப்ரியமதா பயஸ்

# எப்படி வாழ்வது?



ஒருவன் எத்தனை காலம் வாழ்ந்தான் என்பதை விட எப்படி வாழ்ந்தான் என்பதே சிறப்பாகும். நமக்கான பாதையில் தடுமாறாமல் தடம் மாறாமல் வாழ்வதே அழகானது.

வாழ்க்கை ஒன்று பார்வைகள் பல விதமாக இருக்கிறது. வாழ்க்கையை அதன் இயல்பிலேயே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

சுற்றுலா செல்லும் மனிதர்களில் சிலரைக் கவனித்திருப்பீர்கள். பயணத்துடனே தங்கள் வீட்டுச் சிந்தனைகளையும் சுமந்து கொண்டே வருவார்கள்.

சுமைகளோடே தான் மனிதர்கள் பயணிக்கிறார்கள். அதை இறக்கி வைப்பதற்குத் தயாராக இல்லை.

அந்த சுமையை ஏற்பதற்கும் யாரும் தயாராக இல்லை. இறுதிப் பயணத்தில் தன்னை சுமக்கும் நாள் வரை இது தொடரும் போது வாழ்க்கை உற்சாகமாக இல்லாமல் கடினமானதாக இருக்கிறது.

உணர்வுகளை வெளிப்படுத்தாமல் இறுக்கமான முகத்தோடும் மனதோடும் வாழும் வாழ்க்கையில் என்ன இன்பம் இருந்து விடப் போகிறது?

பதற்றத்தோடும் குழப்பத்தோடும் வாழ்க்கையின் பெரும்பான்மை கழிந்து விடுகிறது.

குழந்தையின் மன நிலையில் இருந்தாலே போதும். வாழ்க்கை ரசனையாகும். இன்முகத்தோடு இதயத்தின் கதவுகளைத் திறப்போம். ஒரே ஒரு நாள் பிறருக்காக சிறு உதவி செய்து பாருங்களேன். வாழ்க்கை எத்தனை அர்த்தமுள்ளது எனப் புரியும்.

# வாழத் தான் விடலை வழியையாவது விடு



ஓட்டோ ஒன்றில் வாசகமொன்று தென்பட்டது. வாழத் தான் விடலை. வழியையாவது விடு என்று எழுதப்பட்டிருந்தது. அதனை எழுதியிருந்த மனிதனின் மன நிலையை சற்று யோசித்துப் பார்த்தால் எத்தகைய மன நிலையில் அவன் இருந்திருப்பான் என்பது புரிந்திருக்கும். தயிர்ப்பானைக்குள் விழுந்த இரண்டு தவளைகளில் ஒன்று மேலே ஏறும் போது மற்றொன்று அதனை கீழே இழுப்பதாக ஒரு கதை உண்டு. நாம் முன்னேறும் போது நம்மை கீழே இறக்க ஒரு கூட்டமிருக்கும். உயரே செல்லும் போது நம்மை பலவீனப்படுத்தும் உத்திகளைக் கையாள ஒரு கூட்டம் இருக்கும்.

எல்லாவற்றையும் கடப்பதற்கு தேவை மன வலிமை. ஆனால் மன வலிக்குள் மூழ்குகிறோம். வாழ்க்கை என்றால் என்னவென்று அறிய நினைத்த ஒருவன் பல தரப்பட்ட மனிதர்களைப் பின் தொடர்கிறான். ஒரு பூங்காவைக் கடக்கும் சிறுவன் தன் அப்பாவிடம் இந்த வாழ்க்கை அழகானது என்கிறான். வைத்தியசாலை கடக்கும் நடுத்தர வயதுள்ள ஒருவனோ இந்த வாழ்க்கை துன்பகரமானது என்கிறான். ஆறுதல் சொல்லும் மனிதர்களைக் கண்டவனோ வாழ்க்கை என்பது மனிதர்களால் ஆனதாக கூறுகிறான். காதல் வசப்பட்ட இளைஞனுக்கோ வாழ்க்கை அழகானதாகத் தெரிகிறது. இறுதியில் தன் தாத்தாவிடம் சென்று கேட்கிறான். வாழ்க்கை என்பது செயல்களால் ஆனது என்கிறார் அவர். ஒருவனது செயல்களே அவனது வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றன.

# புன்னகைக்க விலை ஏதுமில்லை


நல்ல சிந்தனைகளே இல்லாமல் ஆலய வழிபாடு செய்து பயன் ஏதும் இல்லை. எளியவர்க்கு இரங்கும் போது நமது பிரார்த்தனை தானாகவே நிறைவேறுகிறது.

மற்றவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நாம் உதவி செய்யும் போது வாழ்க்கை நம் தேவைகளைத் தானாகவே நிறைவேற்றி விடும்.

சிடு மூஞ்சித்தனமாக இருப்பவர்களை யாருக்கும் பிடிப்பதில்லை. புன்னகைக்க விலை ஏதுமில்லை தானே? உள்ளத்தில் அன்பு மலரும் போது தான் புன்னகை முகத்தில் மலரும். கிடைத்த வாழ்க்கையை அழகாக வாழாமல் வெற்றுப் புலம்பல்களோடே வாழ்வதல்ல வாழ்க்கை.

பழைய நினைவலைகளை யோசிக்கும் போது அதில் உள்ள சோகங்களை மட்டுமே அசை போடாமல் நல்ல நிகழ்வுகளையும் அசை போடுங்கள்.

இன்முகத்துடன் ரசித்து ருசித்து வாழ்வதே சிறப்பு. ஒரு நாள் தான் வாழ்க்கை என்று தெரிந்த போதும் மலரும் பூக்கள் போல சிரித்துக் கொண்டே வாழலாம். சிறிய செயல்களையும் சிறப்பாகச்செய்ய வேண்டும் என்ற ஆர்வமிருந்தாலே போதும் ஆத்மார்த்தமான ஈடுபாடு அச்செயலை அழகாக்கும்.





- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

# சர்வதேசத்தையும் திரும்பிப் பார்க்க வைத்த திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர்

## அவர் புனிதரான கதையும் அவரைச் சந்தித்த புதுமையான அனுபவமும்

கடந்த வார ஆக்கத்தில் நான் திருத்தந்தையை சந்திக்க புனித பேதுறுவானவர் சதுக்கத்திற்குச் சென்று உள்ளே சென்றமை பற்றி விளக்கினேன்.

ஒருவர் வந்து என்னை சோதனை இட்டு உள்ளே அனுப்பினார். மேதகு கமிலஸ் நிர்மலன் அடிகளார் ‘உம்மை முதல் நான்கு வரிசைக்குள் விடுவார்கள். மேடையில் ஏறி திருத்தந்தையைச் சந்திக்கலாம். இலங்கையில் இருந்து வந்துள்ளேன் என்று சொல்லும். சந்திப்பு முடிய வெளியே வாரும் ஜெபரட்ணம் அடிகளார்



வந்து உம்மை கூட்டிப் போவர்’ என்றார். நான் உள்ளே நுழைகிறேன்.

நீண்ட மண்டபம். நடுவே நடந்து செல்லும் பாதை. கிட்டத்தட்ட அரைவாசி மண்டபம் நிறைந்திருந்தது. மக்கள் மண்டபத்திற்கு இன்னும் வந்து கொண்டே இருந்தனர்.

திருத்தந்தை வயது முதிர்ந்து இருந்தமையால் தனியான சந்திப்புக்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டு பொதுவான சந்திப்பு மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தது. இதனால் பொதுவான சந்திப்பிற்கு மண்டபத்தில் அமர்ந்திருக்கும் முதல் நான்கு வரிசையில் இருப்பவர்கள் மட்டும் திருத்தந்தையை மேடையில் ஏறிச் சந்திக்கலாம் என்றிருந்தது. அப்படியிருந்தும் நான் மேடையில் ஏறித் திருத்தந்தையயச் சந்திக்கலாம் என்ற செய்தி எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

நான்காவது வரிசையில் முதலாவது ஆளாக அமர்ந்திருந்தேன். திரும்பிப் பார்த்தேன். அந்த நீண்ட மண்டபம் இன்னும் முழுமையாக நிறையவில்லை. எனது கமராவை எடுத்து அழகுற அமைந்திருந்த அந்த மேடையை அமர்ந்திருந்தவாறே பலதடவை படம் எடுத்தேன். சற்று நேரத்தில் அதிகாரி ஒருவர் வந்து வரவேண்டிய அமைச்சர் ஒருவர் வரவில்லை, எனவே மூன்றாவது வரிசையில் முதலாவது ஆளாக என்னை அமர வைத்தார்.

மகிழ்வு இன்னும் அதிகமானது. திருத்தந்தையை எப்போது காணலாம் என எண்ணிக் கொண்டிருந்தபோது என்மனதில் ஓடிய அந்த பயங்கரம் மிக்க சம்பவத்தை இங்கு பதிய வேண்டும்.

### 20ஆம் நூற்றாண்டின் ஒப்பற்ற தலைவர் எனப் போற்றப்பட்டவர்

1920 ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி போலாந்தில் ஆசிரியரான தாய்க்கும் இராணுவத்தினரான தந்தைக்கும் பிறந்த இவர் 9 வயதில் (1929) தாயையும், 12 வயதில் (1932) ஒரே சகோதரரையும், 21 வயதில் (1941) தந்தையையும் இழந்தவர். 24 ஆவது வயதில் (1939) 2ஆம் உலகப்போர் காலத்தில் போலாந்து ஹிட்லரின் பிடியில் இருந்த போது இராணுவ ஆட்சியையும் அடிமைத்தன வாழ்வையும் அனுபவித்தவர். 26 வயதில் (1946) குருப் பட்டத்தையும், 28 வயதில் (1948) கலாநிதிப் பட்டத்தையும், 33 வயதில் (1953) இரண்டாவது கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர். 38 வயதில் (1943) ஆயராகவும், 43 வயதில் (1964) பேராயர் ஆகவும், 47 வயதில் (1967) கருதினால் ஆகவும், 58 வயதில் (1978) திருத்தந்தை ஆகவும் பணியின் படிகளில் ஏறியவர்.

மூவர் திருத்தந்தையர்களாக இருந்த ஆண்டு என வர்ணிக்கப்படும் 1978ஆம் ஆண்டு இரும்புத்திரை போடப்பட்ட கம்யூனிஸ நாட்டில் இருந்து வந்து பல சாதனைகளைப் படைத்து 20ஆம் நூற்றாண்டின் ஒப்பற்ற தலைவர் எனப் போற்றப்பட்டவர்.

அடிமைத்தன வாழ்வில் கற்சுரங்கத்தில் கல்லுடைத்துப் பிய்ந்துபோன கைகளோடும் தொழிற்சாலையில் சுண்ணாம்பு பட்டு அவிந்து போன கால்களோடும் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்ட நிலையில் இரவிரவாக இரகசியமாக படித்து இரண்டு டாக்டர் பட்டம் பெற்ற இவர் ஒரு நடிகன் - கவிஞன் - உதைபந்தாட்ட வீரன். மலையேறுதல் - பனிக்கட்டி சறுக்குதல் - நீந்துதல் என்பன இவரின் விருப்பமான பொழுது போக்குகள்.

போலந்து நாட்டைச் சேர்ந்த முதலாவது திருத்தந்தை - 400 ஆண்டுகளுக்குப் பின்னர் இத்தாலியர் அல்லாத ஒரு திருத்தந்தை - 1340 பேருக்கு அருளாளர் பட்டமும், 483 பேருக்கு புனிதர் பட்டமும் வழங்கியவர். தமது 26 ஆண்டு ஆட்சிகாலத்தில 129 நாடுகளுக்கு பயணம் செய்தவர். இந்தப் பலமான பின்னணியோடு அரசியற் பலமோ அதிகார வல்லமையோ எதுவும் இல்லாத போதும் தமது திருத்தந்தை பதவியையும் ஆன்மீக வல்லமையையும் பணயம் வைத்து யாருக்கும் அஞ்சாமல் முழு உலகிற்கும் கேட்கும் விதமாக நீதியை உரத்துச் சொன்னவர். உலக சமாதானத்திற்காக - அது யாருக்கு எதிரான குரலாக இருந்தாலும் - எந்த ஐயமோ பயமோ இன்றி வலியுறுத்தி வந்தவர்.

இதனாலோ என்னவோ அந்தப் பயங்கர அனுபவத்தை அவர் சந்திக்க நேர்ந்தது.

1981 மே 13 ஆம் திகதி கத்தோலிக்க உலகையே உலுக்கிய நாள். கொடிய செயல்கள் மலிந்த இருபதாம் நூற்றாண்டின் கடைசிக் கட்டத்தில் தான் உலகில் கிறிஸ்துவின் பிரதிநிதியாகிய திருத்தந்தையை கொல்ல முயன்ற திடுக்கிடும் செயல் இடம்பெற்றது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் அவர் அன்று சமுகம் அளித்திருந்தார். மக்கள் இன்னும் தம்மை அண்மையில் தரிசிக்க, மக்கள் தம்மோடு இன்னும் நெருக்கமாக தொடர்பு கொள்ளவும் வாய்ப்பளிக்கும் வகையில் அவர் மக்கள் கூட்டத்தின் நடுவே சென்றுகொண்டிருந்த போதே எதிர்பாராத விதமாக அவர் ஒரு கொலைஞனின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயம் அடைந்தார்.

சுடப்பட்ட 9 கலிபர் துப்பாக்கிச் சன்னங்களில் ஒன்று அவரது இடக் கையை காயப்படுத்தியது. மற்றொன்று அவரது உடலைத் துளைத்து பின் வெளியேறி அவரது வாகனத்திற்குள் விழுந்தது.

கொலைக்காரர் 23 வயதான முகமது அலி அகா என்னும் இளைஞன் என்று பின்னர் இனம் காணப்பட்டார்.. சுமார் 6 மீற்றர் தூரத்தில் இருந்து இரு முறை சுட்ட முகமது அலி அகாவின் நோக்கம் திருத்தந்தையை கொல்லுவதே என்பதில் எந்தவித சந்தேகமும் இருக்கவில்லை.

உடனடியாக சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட திருத்தந்தையின் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக இருந்தது. அவரது இரத்த அழுத்தம் வீழ்ச்சியுற்று நாடித் துடிப்பு தளர்ந்து யோயிற்று. திருத்தந்தையின் செயலராக அருட்தந்தை ஸ்ரனினஸ் லாவி சுவிற்ஸ் அவருக்கு இறுதி அருட்சாதனங்களை அளித்தார்.

சத்திர சிகிச்சையின் போது அவரது உடலில் இருந்து பெருமளவு இரத்தம் வெளியேறியது. உட்காயங்களால் தமது இரத்தத்தின் 60 வீதத்தை இழந்து இருந்தார். 5



மணி 20 நிமிடம் நீடித்த சத்திர சிகிச்சையின் போது சிதைவுற்ற அவரது குடலில் ஒன்றரை மீற்றரை அகற்ற வேண்டி இருந்தது.


துப்பாக்கிக் குண்டினால் ஏற்பட்ட சிதைவுகளை சீர்ப்படுத்துவதில் ஈடுபட்டிருந்த வைத்தியர்களுக்கு குண்டு சென்றிருந்த வழி ஆச்சரியத்தைக் கொடுத்தது. அங்கு ஒரு புதுமை நிகழ்ந்திருப்பதாக அவர்கள் உணர்ந்தனர்.

முக்கிய உறுப்புக்களை எல்லாம் விலக்கி, யாரோ அக்குண்டை செலுத்தி இருப்பது போல் தோன்றியது. அவரது பெரு நாடியும் முள்ளந்தண்டும் மயிரிழையில் தப்பியிருந்தன. இதன் காரணமாகவே அவர் உயிர் காக்கப்பட்டது மட்டுமன்றி அவரது உடலில் நிரந்தரமாக பாதிப்பும் ஏற்படவில்லை.

### துப்பாக்கியை இயக்கியது ஒரு கை சன்னத்தை வழிநடத்தியது வேறொரு கை

1981ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.19 மணிக்கு வத்திக்கான் புனித பேதுருவா

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்



னவர் சதுக்கத்தில் திருத்தந்தை வலம் வந்த போது சுவிற்சலாந்து நாட்டைச் சேர்ந்த கிறிஸ்தோப்பர் கியும் என்ற மாணவன் தனது கமராவை திருத்தந்தை வலம் வந்த பாதையில் நீட்டி வைத்து படம் எடுப்பதற்காகக் காத்திருந்தார். நேரம் வந்த போது கிளிக் செய்தார்.

அந்த படத்தில் திருத்தந்தையை நோக்கி முகமது அலி அகா என்ற தீவிரவாதி துப்பாக்கியால் சுட ஆயத்தமான காட்சி பதியப்பட்டுள்ளது. கரம் ஒன்று துப்பாக்கியை திருத்தந்தையை நோக்கி நீட்டப்பட்டுள்ளது. சுடுவதற்கு சில வினாடிகளுக்கு முன்னர் எடுக்கப்பட்ட படம் இதுவாகும்.

திருத்தந்தை பின்னர் கூறியது போல் துப்பாக்கியை இயக்கியது ஒரு கை சன்னத்தை வழிநடத்தியது வேறொரு கை.

பற்றிமா அன்னையின் மூன்றாவது இரகசியத்தை ஏற்கனவே படித்திருந்த திருத்தந்தைக்கு அதில் கூறப்பட்ட வெண்ணிற ஆடை அணிந்த ஆயர் தாமே என்று தோன்றியிருக்க வேண்டும். பற்றிமா அன்னையின் கரமே அன்று தன் உயிரைக் காத்தது என்று அவர் உறுதியாக நம்பினார்.

குற்றவாளி அலி அகா உடனடியாக கைது செய்யப்பட்டான். அவன் தானாகவே இக்காரியத்தை செய்யவில்லை என்பது வெளிப்படலாயிற்று. அவனை இயக்கியது யார்?

இத்தாலிய குற்றவியல் நிபுணர்களும் எத்தனையோ நாடுகளின் புலனாய்வு ஸ்தாபனங்களும் இதனைக் கண்டுபிடிக்க முனைந்தன.

திரும்பிப் பார்த்தேன். இன்னும் மண்டபம் நிறையவில்லை.

(தொடரும்.........)

# தனியார் காணிகளை ஊடறுத்து கட்டுவன் - மயிலிட்டி வீதி அமைப்பு!

## சட்ட நடவடிக்கைக்கு தயாராகிறார் சுமந்திரன்

அடாத்தாக அமைக்கப்படும் கட்டுவன் – மயிலிட்டி வீதியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேரில் சென்று பார்வையிட்டார்.

யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்கான பாதையில் 400 மீற்றர் பாதையை அபகரித்துள்ள படையினர் வீதியை விடமறுத்து தனியாருக்குச் சொந்தமான நிலத்தின் ஊடாக தற்போது பாதை அமைக்கும் விடயம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நேற்று (சனிக்கிழமை) சம்பவ இடத்துக்கு நேரில் வந்து பார்வையிட்டமையோடு சட்டப்படி சுவீகரிக்காது நில உரிமையாளரின் சம்மதம் இன்றி அவர்களின் கிணறுகளை இடித்து அழித்து



அதன் மேல் புதிய வீதிகளை அமைப்பவதையும் பார்வையிட்டுள்ளார்.

காணி உரிமையாளர்களைச் சந்தித்து உரையாடிய நாடாளுமன்ற உறுப்பினர், சட்ட ரீதியாக விடயத்தைக் கையாள்வதற்கு அவர்களின் சம்மதத்தையும் கேட்டறிந்துகொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினரோடு நில உரிமையாளர்கள், வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், யாழ். மாநகரசபை உறுப்பினர் லோகதயாளன், வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சித் தேர்தலை விரைவில் நடத்த ராஜபக்ஷவின் அரசு வியூகம்

விரைவில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் ராஜபக்ஷ அரசு பரீசிலித்து வருகின்றதாக நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறிய முடிகிறது.

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை காரணமாகவே உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் ஓராண்டுக்கு நீடிக்கப்பட்டிருந்தாலும், அரசு நினைக்கும் நேரத்தில் அதற்கான தேர்தலை நடத்த முடியும்.

தற்போதைய சூழ்நிலையில் தேசிய மட்டத்திலான தேர்தலொன்றுன்றுக்கு வாய்ப்பில்லை என்பதாலேயே, உள்ளூராட்சி சபைத் தேர்தல் பற்றி அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.




Sri Mahakaliamman Devasthanam, Valaithoddam, Iyakkachchi Temple Trust

ஸ்ரீ மகா காளியம்மன் ஆலயம்

ஆலய நிர்வாக உத்தியோகத்தர் தேவை

இயக்கச்சியில் அமைந்துள்ள ஸ்ரீ மகா காளியம்மன் ஆலயத்துக்கு இந்து மதத்தைச் சேர்ந்த, ஆலய வழியாடுகளில் ஈடுபாடுள்ள, சமூகசேவை மனப்பான்மையுள்ள நிர்வாக உத்தியோகத்தர் தேவை.

ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆலயத்தை அறங்காவலர் சபையின் வழி காட்டலுக்கேற்ப நிர்வகித்து நித்திய பூசைகளை குறிப்பிட்ட நேரத்திற்கு நடாத்தி ஆலய உற்சவங்களையும், சிறப்பு பூசைகள் ஆகியவற்றையும் ஆகம முறைப்படி நடைபெறுவதை உறுதி செய்வதும் பிரதான கடமைகளாகும்.

ஆலய செயற்பாட்டுக்குத் தேவையான முழு நிர்வாகத்தையும் பொறுப்புடன் ஏற்றுச் செயற்படுவது இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கபடும் நபரின் கடமையாகும்.

ஆலயத்தின் அண்மித்த பகுதியில் வாழும் மக்களின் சமய சமூக கல்வி மேம்பாட்டுக்கு உதவுவதும் இந்த நிலைக்குரிய பணியாகும்.

ஆலயம் அமைய்ந்துள்ள அண்மித்த பகுதியிலிருந்து கிடைக்கும் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படினும், மற்றைய பிரதேசங்களிலிருந்து கிடைப்பவையும் சமமாக பரிசீலிக்கப்படும்.

ஆலயத்தோடு மிகுந்த ஈடுபாடுள்ள, தேர்ந்தெடுக்கப்படும் நபருக்கு தகுந்த ஊதியமும் வழங்கப்படும்.

தொடர்பு கொள்ளவும் :
மின்னஞ்சல் : sr@isfindustries.com
தொலைபேசி : 077 207 8455
தபாலில் : 34 , Rockwood Place , Colombo 07.

சயன்ஸ் அக்கடமி
SCIENCE ACADEMY NALLUR ARIYALAI JAFFNA
நல்லூர், முருகன் ஆலயம் முன்பாக நாவலர் வீதி, அரியாலை.
தொ.பே : 077 538 8471, 077 312 6807, 021 222 9016
தரமான கல்வியை என்றும் வழங்கும் முதற்தர நிறுவனம்
புதிய கல்வியாண்டு - 2022
தரம் 1 முதல் தரம் 5 வரை
வாராந்தம் வெற்றித்தேர்வு பரீட்சைகளோடு வெற்றித்தேர்வு ஆரம்பக் கல்விப் பிரிவு
தரம் 6 முதல் O/L வரை
தமிழ்மொழி மூல வகுப்புகள் & English Medium Classes
இவற்றுடன் ICT, ENGLISH LITERATURE, சிங்களம் ஆகிய பாடங்களும் !
இவை அனைத்தும் ஒரே இடத்தில் பெற்று சாதனை படையுங்கள் !
ஆரம்பம் - 07.02.2022 திங்கட்கிழமை மாலை 3.00 மணி
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
"எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே"

சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
Reg.No:DS882
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை



தலைமைக் காரியாலயம்:-
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7578/ 7678
070 301 3011/ 077 949 5706
கிளை நிறுவனங்கள் :-
உரிமையாளரின் தொடர்புக்கு:
0777 226 247/ 077 614 0361
web:- sasikalearners.com
email:- sasikadrivingschool@gmail.com

| மல்லாகம் | பண்டத்தரிப்பு | சங்கானை | சாவகச்சேரி | காரைநகர் | நெல்லியடி | யாழ் மத்தி (Town) | புன்னாலைக் கட்டுவன் | வேலணை |
|---|---|---|---|---|---|---|---|---|
| T.P: 021 224 3393<br>070 301 3014<br>077 343 6622 | T.P: 021 225 2333<br>071 255 4135<br>077 434 3798 | T.P: 021 225 1664<br>070 301 3016<br>077 434 3149 | T.P: 021 227 0616<br>071 577 0616<br>077 435 3995 | T.P:<br>021 225 2454<br>070 510 2484 | T.P:021 226 0999<br>071 755 0999<br>077 261 2446 | T.P: 021 222 8004<br>070 301 5004<br>070 301 3017<br>077 998 6247 | T.P: 021 224 5001<br>076 384 0684<br>077 934 6509 | T.P:<br>021 221 5472<br>070 301 3012 |


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.02.2022இல் வெளியிடப்பெற்றது.

# சிறுகதை

## இரா.சிவலிங்கம்

# தோட்டத்து மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்கின்றார்கள்

அன்றுத் தோட்டத்து முத்தழிழ் மன்றத்தில் ஒரு பொதுக் கலந்துரையாடலை தோட்டத்தில் உள்ள ஆசிரியர்களாலும், அந்தத் தோட்டத்தில் படித்து இன்று அதிபராக இருக்கும் ஒருவராலும் ஒழுங்குச் செய்யப்பட்டிருந்தது. இந்தக் கலந்துரையாடலின் நோக்கம், அதே தோட்டத்தில் க.பொ.த உயர்தரத்தில் கல்வி கற்கும், மாணவர்களையும், அவர்களுடையப் பெற்றோர்களையும் தோட்டத்திலுள்ளத் தோட்டத்தலைவர்களையும், இளைஞர்களையும் அழைத்து இருந்தார்கள். கலந்துரையாடலானது மங்களகுத்து விளக்கேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்டது. அன்றையக் கூட்டத்தின் நோக்கம் பற்றிய மிகத் தெளிவானக் கருத்துக்களை அதிபர் விளக்கி கூறினார். அதில் முக்கியமாக க.பொ.த உயர்தரக் கல்வியைக் கற்பதன் நோக்கம், அதன் முக்கியத்துவம், உயர்தரக் கல்வியை சிறப்பாகப் பெற்றுப் பல்கலைக்கழகம் சென்றால் கிடைக்கும் நன்மைகள், பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர்களின் பங்களிப்பு எவ்வாறு இருக்க வேண்டும். வறுமையானக் குடும்பத்தில் இருந்து வந்து தன்னுடைய விடாமுயற்சியால் கல்விக் கற்று இன்று உயர் பதவிகளில் இருக்கின்றவர்களின் பெயர்களையும், உதாரணங்களையும் எடுத்துக் கூறினார். அதில் அதிபர் தன்னுடைய வரலாற்றையும் கூறத்தவறவில்லை. தோட்டத்தில் உயர்கல்வியைக் கற்கும் மாணவர்கள் எவ்வாறு இரண்டு வருடங்களில் படிக்க வேண்டும். தங்களுடைய இலக்கு, நோக்கம், குறிக்கோள் எவ்வாறு அமைத்துக்கொள்ள வேண்டும் எனவும் மிகவும் தெளிவாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறினார்.

மலையகத்தின் முதலீடு கல்விதான் என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினார், கல்விதான் வறுமையை ஒழிக்கும், கல்வி என்பது இருட்டில் இருந்து வெளியே வருதல், லயத்து வாழ்க்கையில் இருந்து வெளியே வருதல், பிரச்சினைகளில் இருந்து வெளியே வருதல். வறுமையிலிருந்து வெளியே வருதல் என பல உதாரணங்களோடு கூறிக்கொண்டிருந்தார். கூட்டத்தில் கலந்துக் கொண்டிருந்தவர்கள் மிகவும் அமைதியாகவும் ஆவலோடும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். சுமார் ஒரு மணித்தியாலம் அவர் சகல விடயங்களையும் கூறி முடித்தப்பின்னர் தேநீர், பிஸ்கட் அனைவருக்கும் வழங்கப்பட்டது. பின்னர் மீண்டும் பொதுக் கலந்துரையாடல் நடைபெற்றது. அதில் ஒவ்வொருவரும் தங்களுடையக் கருத்துக்களைக் கூறினார்கள். அந்த தோட்டத்தில் அந்த வருடம் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு, கலைத்துறையில் ஆறு மாணவர்களும், கணித விஞ்ஞானப் பிரிவில் ஐந்து மாணவர்களும், வணிகப் பிரிவில் ஐந்து மாணவர்களும், தொழில்நுட்பப் பிரிவில் மூன்று மாணவர்களும் இருந்தார்கள். இந்த மாணவர்கள் தினமும் ஒன்றாகத் தங்கிப்படிப்பதற்கு ஒரு பொது இடங்களை ஒதுக்க வேண்டும் எனவும் அவர்களுக்கானத் தேநீர் செலவுகளைத் தோட்டத்து கோவில் பரிபாலனச்சபை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும். அவர்களுடையப் மேலதிக வகுப்புச் செலவுகளைத், ஏனையச் செலவுகளையும் தோட்டப் பொது மக்களும், தோட்டத்து இளைஞர்களும் உதவி செய்வதாக ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. விஞ்ஞான, கணித தொழில் நுட்ப மாணவர்களுக்கு முத்தமிழ் மன்றத்திலும், கலை, வர்த்தக மாணவர்களுக்கு கோவில் மண்டபத்திலும் இரவு தங்கிப் படிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டது. அவர்களைக் கண்காணிப்பதற்கான ஒரு பெற்றோர் குழுவும் நியமிக்கப்பட்டது. கலந்துரையாடப்பட்ட சகல விடயங்களும் அறிக்கையாக எழுதப்பட்டது. அன்றையக் கலந்துரையாடலில் பெற்றோர்கள் கூறியக் கருத்துக்களில் மிக முக்கியமானது. இந்தத் தேயிலைத் தோட்டத்து வாழ்க்கையில் நாங்கள் பட்டக் கஷ்டங்கள் எங்களுடன் முடியட்டும். எங்களுடையப் பிள்ளைகளாவது எதிர்காலத்தில் கஷ்டப்படாமல் வாழட்டும். நாங்கள் படுகின்ற கஷ்டங்களை எங்கள் பிள்ளைகள் படவேண்டாம். அவர்கள் படித்து உயர்ந்த தொழிலுக்கு, உயர்ந்த சம்பளத்தில், உயர்ந்த வாழ்க்கையை வாழட்டும். அதுதான் எங்களுடைய விருப்பமும், ஆசையும் ஆகும். நாங்கள் உயியோடு இருக்கும் போதே எங்களுடையப் பிள்ளைகள் படித்துப் பெரிய ஆளாக வரவேண்டும் என கண்ணீர் மல்கவும், உணர்ச்சிவசப்பட்டும் கூறியதைக் கேட்டவர்களின் கண்களில் கண்ணீர் கசிந்தது. மாணவர்களும் இதனை உணர்ந்துக் கொண்டு தாங்கள் படித்து நிச்சியம் பெற்றோர்களுடைய கனவை நனவாக்குவோம் எனக் கூறினார்கள். அங்கு வந்திருந்த ஆசிரியர்களும் தங்களுடையக் கருத்துக்களைக் கூறினார்கள், தோட்டத்து தலைவர்களும், இளைஞர்களும் தங்களுடைய காத்திரமானக் கருத்துக்களைக் கூறினார்கள். சில இளைஞர்கள் தங்களுக்கு வாய்ப்பு கிடைத்தும் படிக்காமல் போனதால் இன்று ஆட்டோ ஓட்டுவதாகவும், கடைகளில் வேலை செய்வதாகவும், தோட்டத்தில் பெயர்ப் பதிந்து வேலை செய்வதாகவும் தங்களுடையப் பிரச்சினைகளைச் சொன்னார்கள். கலந்துரையாடல் நடைபெற்ற அடுத்த வாரமே மாணவர்கள் படிப்பதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டதுடன், மாணவர்கள் படிக்கவும் தொடங்கினார்கள். இப்போது தோட்டத்திலும், வேலைச் செய்யும் இடங்களிலும் அந்த வாரத்தில் நடைபெற்றக் கலந்துரையாடல் பற்றியே கதைக்கப்பட்டது. தோட்டப் பெற்றோர்களிடையே கல்விப் பற்றிய விழிப்புணர்வு ஒன்று எழத்தொடங்கியதைக் காணக்கூடியதாக இருந்தது.

க.பொ.த. பரீட்சையும் நெருங்கியது. மாணவர்கள் ஒரு இலக்கோடும், ஒரு வெறியோடும் படித்துக்கொண்டிருந்தார்கள். காலங்கள் ஓடுகின்றன. பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின்றன. அப்பெறுபேறுகளின் படி முதன்முதலாக அந்தத் தோட்டத்திலிருந்து கலைப்பிரிவில் ஒரு மாணவனும், வர்த்தகப் பிரிவில் இரண்டு மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுச் செய்யப்பட்டு இருந்தார்கள். ஏனைய மாணவர்கள் சித்தி பெற்றிருந்தும். பல்கலைக்கழகத்திற்குச் செல்வதற்கான பெறுபேறுகள் போதாமையாக இருந்தது. பெறுபேறுகள் வந்த வாரத்தில் மீண்டும் அதிபரால் பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும், ஏனைய முக்கியஸ்தர்களுக்கும் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு சகல விடயங்களும் கலந்துரையாடப்பட்டது. அதில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவுச் செய்யப்பட்ட மாணவர்களையும், அவர்களது பெற்றோர்களையும் கௌரவிப்பதாக ஏக மனதாகத் தீர்மானிக்கப்பட்டது. அதே குறித்த ஆண்டில் மேலதிகமாக தோற்றவிருக்கும் உயர்தர மாணவர்களையும், கடந்த வருடத்தில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களும் சேர்ந்து தொடர்ச்சியாகப் படிக்க வேண்டும் எனவும், தொடர்ந்து முன்னர் போலவே சகல உதவிகளும் செய்யப்படும் எனவும் முடிவுகள் எடுக்கப்பட்டது.

அடுத்த வருடம் க.பொ.த உயர்தரப் பெறுபேறுகள் வெளியாயின் தோட்டத்திலுள்ள முத்தமிழ் மன்றத்தில் பெறுபேறுகளைப் பார்வையிடுவதற்காக பலர் கூடியிருந்ததை அவதானிக்க முடிந்தது. அந்த வருடத்தின் பெறுபேறுகளின் படி மருத்துவத் துறைக்கு இரண்டு மாணவர்களும், (இரண்டாம் வருட மாணவர்கள்), பொறியியல் துறைக்கு ஒரு மாணவனும், வர்த்தகத் துறைக்கு நான்கு மாணவர்களும், கலைத்துறைக்கு இரண்டு மாணவர்களும், தொழில் நுட்பத்துறைக்கு ஒரு மாணவனும் தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள். முதலாம் வருட மாணவர்களில் சகல துறைகளிலிருந்தும், ஒவ்வொரு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள். இந்தச் செய்தியைக் கேட்டப் பெற்றோர்களும், தோட்ட பொது மக்களும் மிக சந்தோசத்துடன் அந்த மாணவர்களையும் பெற்றோர்களையும், அதிபரையும், ஆசிரியர்களையும், தோட்டத்து தலைவர்களையும், தோட்டத்து இளைஞர்களையும் பாராட்டினார்கள். அடுத்த கிழமையில் தோட்டத்தில் மிகப் பெரிய ஒரு பாராட்டு விழா தோட்டத்து பொது மக்களால் அதிபர் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் பல பாடசாலை அதிபர்களும், அருகில் உள்ள தோட்டத்தலைவர்களும், தோட்டத்து இளைஞர்களும், பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டார்கள். மிகச் சிறப்பாக அன்றையப் பாராட்டு விழா நடைபெற்றது. அதில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவர்களுக்கு தோட்டத்து பொது மக்களால் பரிசில்களும், புலமைப் பரிசில்களும் வழங்கப்பட்டது. அதிபர் விசேடமாக கௌரவிக்கப்பட்டார்.

அன்றைய மேடையில் இரண்டு பெற்றோர்களுடைய உருவப்படங்கள் வைக்கப்பட்டு மாலையிடப்பட்டு விளக்கேற்றப்பட்டு இருந்ததை அனைவரும் பார்த்துக் கண்ணீர் விட்டார்கள். அந்தப் பெற்றோர்கள் தான் முதலாவது கலந்துரையாடலில் மிகவும் உணர்ச்சி வசப்பட்டு நாங்கள் பட்டக் கஷ்டங்களை எங்கள் பிள்ளைகள் படக்கூடாது என உறுதியாகச் சொன்னவர்கள். இன்று அவர்களுடையப் பிள்ளைகள், அவர்களின் படங்களுக்கு முன்னால் விழுந்து வணங்கினார்கள பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டு பாராட்டப்படும் போது, அந்த நிகழ்வுகளைப் பார்த்து சந்தோசப்படுவதற்கு அவர்களின் பெற்றோர்கள் இல்லையே என முழுத்தோட்டமே கண்ணீர் வடித்தது.

மறுநாள் அந்த தோட்டத்தில் பல மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட செய்தி பக்கத்து தோட்டங்களுக்கும் காட்டுத் தீயாய் பரவியது. சகல தோட்டங்களிலும் இதுபோன்ற கலந்துரையாடல்களை நடாத்துவதோடு தோட்டங்கள் தோறும் கல்வி அபிவிருத்திக் குழு ஒன்றும் போடப்பட்டது. கட்சிகளுக்கு கொடுக்கும் சந்தர்ப்பணத்தில் ஒருத் தொகைப் பணத்தை பல்கலைக்கழக மாணவர்களின் உயர்கல்விக்காக ஒதுக்க வேண்டும் எனவும் கோரிக்கை வைக்கப்பட்டது. தோட்டக் கம்பனியின் அதாயத்தில் ஒரு தொகைப் பணம் தோட்டத்து பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காக ஒதுக்க வேண்டும் எனவும் பொது மக்கள் கதைத்துக் கொண்டார்கள்.

பல்கழைக்கழகத்திற்குச் சென்ற மாணவர்கள் பல்கலைக்கழக பட்டம் பெற்று வரும் காலம் நெருங்கிக் கொண்டு இருந்தது. அவர்களின் வருகையைத் தோட்டத்து பொது மக்கள் ஆவலோடு எதிர்ப்பார்த்துக் காத்திருந்தார்கள்.

# பாரதியார்பற்றி சிறு துளி

சாதாரண மக்களும் எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய எழுச்சியூட்டும் பாடல்களைப் பாடி, விடுதலை உணர்வை மக்களுக்கு ஊட்டி, அவர்கள் உள்ளுணர்வைத் தட்டி எழுப்பியவர் மகாகவி பாரதியார்.

1882 ஆம் ஆண்டு டிசம்பர் 11 அன்று சின்னசாமி ஐயருக்கும் லட்சுமி அம்மாளுக்கும் எட்டயபுரத்தில் பிறந்த பாரதி (சுப்பையா என்று அழைக்கப்பட்டார்) தனது 11 ஆவது வயதில் பள்ளியில் படித்து வரும்பொழுதே கவிபுனையும் ஆற்றலை வெளிப்படுத்தினார்.

1897 ஆம் ஆண்டு செல்லம்மாளை மணந்தார். 1898 ஆம் ஆண்டு தொழிலில் ஏற்படும் நஷ்டத்தினால் வறுமை நிலையினை அடைந்தார்.

இதனை எட்டையபுரம் மன்னருக்குத் தெரிவித்து பொருளுதவி வழங்குமாறு கடிதத்தில் கேட்டுக்கொள்கின்றார். பின்னர் எட்டையபுரம் அரண்மனையில் பணி கிடைத்தது. சிறிது காலங்களிலேயே அப்பணியை விடுத்து காசிக்குச் செல்கின்றார்.

1898 முதல் 1902 வரை காசியில் தங்கி இருந்தார். பின்னர் எட்டையபுரத்தின் மன்னனால் அழைத்து வரப்பட்டு காசி அரண்மனை ஒன்றினில் பாரதி வாழ்ந்தார். இவ்வாறு ஏழு வருடங்கள் பாட்டெழுதாமல் இருந்த பாரதி 1904 ஆம் ஆண்டு மதுரையில் அவர் எழுதும் பாடல் ‘விவேகபானு’ இதழில் வெளியாகின்றது. வாழ்நாள் முழுதும் பல்வேறு தருணங்களில் பத்திரிகை ஆசிரியராகவும் மதுரையில் சேதுபதி மேல்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

தமிழ், ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம் மற்றும் வங்காள மொழி ஆகியவற்றில் புலமை பெற்றவர். பிற மொழி இலக்கியங்களை மொழி பெயர்க்கவும் செய்துள்ளார்.

அவரது நூல்களாக

1) தேசிய கீதங்கள்
2) ஞானப் பாடல்கள்
3) பல்வகைப் பாடல்கள்
4) பக்திப் பாடல்கள்
5) கண்ணன் பாட்டு
6) குயில் பாட்டு
7) பாஞ்சாலி சபதம்
8) சுய சரிதை
9) பகவத் கீதை முன்னுரை
10) சந்திரிகையின் கதை என்பன உள்ளன.



காலைக்கதிர் Kalaikkathir

# நல்லாட்சிக் காலத்தில் உரிமைகளை கேட்டு பெற்றிருந்தால் தற்போது போராட்டம் எதற்கு?



## மஸ்தான் எம்.பி. கேள்வி

தற்போது போராட்டம் நடத்துபவர்கள் நல்லாட்சி இருந்த போது அந்த உரிமைகளைக் கேட்டுப் பெற்று இருந்தால் தற்போது போராட்டம் நடத்தத் தேவையில்லை என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கே.கே.மஸ்தான் தெரிவித்துள்ளார்.

வவுனியா சகாயாமாதபுரம் கிராமத்தில் 20 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட சனசமூக நிலையகட்டத்தை கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைத்து உரையாற்றும் போதே இவ் வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை மக்களுக்கு மிகவும் இன்றைய தினம் முக்கிய நாளாகும். அந்நிய ஆதிக்கத்தில் இருந்து நாடு சுதந்திரம் பெற்ற ஒரு தினமாகும்.

இதன் தேசிய நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது. வன்னி மாவட்டத்தில் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு மாவட்டத்திற்கு தலைமை தாங்கி இந்த நிகழ்வை நான் செய்து வருகின்றேன்.

அந்த வகையில் இம்முறை முல்லைத்தீவு மாவட்டத்தில் சுதந்திர தினத்தை தலைமையேற்று கொண்டாடினேன். அதே சுதந்திர தினத்தில் எமது கிராமத்திலும் ஒரு நிகழ்வை செய்ய வேண்டும் என்பதற்காக சனசமூக நிலையத்தை கையளிக்கும் நிகழ்வு தற்போது நடைபெறுகிறது.

2019 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் இந்தக் கட்டுமாணம் நிர்ணயிக்கப்பட்டாலும் கொவிட் காரணமாக காலதாமதாக மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. தேர்தல் காலங்களில் நாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகின்றோம்.

இந்த கிராமத்திற்கு நகரசபை உறுப்பினர் பதவி வழங்கப்படும் என தேர்தலில் வழங்கிய வாக்குறுதிக்கு அமைய அதனை நிறைவேற்றியுள்ளோம். அதே போல் மக்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி கொடுத்து வருகின்றோம்.

ஜனாதிபதி அவர்களின் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் மஹிந்த ராஜபக்ஷவின் ஆசிர்வாததத்துடன், நிதி அமைச்சரும், வறுமை ஒழிப்பு ஜனாதிபதியின் செயலணியின் தலைவருமான பஸில் ராஜபக்ஷவின் திட்டமிடலில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்கும் 30 லட்சமும், வட்டாரத்திநற்கு 40 லட்சமும், ஒருங்கிணைப்பு குழுத் தலைவருக்கு 100 லட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்த நிதி மூலம் மக்களுடைய வாழ்வாதாரத்தை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிராமத்திற்கான உரையாடல் ஊடாக அதற்கான வேலைத்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டன. நான் ஒருங்கிணைப்பு தலைவராக இருக்கும் மாவட்டங்களில் இயன்றளவுமக்களதுவாழ்வாதராத்துக்கு முன்னுரிமையளித்து அந்த நிதிகளை பயன்படுத்தியுள்ளேன்.

அதேபோல், 30 லட்சத்தில் தெரிவுகள் இடம்பெற்ற போது இங்கும் 100 வீதமும் வாழ்வாதார உதவிக்காக பயன்படுத்தியிருக்கலாம். ஆனால் இங்கு அப்படி ஒன்றும் பயன்படுத்தவில்லை. பொது மக்களுக்குரிய வாழ்வாதாரத்தை கேட்டு நிற்கின்றீர்கள்.

நான் ஒருங்கிணைப்புத் தலைவராக இருக்கும் மாவட்டங்களில் மக்களின் வறுமை வீதத்தை இந்த ஆண்டு மூன்றில் ஒன்றாகத் குறைப்பேன். அதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றேன். நாம் இந்த நிதிகளை கிராம மட்டங்களில் செயற்படுத்த நடவடிக்கை எடுத்தபோது எதிர் தரப்புக்களால் கேளிக்கை செய்யப்பட்டது.

கொவிட் தொற்று காரணமாக உலக நாடுகளில் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. அதேபோல் இலங்கையிலும் பாதிக்கப்பட்டுள்ளது. மக்களை பிழையாக செயற்படுத்துவதாக கூறினார்கள். ஆனால் வரவு செலவு திட்டத்தின் மூலம் நிதிகளை ஒதுக்கீடு செய்து மாவட்ட மட்டத்தில் அதனைச் செய்து காட்டியுள்ளோம்.

மக்களை ஏமாற்றவில்லை. உரிய வகையில் அபிவிருத்தி திட்டங்களைத் தெரிவு செய்தால் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும். எதிர்காலத் திட்டங்களில் எனது இந்தக் கிராமத்தில் உள்ள மக்களின் தேவைப்பாடுகளையும் கருதி அவர்களின் வாழ்வாதாரத்தையும் உயர்த்த முயற்சிப்பேன்.

ஒவ்வொன்றுக்கும் போராட்டம் நடத்துபவர்கள் கடந்த நல்லாட்சியில் இருந்தார்கள். அப்போது கேட்டு அதனை பெற்றிருந்தால் இப்போது போராட்டம் நடத்த தேவையில்லை. சுதந்திர தினமன்றும் போராட்டம் நடத்துகிறார்கள்.

5 வருடம் நல்லாட்சி என்று இருந்த போது அந்த உரிமைகளை கேட்டு பெறவில்லை. அதனை பெற்றிருந்தால் இந்த போராட்டம் தேவையில்லை. ஆளும் கட்சியில் இருந்து அபிவிருத்திகளை செய்து உரிமைகளைப் பெறலாம். இது பல இனம், பல மதம் கொண்ட மக் கள் வாழும் நாடு. பல பிரச்சினைகள் இருக்கும். ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு பிரச்சினை. ஒவ்வொரு விதமான பிரச்சினை. அந்த பிரச்சனைகளை நாம் ஆளும் கட்சியில் இருப்பதால் எமது உயர் தலைவர்களுடன் பேசி வருகின்றோம்.

நிரந்தர தீர்வு இல்லாவிட்டாலும் நிம்மதியாக வாழக்கூடிய நிலையை உருவாக்கி வருகின்றோம். ஒவவொரு இனத்திற்கும் பல கலை கலாசார பண்பாடுகள் இருக்கும். அதனை நாம் கவனம் செலுத்தி வருகின்றோம். எமக்கு அபிவிருத்தியுடன் கூடிய உரிமைகள் தேவை. அதற்குரிய முயற்சிகளை நாம் எடுப்போம் எனவும் இதன்போது தெரிவித்துள்ளார்.

# இறந்த அரசியல்வாதிகளின் மனைவிமார்களின் பாதுகாப்புக்கு அமைச்சரவை பாதுகாப்பு பிரிவு

தேர்தலில் தோல்வியடைந்த அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஆளுநர்கள், முன்னாள் முதலமைச்சர்கள், பௌத்த நாயக தேரர்கள், நிலமேகள் மற்றும் உயிரிழந்த முன்னாள் அரசியல்வாதிகளின் மனைவிகள் ஆகியோரின் பாதுகாப்புக்காக அமைச்சரவை பாதுகாப்பு பிரிவை சேர்ந்த 245 அதிகாரிகள் வழங்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் தலைமையகத்தின் தகவல்கள் கூறுகின்றன.

இவர்களுக்கு வழங்கப்படும் இந்த பாதுகாப்புக்காக அரசு வருடாந்தம் சுமார் 15 கோடி ரூபாவை செலவிடுவதாகத் தெரியவருகிறது.

அமைச்சரவை பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த பெருந்தொகையானப் பாதுகாப்பு அதிகாரிகள் இவ்வாறு தோல்வியடைந்த அமைச்சர்கள், அரசியல்வாதிகளின் மனைவிகளின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்டுள்ளதால், பாதுகாப்பு பிரிவுக்கு ஆள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதனால், அமைச்சரவை பாதுகாப்பு பிரிவின் பணிகளுக்கு பெரும் சிக்கலான நிலைமை ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது. குறிப்பாக வெளிநாட்டு தூக்குழுவினர் வருகை தரும் போது அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

காலஞ்சென்ற முன்னாள் ஜனாதிபதியின் மனைவிக்கு அமைச்சரவை பாதுகாப்பு பிரிவை சேர்ந்த 17 அதிகாரிகள் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டுள்ளனர்.

காலஞ்சென்ற முன்னாள் சபாநாயகரின் மனைவி, உயிரிழந்த முன்னாள் அமைச்சர் ஒருவரின் மனைவி ஆகியோருக்கு தலா இரண்டு பாதுகாப்பு அதிகாரிகள் வழங்கப்பட்டுள்ளனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வங்கிக் கணக்கில் இருந்து பணத்தை எடுத்துள்ளார் எனக் குற்றம் சுமத்தப்பட்ட உதித் லொக்குபண்டாரவுக்கும் அமைச்சரவை பாதுகாப்பு பிரிவை சேர்ந்த இரண்டு அதிகாரிகள் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் பௌத்த நாயக்க தேரர்களின் பாதுகாப்புக்காக 38 பாதுகாப்பு அதிகாரிகள் வழங்கப்பட்டுள்ளனர். அரசாங்கம் பெரியளவில் நிதி ரீதியான கஷ்டங்களை எதிர்நோக்கி வரும் சூழ்நிலையில், பாதுகாப்பு சம்பந்தமாக பெரிய அச்சுறுத்தல்களை எதிர்நோக்காத நபர்களுக்கு அமைச்சரவை பாதுகாப்பு பிரிவின் பாதுகாப்பை வழங்குவது பாரியளவில் நிதியை வீண் விரயமாக்கும் அநீதியான செயல் என பொருளாதார நிபுணர்கள் அரசாங்கத்திற்கும், நிதியமைச்சருக்கு ஏற்கனவே தெரியப்படுத்தியுள்ளனர் எனப் பேசப்படுகிறது.



# தேசிய சேமிப்பு வங்கியில் திருமலையில் திடீர்த் தீ!

திருகோணமலையில் அமைந்துள்ள தேசிய சேமிப்பு வங்கியொன்றில் திடீரென தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று (சனிக்கிழமை) காலை 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது எனத் தீயணைப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில்தீஅனர்த்தம் ஏற்பட்டமைக்கான காரணம் தொடர்பான விரிவான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை தீப் பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் குறித்த தேசிய சேமிப்பு வங்கியின் அருகில் எரிபொருள் நிரப்பும் நிலையமொன்று உள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 273

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**693.தமிழ் மக்கள் ஒற்றுமையாகவோ கூட்டுறவாகவோ தமிழரது விமோசனங்களுக்காக இயங்க மாட்டார்களா?**

ஏன் இயங்கமாட்டார்கள்? நாட்டிலேயே மிகத் திறமையாகவும் இலாபகரமாகவும் நடத்தப்பட்டவை யாழ்ப்பாண கூட்டுறவுச் சங்கமும் (Jaffna Co - operative Society),



எம்.ஜி.ஆரும் இராஜதுரையும்

பரந்தன் கூட்டுறவு வங்கியும் ஆகும். போரின் முடிவில் யாழ்ப்பாண கூட்டுறவுச் சங்கத்தின் பணிமனை இருந்த இடத்தில் இப்போது புதிய மாடிக் கட்டடங்கள் அரசின் கொழும்பு வர்த்தகங்களால் இயங்குகின்றன. பரந்தன் கூட்டுறவு வங்கி சுவீகரிக்கப்பட்டு மக்கள் வங்கியுடன் இணைக்கப்பட்டது. இவற்றின் ஆளுநர்கள், அங்கத்தினரின் நன்மைகளுக்காகவும் இலாபங்களுக்காகவும் கூட்டுறவாகத் தீர்மானங்கள் எடுத்து அவற்றை வளர்த்தனர். அரசியலில் கூட, கட்சி நியமனங்களுக்காக – தேர்தல்களில் வெற்றிக்காக – ஒற்றுமையாகவும் கூட்டாகவும் இயங்கினார்கள். தமிழ் மக்கள் ஒன்றாகப் பொது நலம் பேசுவார்கள். ஆனால் அடிப்படையில் சுயநலவாதிகள். இந்த சுயநலப் போக்கும், அதில் எழும் வினைகளும், அகங்காரப் போக்குகளுமே அவர்களை இழுத்து விழுத்தியது. ஒருவரை நியமனத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்கும், அன்றில் நியமனம் தராமல் விடுவதற்கும், அரசியல் கட்சிகளிடையே பலத்த ஒற்றுமைகளும் கூட்டுறவுகளும் நடந்தன. இவற்றில் சுயநலங்கள் மிகுந்திருந்தனவேயொழிய தமிழர் விமோசனங்களோ அவற்றுக்காக அவர்கள் எடுக்க வேண்டிய சீரிய பாதைகளோ சிந்திக்கப் படவில்லை. உணர்ச்சிகள் ஆர்ப்பரிக்கப்பட்டன. உதாரணதிற்கு தந்தை செல்வாவிடம் தனது இளவயதிலிருந்தே அன்னியோன்யமான உறவைப் பேணி, தந்தை செல்வா மரணிக்கும் வரை அதைப் பாதுகாத்து, வடக்குக்கும் கிழக் குக்குமான இணைப்புப் பாலமாக இருந்து, அழகான, அடுக்கடுக்கான தமிழில் பேசவும் எழுதவும் தெரிந்தமையால் 'சொல்லின் செல்வர்' என்று கூட போற்றப் பட்டவர் இராஜதுரை. மட்டக்களப்பில் மேயராக இருந்து, பின் 1956 இல் தேர்தல் நின்று வெற்றிபெற்று, அடுத்தடுத்து வந்த எல்லாத் தேர்தல்களிலும் கூட அதை நிலைக்க வைத்தவர்.

தனது தமிழின் அறிவினால் தமிழகத்து தலைவர்களுடன் நெருங்கிய தொடர்புகளையும் – முக்கியமாக கவிஞர் கண்ண தாசனுடனும் எம்.ஜி.ஆருடனும் நெருக்க மான உறவுகளைப் பேணியவர். இளை ஞர்கள் ஆதிக்கம் செலுத்திய 1976 ஆம் ஆண்டு காலங்களில் தலைமை ஆளுமை போட்டிகளால் அமிர்தலிங்கத்துக்கும் இராஜதுரைக்கும் சில விரிசல்கள் ஏற்பட்ட சமயத்தில், காசி ஆனந்தனும் கிழக்கில் தனது உணர்ச்சிப் பேச்சுக்களால் இளைஞர்களிடையே அபிமானம் பெற்றார். 1977 ஆம் ஆண்டு தேர்தலில் இராஜதுரைக்கு நியனம் வழங்காமல் விட கட்சியின் இடையே கூட்டுறவுகள் ஏற்பட்டன. இவற்றின் பிடுங்கல்களில் பின் இராஜ துரை, காசி ஆனந்தன் இருவருக்குமே நியமனங்கள் வழங்கப்பட்டாலும், கட்சி மட்டத்தில் காசி ஆனந்தனே பராமரிக்கப் பட்டார்.

ஆனாலும் ஒப்புக்கு யாருக்கு ஆதரவாகவும் மற்றவரை எதிர்க்கக் கூடாது என்று கட்சி கட்டுப்பாடுகள் வைக்கப்பட்டன. அவற்றையும் மீறி பல இளைஞர் பேரவை உறுப்பினர்கள் பொதுக்கூட்டங்களிலே இராஜதுரைக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுக்கள் வைத்து பேசியவற்றில் ஒன்று அவர் கட்சி மாறுவார் என்பது. அதற்கு இராஜதுரை தனது கூட்டங்களில் 'நான் கட்சி மாறப் போகிறேன் என்று சிலர் பேசுகிறார்கள். எங்கள் கட்சிக்கு எதிரான மிராசுதாரர்களையும் மிட்டாதாரர்களையும் இனத்துரோகிகளையும் கிழக்கு மாகாணத்திலே மட்டக்களப்பு மாவட்டத்திலே உள்ள ஆலடிச் சோலை மயானத்திலே குழிதோண்டிப் புதைத்த நானா கட்சி மாறுவேன்? எனப் பதில் சொல்லப் பல வேதனைகள் தந்த பிரசாரங்களின் பின் இராஜதுரையே வெற்றி பெற்றார். காசி ஆனந்தனுக்கு வெற்றி கிட்டவில்லை.

**694.கண்ணதாசன் கூறியவை**

தேர்தல் வெற்றிக்குப் பிறகு இராஜதுரை கட்சி மாறினார். அந்தத் தீர்மானத்தை அவர் தமக்கு அன்னியோன்னியமாக இருந்த கவிஞர் கண்ணதாசனின் ஆலோசனையோடுதான் எடுத்தார். கண்ணதாசன் அதனை இந்த வரிகளில் சொல்கிறார்.

"தமிழரசுக் கட்சியிலிருந்து விலகுவதற்கு முன்னாலும் விலகிய பிறகும் என்னுடன்தான் அவர் ஆலோசனை நடத்தினார். தமிழரசுக் கட்சி தன்னைப் பயன்படுத்திக் கொண்டு பலமுறை அவருக்கு குழி பறிக்க முயன்றிருக்கிறது என்ற விவரத்தைச் சொன்னார் அவர்.



உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்



இராஜதுரையும் ஊடக ஜாம்பவான் எஸ்.டி.சிவநாயகமும்.

உதாரணத்திற்கு ஒரே மட்டக்களப்பு தொகுதியில் இவருக்கும் இன்னொருவருக்கும் கட்சி டிக்கெட்டைக் கொடுத்தது. அந்த இன்னொருவர் கவிஞர் காசி ஆனந்தன். ஆகக் கடைசியில் அதிகார பூர்வமாக காசி ஆனந்தனையே அறிவித்தது. ஆனால் அதையும் மீறி இராஜதுரை ஜெயித்தார்.

ஒரு தொகுதியில் இருபத்தைந்து வருகாலமாகத் தன் செல்வாக்கை ஒரே மாதிரி வைத்திருப்பவர் இராஜதுரை.

இலங்கைத் தமிழரசுக் கட்சி சிறிமாவோக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகள் நியாயமே. ஆனால் ஜெயவர்த்தனாவுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தி இருப்பது தவறு. இலங்கை அரசில் உத்தியோகம் பார்க்கும் தமிழர்கள் சிங்களமும் படித்திருக்க வேண்டும் என்ற சிறிமாவோவின் உத்தரவை ஜெயவர்த்தனா ரத்து செய்தார். பதினைந்து வருங்களாகப் 'பிரமோஷன்' இல்லாத தமிழர்களுக்கெல்லாம் பிரமோஷன் கொடுத்தார். இந்து கலாசாரத்தைக் காப்பாற்ற வேண்டிய உதவிகள் செய்கிறார். அவரோடு தமிழரசுக் கட்சி ஒத்துப் போவதுதான் நல்லது என்பது இராஜதுரையின் வாதம்." – என்றார் கண்ணதாசன்

தமிழ் மக்கள் நரியாக ஜே.ஆர். செய்தவற்றை எல்லாம் வரிக்கு வரி எழுதினார்கள். ஆனால் அந்த நரி அவற்றை இராஜதுரையையும் பக்கத்தில் வைத்தே செய்தது. அதனை பக்கம் தள்ளியது. தமிழ் மக்களது அரசியலே பின்னர் கருணா, பிள்ளையான் போன்ற வெளிப்படையான பிரிவுகள். அதேபோல் கடைசியாக நடந்து முடிந்த தேர்தலின் நியமன எம்.பி. பதவி யாருக்குத் தருவது,மாவைக்கா? ரவிராஜின் மனைவிக்கா? அல்லது வேறொருவருக்கா? எனக் கடைசியில் கலையரசனுக்கு கொடுக்கப்பட்ட விதம், அதன் சர்ச்சைகள் என ஒற்றுமையையும் கூட்டுறவையும் பற்றி பலவற்றைக் குறிப்பிடலாம்.

ஆனால் தமிழ் மக்களின் குணாதிசயங்களுக்காகவும் ஆணிகளும் குண்டூசிகளும் எவ்வாறு ஏற்றப்படுகின்றன என்பதற்காக சில சம்பவங்களையும், அவை ஒற்றுமைக்கோ கூட்டுறவுக்கோ வழிவிட்டன என்பதையும் பார்க்கலாம்.

(வளரும்)



சொல்லின் செல்வர் இராஜதுரை, படிக்காத மேதை காமராஜர், கவியரசர் கண்ணதாசன்.

# பிரபா கேட்டதும் சுமந்திரன் கேட்பதும் தமிழினத்தின் சுயநிர்ணய உரிமைதான்!

## அமைச்சர் சரத் வீரசேகரா இப்படிக் கூறுவது உண்மை என உறுதிப்படுத்துகிறார் சுமந்திரன்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,பெப்.06

**சுயநிர்ணய உரிமையை பிரபாகரன் கோரினார். அதனையே சுமந்திரனும் கோருகிறார் என அமைச்சர் சரத் வீரசேகரா கூறுவது உண்மைதான். ஏனெனில் அது தமிழ் மக்களிற்கான சர்வதேச உரிமையாகும் என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

**சுமந்திரனின் யாழ் இல்லத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

சுயநிரணய உரிமை என்பது மக்களின் அடிப்படை ஆத்ம மூச்சு. அதனை எப்படி உபயோகிப்பது என்பது எங்களது கையில்தான் இருக்கின்றது. தற்போது உள்ளக சுயநிர்ணய உரிமையை கேட்கும்போது அது மறுக்கப்பட்டால் வெளிப்புற சுயநிர்ணய உரிமையை கேட்கும் உரிமையும் உண்டு.

அதனால்வீரசேகர கூறுவதில் உண்மை இருக்கின்றது.

இதனை நாம்கோர முடியும் என உச்ச நீதிமன்றமே தீர்ப்பளித்துள்ளது. இவை எவற்றையும் அறியாத வீரசேகர இப்போதுதான் - அதாவது ஆரம்பத்தில் இருந்து நாம் சுயநிர்ணய உரிமையை கோருகிறோம். - என்கின்றார். அதனைத் தற்போதுதான அவர் புதியாகக் கண்டு பிடித்துள்ளார். அவ்வளவுதான்.

**மீனவர் போராட்டம்**

மீனவர் போராட்டத்திலே சுப்பர் மடத்தில் வீதியில் இறங்க வேண்டாம் என நீதிமன்றம் கட்டளையிட்டதனால் மீனவர்கள் கடலிலே இறங்கிப் போராடினர்.

அதாவது நீதித்துறையை மீனவர்கள் மதித்துள்ளனர். இனி நீதித்துறை மீனவர்களின் போராட்டத்தை மதித்து நடத்த வேண்டிய விடயமாக நாம் நீதிமன்றை நாடவுள்ளோம். இதற்காக மீனவர்கள் சார்பிலே நான் விரைவில் உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வேன்.

ஏனெனில் பொது மக்களில் அக்கறையிருப்பதாகக் காட்ட ஓடிச் சென்று தடை உத்தரவை பெற்ற அரச இயந்திரத்திற்கு, அந்த மீனவர்களிற்கான உத்தரவைப் பெற முடியவில்லை. - என்றார்.

# ஆபத்து இல்லை; அவதானம் தேவை

## சுகாதாரப் பிரிவு வலியுறுத்து

இலங்கையில் மீண்டும் ஒரு கொரோனாத் தொற்று அலை ஏற்படக்கூடிய அளவுக்கு கொரோனாத் தொற்றாளர்கள் மற்றும் மரணங்கள் பதிவாகவில்லை என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இருப்பினும், சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளைத் தொடர்ந்தும் பின்பற்றி கொரோனாத் தொற்று அலை ஏற்படாது பாதுகாத்துக் கொள்வது மிகவும் முக்கியமானது என்றும் அவர் மேலும் கூறினார்.

# மன்னாரிலும் மீனவர்கள் கண்டனப் போராட்டம்!



(மன்னார் நிருபர்)

இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய வருகையினால் இடம்பெற்ற அனர்த்தத்தின் போது யாழ் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன் உயிரிழந்த 2 மீனவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும், இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகையை கண்டித்தும் நேற்று மதியம் மன்னாரில் கண்டன போராட்டம் இடம் பெற்றுள்ளது.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில், மாவட்ட இணைப்பாளர் எ.பெனடிற் குரூஸ் தலைமையில் மன்னார் புதிய பஸ் நிலையத்திற்கு முன் குறித்த போராட்டம் அமைதியான முறையில் இடம் பெற்றது.

# அதிகாரிகள் இடம் மாற்றம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.06

வடக்கு மாகாணத்தில் இரண்டாம் நிலைச் செயலாளர்கள் மூவர் இரண்டாம் கட்டமாக இடமாற்றப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச்செயலாளராக பணியாற்றிய திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் தற்போது சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக பணியாற்றிய பிரணவநாதன் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக கல்விப் பணிப்பணிப்ளராகசும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேநேரம் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக கல்விப் பணிப்பணிப்ளராகப் பணியாற்றிய திருமதி தேவநந்தினி பாபு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச்செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# அரசியல் கைதிகள் விடயத்தில் அரசு ஏமாற்று நாடகமாடுகிறது

## செல்வராஜா கஜேந்திரன் எம்.பி. காட்டம்

(கலையமுதன்)

யாழ்ப்பாணம், பெப்.6

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் ஆரம்பிக்கும் நிலையில் அரசாங்கம் பல ஏமாற்று வேலைகளைச் செய்கிறது. இதனை உணர்ந்து அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யப் பண்ண சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த்தேசியமக்கள்முன்னணியின் யாழ் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் அரசியல் கைதிகள் 10 தொடக்கம் 20 வருடங்களுக்கு மேலாக சிறையில் வாடுகிறார்கள். இவர்களை விடுவிப்பதற்கு அரசாங்கத் தரப்பு எத்தகைய நடவடிக்கையும் எடுக்கவில்லை. அரசாங்கத்திற்கு சர்வதேச ரீதியில் வருகின்ற நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கு சர்வதேசத்தை ஏமாற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக இந்த பயங்கரவாத தடைச் சட்டமானது சர்வதேச நியமங்களுக்கு முரணான மோசமான சட்டம் என்பதை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உட்பட பல்வேறுபட்ட சர்வதேச சமூக அமைப்புகள், மனித உரிமைஅமைப்புகள. உணர்ந்துள்ளன. அதனால் இலங்கையின் பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பான பல்வேறுபட்ட விமர்சனங்களையும் குற்றச்சாட்டுக்களையும் அவை முன் வைத்துள்ளன.

நாங்களும் இது தொடர்பான குற்றச்சாட்டுகளை தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றோம். இத்தகைய நிலையில் அரசாங்கம் சர்வதேச சமூகத்துக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி தாங்கள் இதனை மாற்றி அமைப்போம் என்று தெரிவித்து உள்ளார்கள். ஆனால் இன்று வரை அந்த சட்டம் மாற்றி அமைக்கப்படவில்லை. எங்களுடைய நிலைப்பாடு இந்தச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்பதே. இந்தச் சட்டம் முழுமையாக நீக்கப்படும் போது அதன் கீழ் கைது



செய்யப்பட்ட அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும். அரசாங்கம் பயங்கரவாத சட்டத்தை மாற்றி அமைக்கிறோமெனக் கூறிக்கொண்டு பலவித ஏமாற்று வித்தைகளை செய்துவருகின்றது.

குறிப்பாக கடந்த ஒரு வருடத்தில் 16 அரசியல் கைதிகளை விடுவித்துள்ளார்கள். விடுவிக்கப்பட்டவர்கள் ஆறு மற்றும் எட்டு மாத காலப்பகுதிக்குள் தண்டனை முடிந்து விடுதலையாக வேண்டியவர் தான். மாறாக, நீண்டகாலமாக விசாரணைகள் எதுவுமின்றி தடுத்துவைக்கப் பட்டவர்கள் மற்றும் நீண்டகால கைதிகள் எவரும் விடுவிக்கப்படவில்லை.

புலிகளை மீளுருவாக்க முயற்சித்தார்கள், சமூக வலைத்தளங்களில் பிரபாகரனின் படத்தை காண்பித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் சுமார் 100 பேர் வரை கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களை ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடர்கள் நெருங்கி வருகின்ற வேளையில் விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துவிட்டு, அரசியல் கைதிகளை விடு வித்தமை போன்று போலியான முகத்தை காண்பிப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. சர்வதேச சமூகம் இத்தகைய நடவடிக்கைகள் தொடர்பில் முழுமையான கண் காணிப்பைச் செய்ய வேண்டும். சிறைச்சாலைகளில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், அங்கங்கவீனர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள் என பலதரப்பட்டவர்கள் உள்ள நிலையில் இவர்கள் உள ரீதியாக தாக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டும் வருகிறார்கள். அவர்களை விடுவிப்பதற்கும் - அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிப்பதற்கும் - சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார்.

# கொள்ளைக் கும்பலைச் சேர்ந்த மூவர் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது!



யாழ்ப்பாணம், பெப்.06

ஓட்டை உடைத்து வீடு புகுந்து வாளைக் காட்டி மிரட்டிக் கொள்ளையிடிக்கும் கும்பல் யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவிடம் சிக்கியது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 17ஆம் திகதி யாழ். புன்னாலைக்கட்டுவன் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் ஒரு வருடைய வீட்டில் இரவு வேளை வீட்டின் கூரை ஓட்டை உடைத்து உள்நுழைந்த கொள்ளை யர்கள் அங்கிருந்தவர்களைத்தாம் கொண்டு வந்த கூரிய வாளைக் காட்டி மிரட்டி மூன்றரைப் பவுண் நகையையும், சி.சி.ரி. வியையும் கொள்ளையடித்துச் சென்றனர். இது தொடர் பில் சுன்னாகம் பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. இதேவேளை, நல்லூர் சங்கிலியன் வீதியிலுள்ள வீட்டினுள் இரவு வேளை உள் நுழைந்த குறித்த சந்தேக நபர்கள் அங்கி ருந்தவர்களை மிரட்டி 3 பெறுமதி வாய்ந்த தொலைபேசிகளையும் ஒன்றரைப் பவுண் தங்க நகையையும் கொள்ளையடித்துச் சென்றனர். இது தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

மேலும், கல்வியங்காட்டுப் பகுதியிலுள்ள வியாபார நிலையத்துக்குள் நுழைந்த கொள்ளையர்கள் அங்கிருந்தவர்களை ஆயுதமுறையில் மிரட்டி பெறுமதி வாய்ந்த பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. எனினும், பொலிஸாருக்கு டிமிக்கி கொடுத்து தொடர் கொள்ளையில் ஈடுபடும் குறித்த குழுவினர் தொடர்பில் யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி நிகால் பிரான் சிஸ் தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டனர். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் பிரதான சந்தேக நபர்கள் இருவர் உட்பட மூவர் அதிரடியாகக் கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட வர்கள் யாழ். நல்லூர் பகுதியைச் சேர்ந்த 23, 23, 24 வயதுடையவர்கள் எனவும், இவர்களில் ஒருவருக்கு நீதிமன்றப் பிடியாணை உள்ளதுடன் மேலும் பல கொள்ளை வழக்குகளில் தேடப்பட்டு வந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பயணக் கட்டுப்பாடு விதிப்பு இனி இல்லை

## சன்ன ஜயசுமண தெரிவிப்பு



நாட்டைப் முடக்கவோ அல்லது பயணக் கட்டுப்பாடுகளை விதிக்கவோ இது வரை எந்த முடிவும் எட்டப்படவில்லை என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

அதிகரித்து வரும் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

தற்போதைய சூழ்நிலையில் காரணமாகக் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

இருப்பினும் சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைபிடிப்பதோடு பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டால் கொரோனாத் தொற்று சவாலை சமாளிக்க முடியும் என அவர் கூறினார்.

# வெளிநாட்டுத் துப்பாக்கிகளுடன் இருவர் வசமாக மாட்டினார்கள்!

இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினபுரி, எஹலியகொட ஆகிய பொலிஸ் பிரிவுகளில் வெளிநாட்டுத் துப்பாக்கிகள் இரண்டுடன் இருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

எஹலியகொட பொலிஸ் பிரிவு கொடகம்பொல பரக்கடுவ பிரதேசத்தில் இராஜகிரிய குற்றப் புலனாய்வுப் பிரிவி னருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்படும் துப்பாக்கி மற்றும் நான்கு தோட்டாக்களுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொடகம்பொல பிர தேசத்தை சேர்ந்த 44 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இதேவேளை, இரத்தினபுரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லெல்ல பிரதேசத்தில், இரத்தினபுரி குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றி வளைப்பின்போது வெளிநாட்டுத் துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கல்லெல்ல, இரத்தினபுரி பிரதேசத் தைச் சேர்ந்த 52 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்கிஸையில் 3 விடுதிகள் சுற்றிவளைப்பு

கொழும்பு, கல்கிஸை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இருவேறு பிரதேசங் களில் ஆயுர்வேத சிகிச்சை நிலையம் என்ற போர்வையில் இயங்கிவந்த மூன்று விபச்சார விடுதிகள் நேற்று சுற்றிவளைக்கப்பட்டுள்ளமையுடன் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விபச்சார விடுதிகளை நடத்தி வந்த மூவரும், அவற்றை நடத்துவதற்கு உடந்தையாக இருந்த ஐந்து பெண்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாகல, விஹாரஹேன, பாணந்துறை, போனுவிட்ட, கஹட்டகஸ் ஹந்திய, மடோல்சீம மற்றும் புவாக்பிட்டிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 22 முதல் 39 வரையான வயதுடையவர் களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# மீனவர் விடுதலையை வலியுறுத்தி இராமேஸ்வரத்திலும் போராட்டம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.06

இலங்கை அரசால் விடுதலை செய்யப்பட்ட 43 இராமேஸ்வரம் மீனவர்களை உடனடியாக தாயகம் திருப்பி அழைத்து வர வலியுறுத்தி சிறையில் உள்ள மீனவர்களின் உறவினர்கள் தமிழ்நாடு இராமேஸ்வரம் வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியுள்ளனர்.

2021ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற 43 மீனவர்களையும் அவர்களது 6 விசைப்படகுகளையும் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றத்திற்காக இலங்கை கடற்படையினர் கைது செய்து யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைத்தனர்.

இருப்பினும் கடந்த 25ஆம் திகதி இராமேஸ்வரம் மீனவர் 43 பேர் மற்றும் புதுகோட்டை மாவட்டம் ஜெகதாபட்டினம் மீனவர்கள் 12 பேர் என மொத்தமாக 55 மீனவர்களின் வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரணை செய்த நீதிபதி கஜநிதிபாலன் மீனவர்களை நிபந்தனைகளுடன் விடுதலை செய்து உத்தரவிட்டார்.

விடுதலை செய்யப்பட்ட இராமேஸ்வரம் மற்றும் ஜெகதீபட்டினம் மீனவர்கள் 55 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது.


அதில் 43 மீனவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதால் 43 மீனவர்களும் சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்டம் இயக்கச்சியில் உள்ள கொரோனா சிகிச்சை மையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டு இலங்கையில் தங்க வைக்கப்பட்டுள்ள மீனவர்களை உடனடியாக தாயகம் திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்யும்படி இந்த மீனவர்களின் உறவினர்கள் நேற்று இராமேஸ்வரம் வட்டாச்சியார் அலுவலகத்தை முற்றுகையிட்டு காத்திருப்புப் போராட்டம் நடத்தினர்.

இதன்போது வட்டாச்சியர், இராமேஸ்வரம் மீன்வளத்துறை அதிகாரகள் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடத்தில் பேச்சு நடத்தி எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் இலங்கையில் உள்ள மீனவர்கள் தாயகம் திருப்பி அனுப்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தனர்.

இதனையடுத்து, திங்கட்கிழமை மீனவர்கள் தாயகம் திரும்பி வராவிட்டால் திங்கட்கிழமை முதல் தொடர்ந்து முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறிக் கலைந்து சென்றனர்.

# மரண அறிவித்தல்



## அமரர் மேலுப்பிள்ளை விமலசிங்கம் JP

(ஓய்வுபெற்ற கொமர்ஷல் வங்கி லிகிதர், மொழி பெயர்ப்பாளர்)

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் மாவடி ஆலய வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை விமலசிங்கம் அவர்கள் (05.02.2022) சனிக்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கம்மா ஆகியோரின் அன்பு மகனும், கந்தையா - நேசரத்தினம் ஆகியோரின் மருமகனும், அமரர் சந்திரோதயத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அமரசிங்கம், ஜெயபாஸ்கரசிங்கம், மகேஸ்வரி மற்றும் மயில்வாகம், ஜெயசூரியசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மதியூகன் (முகாமையாளர், கொமர்ஷல் வங்கி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) தனயூகன் (பணியாளர், J Guest விருந்தினர் விடுதி), பிரணவயூகன் (உரிமையாளர், ஒரு சோறு உணவகம்), இராகவன் (விரிவுரையாளர், இசைத்துறை யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மதியூகன் அனித்தா (முகாமையாளர், கொமர்ஷல் வங்கி, கொடிகாமம்), பிரணவயூகன் சிவப்பிரியா (ஆசிரியை, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி), இராகவன் ஜெயபாமினி (ஆசிரியை, யா/வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை) ஆகியோரின் மாமனாரும், கவிநயா, நிகஷிகா, சிவானிகா, ஜினேஷ், சப்தஹன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் 02.00 மணி அளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிரணவயூகன் 0779919502
இராகவன் 0775141127

தகவல்:
குடும்பத்தினர்.